ரகலாவிலாஸினீ மலர் 14.

ஸ்ரீ வேதவ்யாஸாயநம:

# ஸ்ரீ கூர்ம புராணம்

ஆசிரியர்

ஸ்ரீ சங்கரோபதேச ரத்நம், பாத்ம புராணம்
மார்க்கண்டேய புராணம், வாமந புராணம்,
ப்ரஹ்ம வைவர்த்த புராணம் முதலிய
நூலாசிரியரான ஸாஹித்ய வாங்
முகபூஷணம் மஹாமஹோப
தேசக தர்மஸேவா
துரந்தர

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவ சர்மா
அவர்கள்

TANJORE
942

ஸ்ரீ அமரகலாவிலாஸினீ ஸபை
154, தம்புசெட்டி வீதி,
சென்னை.
1934

பதிவு செய்யப்பட்டது.

விலை அணா 6

# அவதாரிகை.

ஸ்ரீவைகுண்டநாதன் கூர்மாவதாரம் செய்தபோது இந்த த்யும்நனென்ற பக்தருக்கு உபதேசிக்கப்பட்டது; ஆதலின் இ கூர்மபுராணமெனப்படுகிறது. புராண க்ரமத்தில் இது பதினை தாவதாகும். இது மிகச் சிறிய நூல். இதில் 5246 ச்லோக களே இருக்கின்றன. இதில் பூர்வார்த்தம் உத்தரார்த்தம் என இ பிரிவுகளும், ப்ராஹ்மி, பாகவதீ, ஸௌரீ, வைஷ்ணவீ என நான்கு ஸம்ஹிதைகளும் காணப்படுகின்றன. இப்புராணத்தை ஸ்வர்ண கூர்மத்துடன் தானம் செய்வோர் உயர்கதி பெறுவரென நாரத புராணங்கூறுகிறது. ச்ராத்தத்திலும் யாகத்திலும் இதைப்படிக்க வேண்டும். இதைக் கேட்பவரது பாபம் அனைத்தும் அகலும். மோக்ஷத்தை விரும்புவோர் இதை அவச்யம் பாராயணம் செய்ய வேண்டுமென்று இந்நூல் கூறுகிறது.

ஈச்வரகீதை வ்யாஸகீதைகள் மூலமாக ப்ரவ்ருத்தி தர்மம் நிவ்ருத்தி தர்மம் ஆந்ஹிக தர்மம் ஸதாசாரம் ச்ராத்த தர்மம் முதலிய அரியபெரிய ஸகல தர்மங்களும் விசதமாக வர்ணிக்கப்படுகின்றன. ஏனைய புராணங்களில் கூறப்பட்ட ஸ்ருஷ்டி லயம் ராஜவம்சம், மந்வந்தரம், தீர்த்தமஹிமை முதலியன மிகச் சுருக்கமாக இருப்பதுடன் ஸ்ரீ பார்வதீதேவி ஹிமவானுக்கு விச்வரூபதர்சநம் தந்ததும் பர்வதராஜன் ஓர் அம்பிகா ஸஹஸ்ரநாமங் கூறியதும் அந்தகாஸுரன் பஞ்சசாமர விருத்தத்தில் சிவபிரானைத் துதிப்பதும் விசேஷமாகும். இதில் சிவபாரம்யமே சிறந்து விளங்குகிறது. இவ்வொரு நூலை நன்கு கற்றுணர்ந்தால் ஸகல வேத வேதாந்தங்களையும் உணர்ந்ததாகும்.

இதை மிகச் சுருக்கமாகவும் ஸுலபமாகவும் படிக்க ரஸமாகவுமிருக்கும்படி சிற்றறிவிற்கேற்க எழுதினேன். இது பூர்ணமான மொழிபெயர்ப்பல்ல ஆயினும் ஓர் அத்யாயமல்லது விஷயத்தைக் கைவிடாமல் ஸாரத்தை எழுதியதாக எண்ணுகிறேன்: இவ்வரிய தொண்டில் என்னைத் தூண்டிய ஸ்ரீகைலாஸநாதனின் திவ்யாவதாரமாகிய ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கர பகவத் பாதாளின் கடாக்ஷம் ஆஸ்திகரிதை ஆதரிக்கும்படியும் இதேபோல் ஏனைய புராணச் சுருக்கங்களையும் விரைவில் வெளியிடும்படியும் அருள் புரியுமென நம்புகிறேன்.

குற்றத்தை அகற்றி குணத்தைக் கொள்ளும் பெரியார் அடிபணியும்,

ஸ்ரீவத்ஸ. வெ. ஸோமதேவசர்மா.

# ஸ்ரீ கூர்மபுராண விஷய ஸூசிகை.

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | புராணவரலாறு ... | 1 |
| 2. | வர்ணாச்ரமதர்மம் ... | 2 |
| 3. | பிரும்மருத்ரஸ்ருஷ்டி ... | 3 |
| 4. | ஹரிஹர அபேதம் ... | 5 |
| 5. | ப்ரஹ்லாதன் பக்தனானது ... | 7 |
| 6. | அந்தகாசுரன் சிவபுத்ரனானது ... | 9 |
| 7. | ஸுமநஸ் சரிதம் ... | 11 |
| 8. | ஜயத்வஜ சரிதம் ... | 12 |
| 9. | துர்ஜய சரிதம் ... | 14 |
| 10. | க்ருஷ்ணன் சிவனருளால் புத்ரனை அடைந்தது | 17. |
| 11. | சிவன் லிங்கமானது ... | 19 |
| 12. | அர்ஜுநனுக்கு வியாஸர் உபதேசம் ... | 20 |
| 13. | காசியின் மாஹாத்ம்யம் ... | 21 |
| 14. | சங்கு கர்ண சரிதம் ... | 22 |
| 15. | வியாஸர் காசியை விட்டது ... | 24 |
| 16. | ப்ரயாகை மாஹாத்ம்யம் ... | 24 |
| 17. | புவநமண்டலம் ... | 26 |
| 18. | மேருமலை ... | 27 |
| 19. | ஜம்பூத்வீபத்தில் தேவாலயம் ... | 29 |
| 20. | வேதவியாஸ அவதாரங்கள் ... | 29 |
| 21. | சிவாவதாரங்கள் ... | 30 |
| 22. | உத்தரார்த்தம் ஈச்வரகீதை ... | 31 |
| 23. | ஆத்மஸ்வரூபம் ... | 33 |
| 24. | சிவமாஹாத்ம்யம் ... | 35 |
| 25. | பிரும்மயோகம் ... | 36 |
| 26. | ப்ராணாயாமம் ... | 37 |

| | | | |
|---|---|---|---|
| 27. | பக்தியும் ஸாதநமும் | ... | 39 |
| 28. | வ்யாஸ கீதை | ... | 41 |
| 29. | ஆசமநம் | ... | 44 |
| 30. | சிஷ்ய தர்மம் | ... | 47 |
| 31. | காயத்ரீ | ... | 49 |
| 32. | வேதாத்யயநம் | ... | 49 |
| 33. | கிருஹஸ்த தர்மம் | ... | 50 |
| 34. | ச்ராத்தம் | ... | 62 |
| 35. | ச்ராத்த அர்ஹமானவர் | ... | 63 |
| 36. | ச்ராத்த அநர்ஹர்கள் | ... | 64 |
| 37. | ஆசௌசம் | ... | 68 |
| 38. | தாநம் | ... | 71 |
| 39. | காம்ய பூஜை | ... | 72 |
| 40. | வாநப்ரஸ்த தர்மம் | ... | 74 |
| 41. | யதி தர்மம் | ... | 76 |
| 42. | ப்ராயச் சித்தம் | ... | 78 |
| 43. | கபால மோசந தீர்த்தம் | ... | 79 |
| 44. | பெண்களுக்கு ப்ராயசித்தம் | ... | 83 |
| 45. | தீர்த்த மஹிமை மங்கண சரிதம் | ... | 84 |
| 46. | ச்வேதராஜசரிதம் | ... | 85 |
| 47. | புண்ணியவநங்களும் தீர்த்தங்களும் | ... | 86 |
| 48. | தாருகாவந ரிஷிகள் | ... | 87 |
| 49. | நந்தி சரிதம் | ... | 89 |
| 50. | புராணபலன். | .... | 91 |

ஓம் நமோ நாராயணாய

# ஸ்ரீ கூர்ம புராணம்

## பூர்வார்த்தம்

நைமிசாரண்யத்தில் வஸிக்கும் மஹர்ஷிகள் ஒரு ஸமயம் ஓர் யாகத்தைச் செய்து முடித்தனர். அச்சமயம் தற்செயலாக அங்கு வந்த ஸூதரை வரவேற்று ஸ்ரீ கூர்ம புராணத்தைக் கூறும்படி வேண்டினார்கள். அவர் தன் குருவான வேதவியாஸரை வணங்கிக் கூறினார். தேவரும் அஸுரரும் அமிருதத்தை நாடிப் பாற்கடலைக் கடைந்தனர். மத்தாக அமர்ந்த மந்தரமலை கடலுக்குள்ளே மூழ்கிற்று. பகவான் கூர்மாவதாரம் செய்து அம்மலையைத்தன் முதுகில் தாங்கினார். பின்னர் அமிருதமும் மற்றும் பல அரிய பொருள்களும் தோன்றின. அதனிடையே மஹாலக்ஷ்மீ தோன்றி பகவானிடம் வந்து லயமானாள். அவளுக்கே மாயை என்று பெயர். அவளை அவலம்பித்தே அச்யுதன் அகில உலகையும் படைத்துப் பரிபாலித்து வருகிறார். இந்த்ரத்யும்நன் எனும் அரசன் ஒரு ஸமயம் பகவானைப் போற்றி நற்கதி அளிக்கும்படி வேண்டினான். அவர் அரசனைப் பார்த்து, நீ மறுபிறப்பில் லக்ஷ்மிதேவியைத் தர்சித்த பின் உனக்கு நற்கதி உண்டாகுமென்றார். அங்ஙனமே அரசன் மறுபிறப்பில் இந்த்ரத்யும்நன் எனும் அந்தணனாகப் பிறந்து தேவியை உபாஸித்தான். அவள் இந்த்ரத்யும்நனுக்குத் தர்சநமளித்து மஹாவிஷ்ணுவினிடம் தத்வோபதேசம் பெறும்படிக் கூறி மறைந்தாள். பகவான் அவ்

விந்த்ரத்யும்நருக்குப் பல உபதேசங்களைச் செய்தார். தங்களுக்கு அதைக் கூறும்படி தேவர்கள் வேண்ட, கூர்மா வதாரம் செய்த பகவான், இந்த்ராதி தேவர்களுக்குபதேசித் தார். ஆதலால் இதற்குக் கூர்மபுராணம் எனப் பெயர் வழங்கிற்று என்று ஸூதர் கூறினர். ஆதிகூர்மர் தேவர் களுக்குபதேசித்ததாவது :—

## *வர்ணாச்ரமதர்மம்.

தேவர்காள்! ஓர் ப்ரளயத்திற்குப் பிறகு முன் போலவே உலகைப் படைக்கவேண்டுமென்று யான் விரும்பினேன். எனது அனுக்ரஹத்தால் பிரும்மனும் கோபத்தால் ருத்ரனும் உண்டானார்கள். என்னருகே உள்ள மாயாதேவியை, ஸகல பிராணிகளையும் மயக்கித்தனது ஸ்ருஷ்டி கார்யத்திற்குச் சஹாயம்செய்யும்படி அருள்புரியவேண்டுமென்று பிரும்மா என்னிடம் வேண்டினர். யான் வர்ணாச்ரம தர்மத்தை நன்கு அனுஷ்டித்து இந்திரியங்களை ஜயித்த ஸாதுக்க ளிடம் செல்லாமல் பாபிகளை மயக்கும்படி மாயைக்குக் கட்டளையிட்டேன். பிராமண க்ஷத்ரிய வைச்ய சூத்ரர் என்பது நான்கு வர்ணங்களாகும். பிரம்மசர்யம், கார்ஹஸ்த்யம் வாநப் ரஸ்தம் ஸன்யாஸமென்பன ஆச்ரமமாம். பிராமணனுக்குப் பிரவிருத்தி நிவிருத்தி என இரண்டுதர்மங்களுள. நிவிருத்தி யைத் தழுவியவன் ஸன்யாஸாச்ரமத்தைக் கைகொண்டு பரமபதமடைவான். பிரவிருத்தி மார்க்கத்தைத் தழுவியவன் பிரும்மலோகஞ் செல்வான். ஸ்வதர்மத்தைக் கைகொண்ட க்ஷத்ரியன் இந்த்ரலோகத்தையும் வைச்யன் வாயுலோகத்தை யும்சூத்ரன் கந்தர்வலோகத்யையுமடைவார்கள். உபகுர்வாணன் நைஷ்டிகன் என பிரும்மசர்யத்தில் இருவகை உண்டு. உப

*நாம் எழுதிய பாத்மம், வைவர்த்தம், வாமநம், மார்க்கண்டேயம் இப்புராணங்களில் விரிவைக்காண்க.

குர்வாணன் கல்வி முடிந்தவுடன் வீடு செல்பவன். நைஷ்டிகன் சாகும்வரை குருகுலத்திலேயே இருப்பவன். ஸாதகன் உதாஸீனன் என இருவகை கிருஹஸ்தர்களுண்டு. குடும்பபாரணத்திலீடுபட்டவன் ஸாதகன். ரிஷிதேவபித்ரு என்ற முக்கடன்களையுமகற்றிக் குடும்பத்திலிருந்தே பற்றுதலில்லாம லிருப்பவன் உதாஸீநனாவான். வநஞ்சென்று வேதமோதல் வேள்விசெய்தல் முதலிய தர்மங்களை அவலம்பித்தவன் வாநப்ரஸ்தன். ஸன்யாஸதர்மத்தைக் கைகொண்டவன் ஸன்யாஸியாவான். ஸன்யாஸத்திலும் ஞானஸன்யாஸி வேதஸன்யாஸி கர்மஸன்யாஸி என அவ்வவைப்ரதானமாகக் கொண்ட மூவ்வகை ஸன்யாஸம் உண்டு. உயர்ந்த ஆச்ரமத்தை ஏற்று மேலே ஏறியவர் மறுபடியும் தாழ்ந்த ஆச்ரமத்தை ஏற்று கீழே இறங்கலாகாது. அப்படி இறங்குபவர் நரகம் செல்வர்.

## பிரும்ம ருத்ர ஸ்ருஷ்டி

விராட் புருஷனான என்னிடமிருந்தே ஸகல ஜகத்தும் தோன்றின. எல்லாவற்றிற்கும் முதன்மையாக எனது நாபியிலிருந்து நூறு யோஜனைதூரம் விஸ்தாரமாயுள்ள ஓர்தாமரை மலர் உண்டானது. எனது ப்ரஸாதத்தாலுண்டான பிரும்மா என்னுடைய மாயையால் மயங்கி என்னருகேவந்து நீயார்? என்று என்னைக்கேட்டார். நான் நாராயணன். நானே உலகமாயிருப்பவன். எனது உடலிலே நீ எல்லா ஜகத்தையுங் காணலாமென்று கூறி, நீ யார் என்று பிரும்மனைக்கேட்டேன். அவர் கர்வத்தால் தானே உலக கர்த்தா வென்றும் தனக்குள் எல்லாவற்றையும் காணலாமென்றும் கூறினர். அவர் உத்தரவு பெற்று அவரது உடலிலேபுகுந்து மூவ்வுலகை மாத்திரம் நானங்கு கண்டேன். பிறகு அவரை அழைத்து என்னுடலில் புகுந்து பார்க்கும்படிக் கூறினேன்.

அவர் என் உள்ளே சென்று பதினுன்கு லோகங்களேயுங் கண்டார். உள்ளிருந்து வெளியே வர வழி தெரியாமல் தவித் தார். எனது அருளால் என் நாபிக்கமலத்தின் வழியாக வெளி வந்தார். அப்பொழுதுதான் அவருக்கு எனது நிஜஸ்வரூ பம் விளங்கிற்று. ஆதலாலவர் என்னேத்துதித்து நாங்களிரு வரும் ஒரே மூர்த்தி என்றும் எங்களேவிடச் சிறந்ததேவர் வேறில்லே என்றும் கூறினர். அதைக்கேட்டு யான் நமக்கு மேல் மஹேச்வரன் ஒருவன் இருக்கிருர். அவரைச்சரண மடைவோமென்றேன். இதற்குள்ளாகக் கருணு மூர்த்தியான முக்கண்ணன் எங்கள் முன்னே தோன்றினர். அவரது ஒளியால் பிரும்மாவின் கண்மழுங்கிற்று. அவருக்கு யான் திவ்ய சக்ஷுஸ்ஸை அளித்துப் பரமசிவத்தைப் பணியும் படிக் கூறினேன். அவர் சிவனே வணங்கிப் போற்றியவுடன் பரமசிவன் உனக்கு யாதுவரம் வேண்டுமென்று கேட்டார். பிரும்மா சிவனே தனக்கு மகனுக வேண்டுமென்ருர். அங் ஙனமே ஆகுக என்று கூறி பரமசிவன் என்னேத் தழுவி விடைபெற்றுச் சென்ருர்.

பிறகு ஒருஸமயம் எனது காது அழுக்கிலிருந்து பிறந்த மதுகைடபர்களெனும் இருஅரக்கர்கள் பிரும்மாவைப் பீடித் தார்கள். அவர் பயந்து என்னேச் சரணமடைந்தார். நான் விஷ்ணுஜிஷ்ணு என வேறு இருபுருஷர்களேப் படைத்து அசுரர்களேக் கொல்லச் சொன்னேன். விஷ்ணு மதுவையும் ஜிஷ்ணு கைடபனேயும் கொன்ருர்கள். அஸுரபயமகன்றது. எவ்வளவு நேரம் உன்னேச்சுமப்பேன். தாமரையிலிருந்து கீழே இறங்கென்று பிரும்மாவைக் கூறினேன். அவர் அங் ஙனமே இறங்கி என்னிடம் லயமானர். அவருக்கு வேண்டிய சக்தியை அளித்து உலகைப் படைக்கும்படி அவரை வெளியி லனுப்பினேன்.

பிரும்மா ஸநகாதி முனிவர்களைப் படைத்தார். அவர்கள் உலகவாழ்க்கையில் வெறுப்புகொண்டு பரமனது பாதார விந்தத்தை நாடித் தவம்செய்யக் கிளம்பினார்கள். இதைக் கண்டு பிரும்மா மூர்ச்சையடைந்தார். யான் அவரருகே சென்று நீர் பரமசிவத்தைப் புதல்வனாக வரித்தபடி யால் அவரது அம்சம் உனது மனதிலிருந்து நாலு புதல்வர் களாகக் கிளம்பிற்றென்றேன். மூர்ச்சை தெளிந்தெழுந்த பிரும்மா ஜகத்தைப்படைக்க கடுந்தவம் புரிந்தார். அத்தவம் விரைவில் பயனளிக்காமல் போகவே அவருக்குக் கோபம் உதித்தது. அதனால் அவர் கண்களிலிருந்து கண்ணீர் சிந்திற்று. அதிலிருந்து எண்ணிறந்த பூதப்ரேத பிசாசங்கள் தோன்றின. அதைக்கண்டு வருந்தி பிரும்மா பிராணனை விட்டார். அந்த பிராணனிலிருந்து ருத்ரன் தோன்றி பிரும் மனது செயலை நினைத்து அழுதார். உடனே பிரும்மா உயிர்பெற்று ஜோதிஸ்வரூபமாய் விளங்கும் சிவத்தை ரோதநம் செய்ததால் ருத்ரர் என்றழைத்தார். அன்றியும் அவருக்கு எட்டு நாமங்களை அளித்து எட்டிடங்களையுங் கொடுத்தார். அந்த பரமசிவனே பல காலந் தவம் செய்து பாதி உடல் பெண்ணாகவும் பாதி புருஷனாகவும் ஆனார். அதனால் அவருக்கு அர்த்தநாரீசர் என்று காரணப்பெயர் உண்டாயிற்று. அந்த தேவியே ஸதீ, தாக்ஷாயணீ, பார்வதி என்று பல பெயர்களா லழைக்கப்படுகிறாள். சிவா, உமா முதலிய ஆயிரம் நாமங்களவளுக்குண்டு. பார்வதியாகத் தோன்றினபொழுது ஹிமவானுக்குத் தேவி விச்வரூப மளித்துத் தன் ஆயிரம் நாமாவுடன் விபூதியையும் கூறி னாள். இங்கு அம்பாள் ஸஹஸ்ர நாமங் கூறப்பட்டுள்ளது அந்த தேவியின் ஸஹஸ்ர நாமத்தைத் தினந்தோறும் ஜபித் தால் மஹாமாரி சாந்தமாவாள். லக்ஷ்மீகடாக்ஷ முண்டாகும். ஹரிஹராபேதம். பார்வதீ தேவி தாக்ஷாயணியாக இருந்த

போது அவள் தந்தையான தக்ஷன் பரமசிவனிடத்தில் வெறுப்புகொண்டு தன் வீட்டிற்கு வந்த தேவியை நிந்தித்தான். உடனே தாக்ஷாயணி பரமசிவத்தினிடஞ்சென்று தன் தந்தை சிவத்வேஷங் கொண்டு விரைவில் சிவனை விட்டு ஓர் யாகஞ் செய்யப்போகிருர்; ஆதலால் அந்த யாகத்தை அழிப்பதுடன் அவன் ஸம்பந்தமுள்ள இந்த உடலைவிட்டு வேறு உடல் பெற உத்தரவளிக்க வேண்டுமென்ருள். சில நாட் சென்ற பிறகு தக்ஷன் அங்ஙனமே ஓர் யாகத்தைத் துவக்கினுன். அதில் பரமசிவனுக்கு அவிர்ப்பாகமில்லை என்றவுடன் மஹர்ஷிகள் அந்த யாகத்திற்குவர மறுத்தனர். தக்ஷன் முனிவர்களைப் பார்த்து கபாலியாய் சூலபாணியாயுள்ள இவரல்ல ருத்ரமூர்த்தி. வேதரூபமாய் ஸூர்யமண்டலத்தினுள்ளே நிலக்கிரீவருய் விளங்குபவர் வேருெரு சிவனிருக்கிருர். அந்த வேதமூர்த்திக்கு என் யாகத்தில் அவிர்ப்பாகமளிப்பேன் என்ருர். இதைக்கேட்டு ஏமாந்து எல்லா ரிஷிகளும் தேவர்களும் யாகத்திற்கு வந்தனர். சிவனை அங்குகாணுமல் போகவே ததீசி எனும் முனிவர் ஈச்வரனின் அஷ்டமூர்த்திகளில் ஓர்உடலானசூர்யனையே ருத்ரன என்று ஏமாற்றும் தக்ஷனையும் அவனுக்கு ஸஹாயம்செய்த பிராமணர்களையும் வேதத்வேஷிகளாகப் பிறக்கும்படிச் சபித்து விட்டுச் சென்ருர். பிரும்மாவும் சிவனில்லாத யாகம் யாகமல்ல என்று கூறி மறைந்தார். மற்றதேவர்களைக்கொண்டு தக்ஷன் யாகத்தைத் துவக்கினுன். அம்பிகையின் விருப்பப்படி பகவான் வீரபத்ரனைப் படைத்தங்கனுப்பினுர். அவர் ஆயிரந்தலையுடன் ஆயிரங் கைகளில் சங்கு சக்ரம் முதலிய ஆயுதங்களை ஏந்தி தக்ஷனுடைய யாகசாலைக்குச் சென்ருர். அவருக்கேற்ற மனைவி அம்பிகையின் கோபத்திலிருந்து தோன்றி அவரைப் பின் தொடர்ந்தாள். வீரபத்ரன் தக்ஷனை நோக்கி சிவத்திற்குரிய பங்கை அளிக்கும்படிக் கேட்டார். தக்ஷன் அதைக்

கொடாததுடன் சிவநிந்தை செய்தான். ஆதலால் கோபங் கொண்ட வீரபத்ரன் தேவர்களைச் சிக்ஷித்தார். அவரது பரிவாரம் முனிவர்களைக் கொன்றது. வீரபத்ரன் என்னுடன் கடுமையாக யுத்தஞ் செய்யும்பொழுது பிரும்மா அங்கு வந்து எங்கள் இருவரையும் ஸமாதாநம் செய்து தக்ஷனை அழைத்துச் சிவனைத்துதிக்கும்படிக் கூறினார். அங்ஙனமே தக்ஷன் தனது குற்றத்தை மன்னித்து அருளும்படி வேண்ட உமையுடன் உமாபதி யாகசாலைக்கு வந்து தக்ஷனை மன்னித்துத் தனதுகணத்தில் ஒருவனாகச் சேர்த்துக்கொண்டார். அச்சமயம் மஹாவிஷ்ணுவாகிய யான் பரமசிவத்தைத் தழுவி தேவர் முன்னிலையில் நானும் சிவனும் ஒன்றே. இருவரையும் ஒன்றாக நினைத்து இஷ்டமான மூர்த்தியைப் பூஜிப்பவனே உண்மையான பக்தனாவான். இருவரில் ஒருவரை நிந்தித்து ஒருவரை பூஜிப்பவர் பூஜையின் பயனைப் பெறமாட்டார். தக்ஷயாகத்தில் ததீசி அளித்தசாபத்தால் கலியில் சிலர் என்னையோ சிவனையோ நிந்திப்பார். அவர்கள் நாகஞ் செல்வார்களேயின்றி சுகத்தை அடையமாட்டார் என்றேன்.

ப்ரஹ்லாதன் பக்தனானது. வஸுக்களின் ஸ்ருஷ்டியைக் கூறி தக்ஷவம்சத்தை வர்ணிக்கும்போது பகவான் ப்ரஹ்லாத சரிதத்தைக் கூறினார். வைவஸ்வத மன் வந்தரத்தில் கச்யபரது மனைவியான திதிஎன்பவளுக்கு ஹிரண்யாக்ஷன் ஹிரண்ய கசிபு என்றிருதுஷ்ட புத்ரர்களுண்டானார்கள். அவர்கள் பிரும்மாவினிடம் எண்ணிறந்த வரங்களைப் பெற்று ஸாதுக் களை ஹிம்ஸித்து வந்தனர். தேவர்களுடன் பிரும்மா வைகுண்டம் வந்து என்னை வணங்கி துஷ்டர்களைச் சிக்ஷிக்கும்படி வேண்டினார். நான் என்னைப்போல் ஒரு விஷ்ணுவைப் படைத்து ஹிரண்யகசிபுவைக்கொன்று வரும்படி அனுப்பினேன். தேவஸேனையுடன் அவர் கருடன் மீது வருவதைக் கண்ட அஸுரன் ப்ரஹ்லாதன் முதலிய நாலு புதல்வர்களை

அவருடன் சண்டைக்கு அனுப்பினர். புதிய பகவான் அவர்களை மூர்ச்சையாகும்படி அடித்தார். இதைக்கேட்ட ஹிரண்யகசிபுதானே நேரில் வந்து அவருடன் போர் செய்து கருடனை மூர்ச்சிக்கும்படிச் செய்தான். இதைக்கண்டு பகவான் என்னருகே வர யான் அவன் கேட்டிருந்த மிருகத்தினுலும் மநுஷ்யனுலும் சாவில்லை என்ற வரத்திற்கேற்க பாதிஉடல் மனிதனுகவும் பாதி ஸிம்மமாகவும் உருவெடுத்து சண்டைக்குச் சென்றேன். என்னைக்கண்டவுடன் அஸுரன் என்னுடன் போர்புரிய ப்ரஹ்லாதனை அனுப்பினன். தந்தையின் உத்தரவுபடி ப்ரஹ்லாதன் பற்பல ஆயுதங்களைப் ப்ரயோகித்து நரஸிம்ஹவேடம் பூண்ட என்னேடு யுத்தம் செய்தான். அவனது அஸ்த்ராங்களெல்லாம் என்னிடம் பயனற்றுப் போயின. ப்ரஹ்லாதன் பாசுபதாஸ்த்ரத்தை எடுத்து என் மேல்விட அதுவும் வீணனது. அதைக்கண்டு ப்ரஹ்லாதன் என்னை விஷ்ணு என்றுணர்ந்தான். போரை நிறுத்தி எனது திருவடியை வணங்கிப் பூஜிக்கும்டி தந்தையையும் ஸஹோதரர்களையும் வேண்டினன். அவர்கள் அதைக்கேளாது போரிட ஹிரண்யகசிபுவை யான் கொன்றேன். எனது சரீரத்திலிருந்து தோன்றிய பல நரஸிம்மங்கள் அஸுரஸேனையைக் கொன்றன. ப்ரஹ்லாதனது துதியைக் கேட்டு மகிழ்ந்து அவனை ஆசீர்வதித்து யான் சென்றபிறகு ப்ரஹலாதன் தனது சிறியதந்தையான ஹிரண்யாக்ஷனுக்குப் பட்டாபிஷேகம் செய்தான். அவன் தனது புதல்வனுன அந்தகாஸுரனுடன் கூடி ஸாதுக்களை ஹிம்ஸித்து பூமியைப் பாதாளத்திற்கெடுத்துச் சென்றுன், தேவர்கள் கோரியபடி வராஹாவதாரம் செய்து அவனைக் கொன்று பூமியை மீட்டுவந்தேன்.

ப்ரஹ்லாதன் பட்டாபிஷேகம் செய்து கொண்டு உலகை ஆளும்போது தேவர்கள் அவனது ஸாத்விககுணத்

னதைக்கண்டு பொறுமை கொண்டார்கள். ப்ரஹலாதனருகே ஓர் பிராமணன் வந்தபோது அவரை வரவேற்றுப் பூஜிக்கா மலிருக்கும்படி அவன் புத்தியை மயக்கி விட்டார்கள். ஆத லால் கோபங்கொண்ட பிராமணன் ப்ரஹ்லாதனுக்கு விஷ்ணு பக்தியில்லாதிருக்கும்படிச் சபித்தார். ஆதலாலவன் பிராமணர் களையும் தேவர்களையும் ஹிம்ஸிக்க ஆரம்பித்தான். யான் அவனுடன் போர்செய்து அவனைத் தோல்வி அடையும்படிச் செய்தேன். பின்னர் அவன் தேவமாயை அகன்றது. முன் போலவே அவன் பரமபக்தனானன்.

அந்தகாஸுரன் சிவ புத்ரனானது. ஒருஸமயம் பனி ரண்டுவருஷம் பாரினில் மழையில்லாமல் பஞ்ச முண்டாயிற்று. ஆஹாரத்திற்கு வழியில்லாமல் தவஸிகள் கௌதமமுனிசிவனை உபாஸித்து தனதாச்ரமம் செழித்திருக்கும்படிச் செய்தா ரெனக்கேட்டு அங்கு சென்றனர். கௌதமரும் பனிரண் டாண்டு முநிவர்களுக்கு விருப்புடன் விருந்திட்டார். பஞ்சம் நீங்கியபின் மஹரிஷிகள் தனது ஆச்ரமத்திற்குக் கிளம் பினார்கள். கௌதமர் அவர்களைவிட்டுப் பிரிய மனமில்லாமல் இன்னும் சிலநாள் தங்கிச்செல்லுங்களென பலமுறைவேண் டினார். மஹர்ஷிகள் இவரை ஏமாற்றிச் செல்ல மாயையால் ஓர்பசுவைப்படைத்து அவரெதிரே ஓட்டினார்கள். கௌதமர் அதை ஒட்டிக் கொட்டகையில் கட்ட ஆரம்பிக்கும் பொழுது அப்பசு இறந்தது. கோஹத்தி செய்த உமது ஆச் ரமத்தில் ஓர்நிமிஷங் கூட வஸிக்கக் கூடாதென்று கூறி எல்லோருங் கிளம்பினர். அவர்களது வஞ்சனையை அறிந்த கௌதமர் அம்முனிவர்கள் வேதத்தை வெறுக்கும் பாஷண் டர்களாகும்படிச் சபித்தார். அவர்கள் ஹரியையும் ஹரனை யும் சரணமடைந்து தங்களைக்காக்கும்படி ப்ரார்த்தித்தனர். இரு மூர்த்திகளும் சற்று யோசித்து முனிவர் சாபத்தை நிறைவேற்ற சிலபாஷண்டசாஸ்த்ரங்களை இயற்றி, அதன்

படி சிலகாலம் நீங்கள் நடந்து வந்தால் பின்னர் நாங்கள் வந்து பக்திமார்க்கத்தை உபதேசித்து நல்வழிகாட்டுகிறோம் என்றனர். அங்ஙனமே அவர்களைச் சீர்திருத்த பரமசிவன் காபாலிக வேடம் பூண்டு சென்றார். அச்சமயம் உமாதேவி யை ரக்ஷிக்கும்படி என்னையும் கணபதி வீரபத்ரன் நந்தி முதலியவர்களையும் கட்டளையிட்டார். நாங்கள் பெண்வேடம் பூண்டு தேவியினருகே நின்றுபணிவிடை செய்து வந்தோம். அச்சமயம் தற்செயலாக ஹிரண்யாக்ஷனது குமாரனை அந்தகாஸுரன் மந்தர மலையிலுள்ள தேவியைக் கண்டான். அவனுக்கு அன்னையினிடம் தாய் என்ற அன்பில்லாமல் அழகான பெண் என்று ஆசை உண்டாயிற்று. உடனே அம்பிகையைத் தூக்கிச்செல்ல ஆரம்பித்தான். நானும் மற்றவர்களும் அந்தகனை அடித்துத் துரத்தி விட்டோம். இதனிடையில் தாருகாவனஞ் சென்று பிக்ஷாடன வேடந் தரித்துப் பரமசிவன் பக்திமார்க்கத்தைப் புகட்டி பனி ரண்டாண்டு கழித்து பின்னர் கைலாஸத்திற்கு வந்தார். அந்தகாஸுரன் அச்சமயம் அங்குவர அவனது பராக்ர மத்தைக்கண்டு நடுங்கிய ஸகல தேவர்களும் பரமசிவத்தைச் சரணமடைந்தனர். அவர் தன் சூலத்தினால் அந்தகனைக் குத்தித் தூக்கிவைத்துக்கொண்டு நர்த்தநம் செய்தார். அவனது ரத்தத்திலிருந்து பல அஸுரர்கள் கிளம்பினார்கள். அவர்களை நான் படைத்த மாத்ருகாகணங்கள் கொன்று அந்தகன் ரத்தம் கீழேசிந்தாதபடி அதை அருந்தி விட்டன. மஹாதேவனது வீர்யத்தைக்கண்டு தேவர்கள் வியந்து போற்ற அந்தகாஸுரனும் அஹங்காரமகன்ற பின் பகவானை யும் தேவியையும் துதித்துப் பணிந்தான். பகவான் அவனைக் கீழேயிறக்கித் தன் புதல்வனாகக்கருதி ஓர் கணத் திற்கு அதிபதியாக்கினார். ரத்தவெறிகொண்டு பசிபசி என்று மூவ்வுலகையும் மாத்ருகணங்கள் பக்ஷிக்க ஆரம்

பித்தன. பரமசிவத்தின் வேண்டுகோளுக்கிணங்கி யான் நரஸிம்ஹவேடங்கொண்டு அவர்களைப் பாதாளத்தில் துரத்தி விட்டேன். அவர்கள் என்னிடம் பயந்து பரமசிவத்தைச் சரணமடைந்தனர். சரணுகதி செய்தவர்களைக் காப்பது தனது கடமை என்று சிவன் கூற அவரும் நானும் ஒன்றே யாதலால் அவர் பக்தரைக்காப்பது என் கடமை எனக்கருதி அவர்களைக்கொல்லாமல்விட்டேன். கர்வங்கொண்ட பலியை வாமனனுக வந்து சிக்ஷித்தேன். ராவண கும்பகர்ணர்களை ராமனுக வந்து கொன்றேன். மரீசி மூலமாக ரிஷிவம்சத்தை விருத்தி செய்தேன். வஸிஷ்டருக்கு அருந்ததியினிடம் சக்தி என்ருேர் புதல்வன் பிறந்தார். அவர் புத்ரனில்லாமல் பலநாள் பரமசிவத்தை ஆராதித்து எனது அம்சமான வியாஸரைப் பெற்ருர். அவருக்குச் சிவத்தின் அம்சத்தால் சுகர் என்ருேர் ஞானி பிறந்தார். அவருக்குப் பூரிச்ரவா ப்ரபு சம்பு கிருஷ்ணர் கௌரர் என ஐந்து புதல்வர்களும் கீர்த்திபதி என்ற பெண்ணும் பிறந்தார்கள். ஸூர்யன் மூலமாக ராஜவம்சத்தை விருத்தி செய்தேன்.

வஸுமநஸ்சரிதம். ஸூர்யவம்சத்தில் வஸுமநஸ் என்ருேரரசனிருந்தான். அவன் மிகத்தார்மிகன். அவன் பலயாகங்களைச் செய்தான். ஓர் யாகத்திற்கு வந்த வஸிஷ்டர் புலஸ்த்யர் அத்ரி விச்வாமித்ரர் முதலிய மஹர்ஷிகளை வணங்கி தனக்கு உத்தமகதியையளிக்கும் தர்மத்தைக் கூறும்படி வேண்டினுன். அம்முனிவரனைவரும் யக்ஞேச்வானுன விஷ்ணுவை யாகத்தினுல் பூஜித்து எப்பொழுதும் அவனிடமே இடைவிடாது மனதைச் செலுத்துவதே அதற்கேற்ற ஸாதநம் என்றனர். அங்ஙனமே பலயாகங்களைச் செய்து எனக்கு அர்ப்பணம செய்தான். தக்கவயதையடைந்த த்ரிதந்வா எனும் தன் புதல்வனிடம் ராஜ்யத்தை அளித்து வநம் சென்ருன். அங்கு நூருண்டு இடைவிடாது

எனது திருவடியைக் காயத்ரீ ஜபம் செய்தபடியே த்யாநம் செய்தான். பிரும்மா ப்ரத்யக்ஷமாகி நூறுவயது தந்தார். அவன் விடாது தவம் செய்ய நூறாண்டு சென்றபின் ஸூர்ய மண்டத்திலிருந்து மறுமடியும் ஓர் திவ்யபுருஷன் அரசன் எதிரே தோன்றினார். அவர் ஓர் க்ஷணம் சதுர் முகனாகக் காக்ஷியளித்துப் பின்னர் பரமசிவனாகத் தர்சநமளித்தார். அரசன் அவரைப்பணிந்து வணங்கிப் போற்றினான். அவர் சதருத்ரீய மெனும் மஹாமந்த்ரத்தை நூறாண்டு ஜபம் செய்து ஸித்திபெறுவாய் என்று கூறி மற்றும் நூறு வருஷம் ஆயுளையுமளித்துச் சென்றார். அதனால் அவனுக்குத் திவ்யக்ஞானமுண்டாயிற்று. முடிவில் அரசன் ஸூர்ய மண்டலத்தின் வழியாகக் கைலாஸஞ்சென்று பரமசிவத்துடன் ஐக்யமானான். அந்த ஸூர்யவம்சத்தில் நான் ராமனாகத்தோன்றி ஸீதையின் நிமித்தம் ஸமுத்ரத்தில் ஓர் அணையைக்கட்டி அதனருகே சிவலிங்கத்தை ப்ரதிஷ்டை செய்து பூஜித்தேன். அங்கு சென்று அதைத் தர்சிப்போரது பிரும்மஹத்தி முதலிய ஸகல பாபங்களுமகலும்.

ஜயத்வஜ சரிதம். சந்த்ரன் மூலமாக ஓர் ராஜவம்சத்தை விருத்தி செய்தேன். அதில் கார்த்த வீர்யன் என்ற அரசனுக்கு நூறு புதல்வர்கள் பிறந்தனர். அவர்களில் சூரன் சூரஸேநன் கிருஷ்ணன் த்ருஷ்ணன் ஜயத்வஜன் என்ற ஐவரே மிக்க பலசாலிகளாக இருந்தனர். இவர்களில் ஜயத்வஜன் மிக்க விஷ்ணுபக்தனாக இருந்தான். மற்ற ஸஹோதரர்கள் அவனைப்பார்த்துத் தமது முன்னோர் பாம்பரையாகப் பூஜித்துவந்த சிவனையே அவனும் பூஜிக்கவேண்டுமென்றனர். ஜயத்வஜன் அவர்களைப்பார்த்து விஷ்ணுவின் அம்சத்தினால் ஜனித்த அரசர்கள் அவச்யம் விஷ்ணுவைப் பூஜிக்கவேண்டும் என்றான். ஞானத்தை அளிக்கும் மஹாதேவனை அர்ச்சித்தால் தான் மோக்ஷங்கிட்டுமென்று மற்றோர் ஸஹோதரர் கூற

முனிவர்களைக் கேட்டு இச்சந்தேகத்தை அகற்றிக் கொள்வோமென்று சூரஸேநன்கூறினன். அங்ஙனமே ஸஹோதரரனைவரும் ஸப்தரிஷிகளிடம் சென்று இதைக்கேட்டனர். அவர்கள் யாருக்கு எந்ததேவதையினிடம் பக்திஉண்டாகிறதோ அவர் அந்த தேவதையைப் பூஜிக்கலாம். ஆனல் சிலகாலத்தில் சிலகார்யத்தை உத்தேசித்து எல்லோரும் ஒவ்வோர் மூர்த்தியைப் பூஜிக்கவேண்டும். க்ஷத்ரியனுக்கு விஷ்ணு பரமசிவன் இந்த்ரன் ஆகியவர்கள்தேவர்களாவர். பிராமணனுக்கு அக்னி ஆதித்யன் பிரும்மா பரமசிவன் தேவர்கள். தேவர்களுக்குத்தேவன்விஷ்ணு. முனிவருக்குப் பிரமனும் சிவனும் தேவர். ஸ்த்ரீகளுக்கு உமை விஷ்ணு சிவன் ஸூர்யன் இவர்கள் தேவராவர். விஷ்ணுவை ஜயத்வஜன் பூஜிப்பது அதர்மமல்ல. ஆனல் சிவன்வேறு விஷ்ணு வேறு என்று பூஜிக்கலாகாது. இருவரும் ஒருவரே என்று எண்ணினல் தான் அவனுக்கு நன்மையுண்டு இல்லையேல் விஷ்ணு அவனுக்கு அனுக்ரகம் செய்யமாட்டாரெனக்கூறி ஸப்தரிஷிகள் மறைந்தனர்.

இவர்கள் தனது நாட்டிற்குவந்து தர்மம் தவறுமல் ராஜ்யத்தை ஆண்டுவந்தனர். ஒருஸமயம் விதேஹன் என்ற அஸுரன் மிகபயங்கர ரூபத்துடன் அங்கு வந்து கர்ஜித்தான். அதைக்கேட்டுப்பலர் இறந்தனர். ஸஹோதரரனைவரும் நால்வகைப் படையுடன் வந்து விதேஹாஸுரனேடு யுத்தம் செய்தனர். அரக்கன் நிமிஷத்திற்குள் அவர்களது சேனை அனைத்தையும் நாசம்செய்தான். ராஜகுமாரர்கள் மிகக்கோபங்கொண்டு இந்த்ராஸ்த்ரம் வருணஸ்த்ரம் வாயவ்யாஸ்த்ரம் குபேராஸ்த்ரம் முதலிய பல அரிய அஸ்த்ரங்களை அவன் மேல் விட்டனர். அவைஎல்லாம் அவனருகே செல்லாமல் பாழாய்க்கீழே விழுந்தன. அச்சமயத்தில் என்ன செய்வதென்று அறியாமல் எல்லோருங் கலங்கிநிற்க ஜயத்வஜனுக்கு

ஓர் எண்ணம் உண்டாயிற்று. நமது உபாஸனு மூர்த்தியான ஸ்ரீமந் நாராயணனைச் சரணமடைந்தாலன்றி நமக்கு வேறுகதி யில்லை. என்று எண்ணி என்னை மநமாரப்போற்றினுன். உடனேயான் பல்லாண்டு தவம்செய்து பரமசிவனிடமிருந்து பெற்ற சக்ராயுதத்தை அங்கு அனுப்பினேன். அது ஓர் நிமிஷத்திற்குள்ளாக விதேஹனைக்கொன்று வைகுண்டஞ் சென்றது. இதைக்கேட்டு ஸந்தோஷமடைந்த விச்வாமித்திரரிஷி ஜயத்வஜனைக்கொண்டாடி, யக்ஞத்தினுல் என்னை ஆராதிக்கும்படிக்கூறிச்சென்ருர். அங்ஙனமே அந்தராஜஸஹோதரர்கள் பலயாகஞ்செய்தனர்.

துர்ஜயசரிதம்: ஜயத்வஜனுக்கு வீதிஹோத்ரன் என்றோர் புதல்வனிருந்தான். அவனது புதல்வன் அநந்தன் என்பவன். அநந்தனுக்கு துர்ஜயன் என்ற புத்ரன் பிறந்தான். அவன் பெயருக்கேற்றபடி எவராலும் ஜயிக்க முடியாத வீர்யமுள்ளவன். அழகிற்சிறந்தவன். அவன் மநுநீதிதவருமல் ராஜ்யத்தை ஆண்டுவந்தான். அவனுக்கு ரதியைவிட அழகான மனைவி வாய்த்தாள். அவள் கற்பிற்சிறந்தவள். அரசன் ஒருநாள் வேட்டையாட யமுனுதீரஞ்சென்று அங்கு தேவலோகத்திலிருந்து வந்து ஜலக்ரீடைசெய்து காநம்செய்யும் ஊர்வசியைக்கண்டான். அரசனது மனம் அவளிடம் சென்றது. அவளும் அரசனைப்பார்த்தவுடன் அவருடன் கூடிவிளையாடக்கருதினுள். இருவர் மநமும் ஒன்ருயிருந்ததால் விரைவில் இருவரும் ஒன்ருகச் சேர்ந்தனர். பகல் இரவென்றறியாமல் பலநாள் ரமித்திருந்தனர். அரசன் திடீரென ஒருநாள் விழித்துக் கொண்டு தன்னூர் செல்ல விடையளிக்கும்படிக் கேட்டான். ஊர்வசி, அரசே! எனது காதல் பூர்த்தியாகவில்லை. ஆதலால் விரைவில் மறுபடியும் வந்து என்னிஷ்டத்தைப் பூர்ததிசெய்ய வேண்டும். வேறெவளையும் தாங்கள் ஏற்கலாகாதென்ருள். அங்ஙனமே ஆகட்டுமென்று கூறி அரசன்

ஊருக்கு வந்தான். கற்பரசியான தன்மனைவியின் அருகே சென்றதும் அரசனுக்கு அச்ச முண்டாய்விட்டது. வாய்திறக்காமல் குனிந்ததலையுடன் நின்றான். புருஷனைவணங்கிப் பேசாமலிருக்கும் காரணம்யாதோ? என மனைவி வினவினாள். அதற்குமவன் பதில் கூறவில்லை. அந்தபதிவிருதை ஞாநக்கண்ணால் நடந்ததை அறிந்து நாத! தவறுதலாய் நேர்ந்த இதற்கு இவ்வளவு அஞ்சுவதேன்? நமது குலகுருவான கண்வரைக் கேட்டு ப்ராயச்சித்தம் செய்து கொள்ளலாமே! என்றாள். அரசன்தன் பத்னியின் உதாரகுணத்தைக்கண்டு பரமஸந்தோஷமடைந்தான். தன்தவறுதலை அவள் பொருட்படுத்தாமலிருந்தது இவனுக்கு இன்னும் அதிக துக்கத்தையே அளித்தது. கண்வாச்ரமஞ் சென்று முனிவரை வணங்கித் தன் குற்றத்தைக் கூறி பிராயச்சித்தங் கேட்டான். அவர் ஓர் முறையைக் கூறி அதை ச்ரத்தையுடன் அனுஷ்டிக்கும்படி உரைத்தார். அரசன் அதைக்கேட்டுத் தவம்செய்யக் கிளம்பும் போது வழியில் ஓர் கந்தர்வன் அற்புதமான ஒரு ரத்நமாலையை யணிந்திருக்கக் கண்டான். அதை ஊர்வசிக் களித்து அவளுடன் சிற்றின்ப மனுபவிக்க வேண்டுமென்ற ஆசை அரசனுக்கு உதித்தது. உடனே அவன் கந்தர்வனுடன்யுத்தம் செய்து அந்த ரத்ன மாலையைப் பிடுங்கிக்கொண்டான். முன்னம் ஊர்வசி தனக் கின்பமளித்த இடமான யமுனாதீரம் சென்றான். அங்கு ஊர்வசியைக்காணவில்லை. ஹேமகூடமலைக்குச் சென்றான். அங்கு அவளைத் தவிர மற்ற அப்ஸரஸுகளிருந்தார்கள். முன்னர்வேறெவரையும் தாங்கள் ஏற்கலாகாதென்று ஊர்வசி கூறிய சொல் அவனுக்கு நினைவுக்கு வந்தது. ஆதலால் அந்த அப்ஸரஸுக்களைக் கண் எடுத்தும் பாராமல் எழு த்வீபங்களிலும் அலைந்து திரிந்து அவளைத்தேடினான். அவளகப்படவில்லை. பின்னர் மாநஸஸரஸில் அவளைக் கண்டான்.

ரத்நமாலையை அளித்து முன்போலவே அவளுடன் கூடி ஆநந்தமாக ரமித்திருந்தான். வருஷங்கள் பல சென்றன. அதை அரசனறியவில்லை. ஊர்வசி அரசனைநோக்கி காந்தா ! ஊர் சென்று தாங்கள் இத்தனைநாள் என்ன செய்தீர் கள்? என்று கேட்டாள். அரசன் அங்கு நடந்ததைக் கூறவே ஊர்வசி, கற்புள்ள அரசனது மனைவியும் கண்வரும் தன்னைச் சபித்து விட்டால் என் செய்வது? என்று பயந்தாள். மஹாராஜனைத் தாங்கள் கண்வர் கூறியபடிப் பிராயச்சித்தம் செய்து கொள்ளச் சொல்லுங்கள் என்று பல முறை வேண்டினாள். அரசனோ காம மோஹத்தால் அச் சொல் லுக்குச் செவிகொடுக்கவில்லை. ஒரு நாள் ஊர்வசி செம்மட் டை மயிரும் பூனைக்கண்ணுமாக அரசன் முன்னேதோன்றி னாள். அதைக்கண்ட உடன் அரசனுக்கு அவளிடம் வெறுப்பு உண்டாயிற்று. அவளிடம் சொல்லிக்கொள் ளாமலே கிளம்பிவிட்டான். தனது செயலை நினைந்து வருந்திக் கண்வர் கூறியபடி தவஞ்செய்தான். ஓராண்டுகந்த மூலங்களைப்புஜித்துப் பனிரண்டுநாள் வாயுபக்ஷணம் செய்து மறுபடியும் கண்வரிடம் சென்று தன்குற்றத்தை மன்னித் துப் புதிதாகச்செய்தபாபத்திற்குப் பிராயச்சித்தம் விதிக்கும் படி வேண்டினான். கருணாமூர்த்தியான முனிவர், அரசனை நோக்கி ஸகலபாபங்களையுமகற்றவல்ல கங்கைக்குச் சென்று விதிப்படிஸ்நாநம்செய்து விச்வேச்வரனைத்தர்சித்து விட்டுவா என்றார். அரசன் அப்படியே அநுஷ்டித்துத் தன்னாட்டிற் குத்திரும்பினான். அரசனுக்குக் கண்வர் பலயாகங்களைச் செய்துவைத்தார். அவனுக்கு ஸப்ரதிகன் என்றோர் புதல் வன் பிறந்தான். அவன் வம்சத்தில் நவரதன்என்றோரரச னிருந்தான். அவன் வேட்டையாடக் காட்டிற்குச் சென்ற போது துர்யோதநன் என்றோர் ராக்ஷஸன் அவனைத் துரத்தினான். அவனைஜயிக்க முடியாமல் பயந்து ஓடியராஜன்

அங்கு ஓர் ஸரஸ்வதீதேவியின் ஆலயத்தைக்கண்டான். அதனுள்ளே புகுந்து தேவியைத் தன்னைக் காக்கும்படி வேண்டினுன். தேவி ஓர் சூலபாணியான பூதத்தைக் கொண்டு அவ்வஸுரனைக்கொன்று அரசனைக் காப்பாற்றினுள். அவ்வரசன் தனது ஊரில் ஓர் பெரியதேவியின் ஆலயத்தைக்கட்டிப் பூஜித்தான். அவன் ஸந்ததியில் பிறந்தவரனைவரும் தேவீபக்தர்களானுர்கள். சந்திரவம்சத்தில் பிறந்த யது ராஜனிடமிருந்து யாதவவம்சம் விருத்தியாயிற்று. அந்த வம்சத்தில் பூபாரத்தைக் குறைக்க யான் வாஸுதேவனுகப் பிறந்தேன்.

கிருஷ்ணன் சிவனருளால் புத்திரனை அடைந்தது. ஸ்ரீ கிருஷ்ணனுகத் தோன்றிய யான் ருக்மிணீ முதலிய பட்ட மஹிஷிகளுடனும் மற்றும் பதினுறுயிரம் ஸ்த்ரீகளுடனும் த்வாரகையில் கிருஹஸ்தாச்ரமத்தை அனுஷ்டித்து வந்தேன். மற்றவருக்கு ஸந்ததி ஜநித்திட, பல வருஷங்களாகியும் ஸத்புத்ரன் தனக்கு ஜனிக்காததால் உமாதேவியின் அம்சத்தாலுண்டான ஜாம்பவதி, சிவனைப்போன்ற மகன் வேண்டுமெனப்ப்ரார்த்திக்க நான் அவளை அழைத்துக்கொண்டு தவஞ்செய்யச் சென்றேன். யான் வருவதைக்கேட்டு ஸகல முனிவரும் மற்றோரும் கூட்டங் கூட்டமாக வந்து என்னைப் பூஜித்துப் போற்றிச் சென்றனர். பல புண்ய தீர்த்தங்களில் புனலாடி தேவபித்ருரிஷி தர்ப்பணங்களைச்செய்து முடித்து உபமன்யு ஆச்ரமம் வந்தோம். அங்கே விபூதிருத்ராக்ஷ தாரிகளான பல்லாயிரம் சீடர் மத்தியில் சிவதத்துவத்தை விளக்கிக்கொண்டிருக்கும் உபமன்யு முனிவரைக்கண்டேன். அவர் என்னைக்கண்டவுடன் மிக்க அன்புடன் எழுந்து வந்து ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து என்னை மார்போடணைத்து வந்தவேலை யாதென வினவினுர். சிவனைப்போன்ற புத்ரனை ஜாம்பவதி வேண்டுவதால் சிவனருளைப்பெற சிவ

பக்தரில் சிறந்த தங்களிடம் வந்தேன் என்றேன். இதைக் கேட்ட உபமன்யு இங்குதான் வஸிஷ்டர் சிவனை ஆராதித்து அரிய அறிவைப்பெற்றார். வ்யாஸர் தவம் செய்து சிவாம்சம் பெற்ற சுகனைப்பெற்ற இடமும் இதுதான். ஆதலால் தாங்கள் இங்கேயே பரமசிவத்தை ஆராதித்துக் கோரியபலனைப் பெறலாமென்று கூறி எனக்குச் சிவதீக்ஷை செய்து வைத்தார். யான் விபூதிருத்ராக்ஷமணிந்து ஏகாக்ரசித்தனாக இருந்து பரமசிவத்தைப் பலநாள் பூஜித்தேன். ஒரு ஸமயம் அவர் எனக்கு உமாஸமேதனாகத் தர்சநம் தந்தருளினார். நான் அவரை ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து துதித்து ஜாம்பவதியின் கோரிக்கையைப் பூர்த்தி செய்யும்படி வேண்டினேன். பரமசிவன் புன்னகையுடன் என்னைப் பார்த்துக் கூறினார்.

தேவ! தாங்கள் தேவதைகளது வேண்டுகோளுக்கிணங்கி வஸுதேவன் வீட்டிலே அவதரித்த வைகுண்டநாதனன்றோ? எல்லோருக்கும் எல்லாவரத்தையும் அளிக்க வல்லவரான தாங்களே புத்ரவரனுக்காக என்னை உபாஸிப்பது என்ன விந்தை? நீர் வேறு நான் வேறென்று நினைப்பவன் புத்தியில்லாதவனன்றோ? என்று கூறி கைலாஸத்திற்கு வரும்படி வேண்டினார். கிருஷ்ணன் ஜாம்பவதியுடன் பரமசிவன் வாஹநமான விருஷபத்தின் மீது உட்கார்ந்து கைலாஸஞ்சென்று பலநாளங்கு தங்கியிருந்தார். இதனிடையில் பல ராக்ஷஸர்கள் வந்து த்வாரகையைத் தாக்கினார்கள். உக்ரஸேந ராஜனது சேனைகள் பயந்து ஓடியதைக் கண்டு கருடன் விரைவாக வந்து ராக்ஷஸர்களைக்கொன்றார். அச்சமயம் திடீரென்று நாரதரங்கு வந்தார். வஸுதேவர் அவரை வணங்கி கிருஷ்ணன் எங்கிருக்கிறார்? என்று கேட்க, இப்போதுதானவரைப் பரமசிவத்துடன் கைலாஸத்தில் தர்சித்துவிட்டு வருகிறேன் என்றார். கருடன்

விரைவாகக் கைலாஸஞ்சென்று என்னைத் துவாரகைக்கு அழைத்து வந்தார். யான் முன்போலவே ஒவ்வொரு பத்நியின் வீட்டிலும் ஒவ்வோர் கிருஷ்ண வடிவமெடுத்து இல்லற தர்மத்தை நடத்திவந்தேன். ஜாம்பவதி கோரியபடி சிவாம்சத்தால் ஸாம்பன் என்னும் புதல்வன் அவளுக்குப் பிறந்தான். ஒரு ஸமயம் மார்க்கண்டேயமுனி எனது வீட்டிற்கு வந்து யான் செய்யும் பூஜையைப்பார்த்துக் கொண்டிருந்தார். பூஜை முடிந்தபின் என்னைப்பார்த்து அவர் தேவ, ஸகல உலகும் தங்களையே தெய்வமென்று போற்றிப் பூஜிக்கின்றது. தெய்வத்திற்கோர் தெய்வ முண்டோ? தாங்கள் எந்த தெய்வத்தைப் பூஜிக்கிறீர்கள்? என்று கேட்டார். நானவரைப்பார்த்து முநிவரே! யான் சிவபூஜை செய்தேன். நானும் சிவனும் ஒன்றே ஆயினும் சில ஸமயத்தில் ஓர் காரணம்பற்றி யானவரைப் பூஜிப்பதும் அவர் என்னைப் பூஜிப்பதும் இயற்கை என்றேன். இதைக் கேட்ட மார்க்கண்டேயர், சிவன் லிங்கமாயிருக்கக் காரணம் யாதென்று வினவ அதைக்கூறினேன்.

சிவன் லிங்கமானது. ஒரு ஸமயம் பிரும்மா என் னருகேவந்து நீ யார்? என்று கேட்டார். நான் கர்வத் துடன் அவரை நோக்கி யான் நாராயணன். பதினன்கு லோகங்களுக்கும் படியளக்கும் ப்ரபு என்றேன். அவருக்கும் கர்வம் உண்டானது. அவர் நானல்லவா பதினன்கு உலகை யும் படைத்துப் பரிபாலிப்பவன் என்றார். எங்களிருவருக் கும் வாதம் பலத்தது. அச்சமயத்தில் எங்கள் முன்னிலையில் ஓர் ஜ்யோதிர்மயமான ஸ்தம்பம் தோன்றிற்று. இதைக்கண்டு இது என்ன! என்று அறியாமல் நாங்கள் விழித்து நின் றோம். ஓர் அசரீரி வாக்கு தோன்றி என்னை அடியைத் தேடும்படியும் பிரும்மனை அந்தஸ்தம்பத்தின் முடியைத் தேடும்படியுங் கூறிற்று. இருவரும் சென்று வெகுநாள்

தேடினேம். எவருக்கும் எதுவுங்கிடைக்கவில்லை. வாடி வதங்கி பகவானைத் துதித்தோம். அவர் எங்களுக்கு ப்ரத்யக்ஷமாகி ஸ்தம்பமாய் நின்றது சிவலிங்கம். உங்கள் கர்வத்தை அகற்ற இங்ஙனம் தோன்றினேன் என்றார். இருவரும் அவரைப் பணிந்துப் பூஜித்தோம். அன்று முதல் உலகில் லிங்கபூஜை தோன்றிற்று. அந்த சிவமஹிமையைக் கூறுகிறேன் கேளுங்கள்.

அர்ஜுனனுக்கு வியாஸர் உபதேசம். கிருஷ்ணனுகப் பிறந்த யான் எனது வேலை முடிந்தவுடன் வைகுண்டஞ் சென்றேன். எனது பிரிவைப் பொறுக்காத அர்ஜுனன் மிக்க துக்கப்பட்டுக்கொண்டே திரும்பும்போது சிஷ்ய கணங்களுடன் வேதவியாஸர் அவன் முன்னே தோன்றினர். அர்ஜுனன் அவரைப் பணிந்து, கிருஷ்ணன் வைகுண்டஞ் சென்ற பின் பூமியின் கதி என்ன ? என்று கேட்டான். உடனே அவர் சதுர்யுக தர்மங்களையுங்கூறி கலியினது நன்மை தீமைகளைக் கூற ஆரம்பித்தார். கிருதயுகத்தில் தியானமும் தபஸும், திரேதாயுகத்தில் ஞானமும், த்வாபர யுகத்தில் யாகமும், கலியுகத்தில் தானமுமே மோக்ஷத்தை அடைவதற்கேற்ற ஸாதநங்களாகும். கிருதயுகத்தில் பிரும்மாவே தேவர். திரேதாயுகத்தில் ஸூர்யனே தேவன். த்வாபரத்தில் விஷ்ணுவும், கலியில் பரமசிவனும் பூஜிக்கத் தக்க தேவர்களாவர். எந்ததேவரைப் பூஜித்தாலும் அது கலியில் மஹாதேவனையேசேரும். கலியில் தர்மம் ஒரே பாதத்துடனிருப்பதால் பல அதர்மங்களுண்டாகும். கலியில் மத ஆசாரங்களை எவருங் கைக்கொள்ளமாட்டார்கள். ஆதலால் நோயதிகமாகும். அல்பாயுஸுகளாகவே எல்லோரும் இறப்பர். வேதத்தை மறப்பர். யாகம் செய்யமாட்டார்கள். தானம் கொடுக்கமாட்டார்கள். ஆதலால் மழை ஸரியாக நிறையப் பொழியாது. அடிக்கடி பஞ்சம் தோன்றும்.

காலே ஸ்நாநம் ஜபம் ஹோமம் தேவார்ச்சநம் முதலியவை களைச் செய்ய மாட்டார்கள். பொய்யும் திருடும் அதிகமாகும். பாட்டும் ஆட்டமும் அதிகரிக்கும். யாசகர்கள் அதிகமாகக் கிளம்புவர். சோற்றுக்கடை அதிகமாகும். பெண்டுகள் தம்தலை மயிரைக் கத்தரித்து விற்பார்கள். கற்பு குறையும். காஷாயந்தரித்து பலர் உலகை வஞ்சிப்பார்கள். உத்தம வர்ணத்தார் தாழ்ந்த ஜாதிகளுக்குப்பணிவிடை செய்வார்கள். தகாதவர்களுக்கு வேதத்தைக் கற்றுக்கொடுப்பர். பக்தி யில்லாத பாட்டுக்களே அதிகமாகும். வாமபூஜை அதி கரிக்கும். தக்ஷயாகத்தில் தாக்ஷாயணி அளித்த சாபத்தால் ரிஷிகள் நாஸ்திகர்களாகக் கலியில் பிறப்பர். கர்மமார்க்கத் தைத்தூஷித்துப் போலி வேதாந்தம் பேசுபவர் அதிகமாவர். தேவத்விஜவர்ணாச்ரம தர்மங்களை நிந்திப்பார்கள். சிசு ஹத்தியும் கர்ப்பஹத்தியும் அதிகமாகும். இவ்வளவு தோஷம் நிறைந்த கலிக்கும் ஓர் உயர்ந்த குணமுண்டு. அது யாதெனில் கலியுக தேவதையான பரமசிவத்தைச் சரண மடைந்தால் ஸகல பாபமுமகலும். அநாயாஸமாக ஸுகத் தைப்பெற இக்கலியில்தான் முடியும். ஆதலால் ஸகல தர்மங்களையும் விட்டாலுங் கூட சிவபக்திசெய்பவன் முக்தி பெறுவான். என்று கூறி அர்ஜுநனை அனுப்பிவிட்டு வியாஸர் காசிக்குச் சென்றார். காசியின் பெருமையைக் கூறும்படித் தேவர்கள் வினவப் பகவானுரைக்கிறார்.

## காசியின் மாஹாத்ம்யம்.

காசிக்ஷேத்ரத்தை எப்போதும் பரமசிவன் விடாம லிருப்பதால் அதற்கு அவிமுக்தம் என்று பெயர். வாரணா அஸி என்ற இரு நதிகள் கங்கையிலங்கு ஸங்கமமாவதால் வாராணஸீ என்றுமதற்கு மற்றோர் பெயருண்டு. எவ்வளவு பாபம் செய்திருந்தாலும் அவைகளை நீக்கி நற்கதியை

யளிப்பது காசியே. ஆங்கு இறக்கும் புழு எறும்புகளுக்கும் மோக்ஷமுண்டென்றால் அறிவு படைத்த மனிதனைப் பற்றி கேட்கவேண்டுமா? காசியில் இறப்பவருக்கு நரகமே கிடையாது. ப்ரயாகை, நைமிசாரண்யம், ஸ்ரீசைலம், ஹிமாலயம் கேதாரம், பத்ரகர்ணம், கயை, புஷ்கரம், குரு க்ஷேத்ரம், ருத்ரகோடி, நர்மதை, ஹாடகேச்வரம், ஸாளிக்ராமம், புஷ்பாக்ரம் வம்சம், கோகாமுகம், ப்ரபாஸம், விஜயேசாநம் கோகர்ணம், சங்குகர்ணம் ஆகிய இவைகள் புண்ய தீர்த்தங்கள். இவைளை விட மிக உத்தமமானது காசி. பல்லாண்டு பல ஜன்மங்களில் தவம் செய்திருந்தால்தான் ஒருவன் காசியில் இறக்கமுடியும். அங்கு இறப்போருக்கு விச்வேச்வரர் தாரக மந்தரத்தை வலதுகாதில் உபதேசிக்கிறார். ஆதலாலங்கு இறப்போர் மறுபிறப்பில்லாத மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அடைவர். நமது உடலில் இருபுருவங்களுக்கிடையிலும் ஹிருதயத்திலும் நாஸியிலும் மூர்த்தாவிலும் எங்ஙனம் ஈச்வராம்சம் உளதோ அங்ஙனமே காசியிலும் ஈச்வரன் ப்ரத்யக்ஷமாக வஸிக்கிறார். தேவரில் விஷ்ணு எப்படி உயர்ந்தவரோ ஈசரில் எங்ஙனம் பரமசிவன் மேலானவரோ அப்படியே தீர்த்தங்களில் கங்கை உயர்ந்தது. ஓங்காரேச்வரர் விச்வேச்வரர் கபர்த்தீச்வரர் கிருத்திவாஸேச்வரர் முதலிய பல லிங்கங்க ளிருக்கின்றன.

சங்குகர்ணசரிதம். வேதவ்யாஸர் தன் சிடர்களுடன் கபர்த்தீச்வரலிங்கத்தினருகே சென்றார். அங்கு ஓர் மஹர்ஷி பூதஉடலைவிட்டு அந்தலிங்கத்துடன் லயமாகக் கண்டு எல்லோருமாச்சர்ய மடைந்தனர். அவர் யாரென்று சிஷ்யர்கள் கேட்க வியாஸருரைத்தார். சங்குகர்ணர் எனும் மஹாமுனிவரவர். அன்றன்றும் கங்காஸ்நாநம் செய்து கபர்த்தீச்வரரை அவர் பக்தியுடன் அர்ச்சிப்பர். எப்போதும் ருத்ரபாராயணம் செய்வார். பஞ்சாக்ஷர ஜபம் செய்வார்.

விபூதி ருத்ராக்ஷமில்லாமல் அவரைப்பார்க்கமுடியாது. ஒருநாள் அவர் பூஜைசெய்து விட்டு ஜபம்செய்ய ஆரம்பித்தார். அச்சமயம் எலும்பும் தோலுமாக ஓர் பயங்கரமான பூதம் பசியுடன் ஆ என்று வாயைத்திறந்துகொண்டு அவரெதிரே வந்தது. அவர் பக்தரானதால் அதைக்கண்டு அஞ்சாமல் கருணையுடன் நீ யார்? என்று கேட்டார். அது அருகேவந்து அவரைக்கண்டவுடன் இயற்கையான தூர்க்குணத்தை விட்டுப்பணிவுடன் பதிலுரைத்தது. மஹர்ஷே! யான் முற்பிறவியில் ஓர் பெருங்குடும்பியான பிராமணனாக இருந்தேன். குடும்பத்தைக் காக்கவேண்டிய முயற்சி செய்தேனே அல்லாது எந்தத்தேவரையும் பசுவையும் பிராமணரையும் பூஜிக்க வில்லை. மறந்துங்கூட கனவிலும் எள்ளளவு புண்யங்கூட யான் செய்ததில்லை. ஒரு ஸமயம் தற்செயலாக காசி விச்வநாதரைக்கண்டேன். எல்லோரும் நமஸ்கரிப்பதைப் பார்த்து நானும் அவருக்கு ஓர் நமஸ்காரம் செய்தேன். பின்னர் கொஞ்ச நேரத்திற்கெல்லாம் நான் இறந்தேன். விச்வேச்வரரது தர்சநபுண்யத்தால் எமன் என்னை நரகத்திற்கு அழைத்துச் செல்லாமல் விட்டுவிட்டான். இப்பேய் உடலுடன் யான் திரிந்து கொண்டிருக்கிறேன். எப்போதும் அடங்காத பசியும் தாஹமும் என்னை வாட்டுகின்றன. மிகக் கருணாமூர்த்தியான தாங்கள் எனக்கோர் நல்வழிகாட்டி இப்பாப ஜன்மத்திலிருந்து என்னைக் காத்தருளவேண்டும் என்றது. இதைக்கேட்ட மஹர்ஷி அந்த்யகாலத்தில் பகவானைத் தர்சித்த புண்யத்தால் மறுபடியும் இங்கு வந்து சேர்ந்தாய்! அவரை நினைத்துக் கொண்டே இந்தகுண்டத்தில் ஸ்நாநம் செய், உனது பாபமகலும் என்றார். அதைக்கேட்ட பூதம் அங்ஙனமே பரமசிவத்தை த்யானம்செய்து ஸ்நாநம் செய்தது. உடனே அந்த உடல் நீங்கி திவ்யதேஹம் பெற்றது. ஸூர்யனைப்போல்

ப்ரகாசிக்கும் திவ்ய விமானத்தின்மீதேறிவந்த சிவகிங்கரர்கள் அதை வரவேற்றனர். இதைக்கண்ட தேவர்கள் புஷ்பமாரிப் பொழிந்தனர். சங்குகர்ணன் இங்ஙனம் கதியற்ற பேய்க்கு உபகாரம்செய்த புண்யத்துடன் இயற்கையாகவே கங்கா ஸ்நாநமும் விச்வேச்வர பூஜையும் செய்தவனுதலால் அவனது ப்ராரப்த அதீனமான அந்த உடல் அழிந்தவுடன் அவர் ஜ்யோதிர் மயமான லிங்கத்துடன் லயமானுர். என்று வியாஸருரைத்தார்.

வியாஸர் காசியைவிட்டது. இங்ஙனம் பல கட்டங்களுக்குச் சிஷ்யர்களுடன் சென்று வியாஸர் ஆங்காங்குள்ள லிங்கங்களின் மஹிமையைக்கூறி வந்தார். ஒரு ஸமயம் வியாஸருக்கு எவரும் பிக்ஷை அளிக்காமலிருந்து விட்டனர். அதனுல் பசியால் வருந்திய அவருக்குக் கடுங்கோபமுண்டாயிற்று. காசியிலுள்ளோர் அனைவரும் எனக்குப் பிக்ஷை கொடுக்காததால் அவர்கட்கு ஸித்தி உண்டாகாதபடி விக்நம் செய்கிறேன் என்று ஆரம்பித்தாரவர். அச்சமயத்தில் ஸாக்ஷாத் அன்னபூர்ணுதேவி மனுஷ்ய வடிவத்துடன் கையில் பிக்ஷையை எடுத்து வந்து அவருக்குக் கொடுத்து முனிவரே! இவ்வளவு கோபமுள்ள நீர் இங்கு வஸிக்கலாகாது. காசியைவிட்டு தூரேசெல்லும் என்ருள். பிக்ஷையை உட்கொண்டு பசியகன்றபின் முனிவர் வந்தவள் யார் என யோசித்துப் பார்த்தார். உமை என்றறிந்து அவள் காலில் விழுந்தார். தன் குற்றத்தை மன்னித்துத் தன்னை அஷ்டமியிலும் சதுர்த்தசியிலும் அங்கு வரும்படி அருள்புரிய வேண்டினுர். தேவியும் அங்ஙனமே ஆகட்டுமென்று கூறி மறைந்தாள். அதுமுதல் வேதவியாஸர் காசியைவிட்டு வேறிடஞ் சென்ருர். அவ்விடத்திற்கு வியாஸகாசி என்று பெயர் வழங்குகிறது.

ப்ரயாகைமாஹாத்ம்யம். பாண்டவர்கள் தர்மத்தைக்

கடைபிடித்து மிகக்ரூரர்களான துர்யோதனுதிகளை ஜயித்தார்கள். தௌம்யர் முதலிய பல மஹர்ஷிகள் தர்ம ராஜனுக்குப் பட்டாபிஷேகம் செய்தார்கள். தர்மராஜன் மநுநீதி வழுவாது ராஜ்யபாரம்செய்து வந்தார். பல யக்ஞங்களைச்செய்தார். திநந்தோறும் கோதாநம் பூதாநம் ஸ்வர்ண தாநம் அன்னதாநம் முதலியவைகளைச்செய்து வந்தார். வந்தபெரியோர்களை வணங்கிப்பூஜித்து அவர் களிடமிருந்து பல தர்மோபதேசம் பெற்று வந்தார். என்றாலும், பந்துக்களைக்கொன்று தான் ராஜ்யமாளுவது பாபம் என்ற எண்ணம் அவரைவிட்டு நீங்கவில்லை. எப் பொழுதும் இந்தசிந்தை அவரை விட்டகலவில்லை. ஆதலால் அவர்முகம் ஒருவாறு வாடியிருந்தது. ஒருஸமயம் மார்க் கண்டேய மஹர்ஷி அரசனிடம் வந்தார். தர்மர் அவரை வரவேற்று விதிப்படி விருந்தளித்தார். அரசன் முகம் வாடி யிருப்பதைக் கண்ட மஹர்ஷி, தர்ம! நீ கவலையுடனிருக்கக் காரணமென்ன என்று வினவினார். அரசன் பந்துக்களைக் கொன்ற பாபம் தன்னைவிட்டகல ஏதேனும் ப்ராயச்சித்தம் விதிக்கும்படி கேட்டார். மார்க்கண்டேயர், அரசன் சத்ருவைக்கொல்வது ஸ்வதர்மமாதலின் பாபமில்லை, என்று எண்ணினாலும், அரசனது புத்தியை அனுஸரித்தே பதி லுரைத்தார். தர்ம! நீ ப்ரயாகையில் ஸ்நாநம் செய்தால் அந்த பாபமகலும். கங்கையும் யமுனையும் ஸங்கமமாகு மிடத்தில் ஸரஸ்வதி நதி மறைந்து செல்கிறாள். இம் மூன்று முள்ள விடத்தை த்ரிவேணி அல்லது ப்ரயாகை என்பார்கள். ஸகல தேவர்களுடன் மஹாவிஷ்ணு அந்த தீர்த்தத்தைக் காப்பாற்றி வருகிறார். ப்ரயாகை என்று எண்ணினலே போதும்.உடனே ஸகல பாபங்களுமொழியும். அதைத் தர்சித்தாலும் அதில் விதிப்படி ஸ்நாநம் செய் தாலும் பாபம் போகுமென சொல்லவும் வேண்டுமா?

பதினுயிரத்தில் ஒருவர்தான், அங்குபோய் ஸ்நாநம் செய்யத் தக்க புண்யத்தைச் செய்திருப்பார். எல்லோருக்குமது எளிதில் கிடைக்காது. ப்ரயாகையில் சிறிதளவு புண்யஞ் செய்தாலும் அது அழியாப்பயனை யளிக்கும். கிருதயுகத்தில் நைமிஷதீர்த்தமும் திரேதையில் புஷ்காமும் த்வாபரத்தில் குருக்ஷேத்ரமும் கலியில் கங்கையும் விசேஷமான தீர்த்தங் களாகும். மூன்றரைகோடி தீர்த்தங்கள் கங்கையில் வஸிக்கின்றன. அங்கு இறப்போர் மோக்ஷமடைவர். என்று கூறி மார்க்கண்டேயர் சென்றுர். யுதிஷ்டிரர் ப்ரயாகை சென்று ஸ்நாநம் செய்தார். ஏழுத்வீபங்களைக்கூறி பகவான் புவநமண்டலத்தைக் கூறுகிருர்.

புவனமண்டலம். பூலோகம் புவர்லோகம் ஸுவர்லோகம் மஹோலோகம் ஜநோலோகம் தபோலோகம் ஸத்தியலோகம் என ஏழு லோகங்கள் மேலே இருக்கின்றன. சந்த்ர ஸூர்யர் களது கிரணம் எவ்வளவு தூரம்பரவுமோ அவ்வளவு விஸ் தீரணமுள்ளது பூலோகம். பூலோகம் எவ்வளவு பெரிதோ அவ்வளவுபெரிது புவர்லோகம். ஸுவர்லோகத்தில் ஆவஹன் ப்ரவஹன் அநுவஹன் ஸம்வஹன் விவஹன் பராவஹன் பரிவஹன் என ஸப்தமருத்துக்களின் மண்டலங்களிருக் கின்றன. பூமியிலிருந்து லக்ஷம்யோஜனை தூரத்தில் ஸூர்ய மண்டலமிருக்கிறது. அங்கிருந்து லக்ஷம்யோஜனை தூரத்தில் சந்திரமண்டலமிருக்கிறது. அங்கிருந்து லக்ஷம்யோஜனை தூரத்தில் நக்ஷத்ரமண்டலங்களிருக்கின்றன. அங்கிருந்து இரண்டு லக்ஷம்யோஜனைக்கப்புறம் புதமண்டலமிருக்கிறது. அதனருகே அங்காரகனும் சுக்ரனுமிருக்கின்றனர். அங் காரகனுக்கு இரண்டு லக்ஷம் யோஜனைக்குமேல் பிருஹஸ்பதி இருக்கிருர். அங்கிருந்து இரண்டு லக்ஷம்யோஜனைக்குமேல் சனைச்சரனிருக்கிருர். இவைகளுக்கு லக்ஷம்யோஜனைக்கு மேல் ஸப்தர்ஷிமண்டலமுளது. அங்கிருந்து லக்ஷம்யோ

ஜனைக்குமேல் த்ருவமண்டலமுளது அங்கு தர்மரூபியான நாராயணனிருக்கிறார்.

மிகவிசாலமான ஸூர்யமண்டலத்தில் காலசக்ர மென்று ஒன்றுளது. அங்கு பல பிரிவுகளிருக்கின்றன. தேவர் ராக்ஷஸர் கந்தர்வர் அப்ஸரஸ் முதலியவர்கள் அங்கு தங்கி ஸூர்யனை உபாஸிக்கின்றனர். தாதா அரியமா மித்ரன் வருணன் சுக்ரன் விவஸ்வான் பூஷா பர்ஜன்யன் அம்சு பகன் த்வஷ்டா விஷ்ணு என்று பனிரண்டு ஆதித்யர் களிருக்கின்றனர். காயத்ரீ உஷ்ணிக் அநுஷ்டுப் பிரு ஹதீ திருஷ்டுப் ஜகதீ பங்க்தீ என ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்தில் ஸூர்யன் ஸஞ்சாரம் செய்கின்றான். ஸுஷும்லா ஹரிகேசா விச்வகர்மா விச்வச்ரவா ஸம்யத்வஸு அர்வாவஸு ஸ்வரகா என்ற முக்கியமான ஏழுகிரணங்களால் ஏழுக்ரஹங் களைப் போஷிக்கிறார். மற்றும் பல எண்ணிறந்த கிரணங்க ளால் நக்ஷத்ரம் முதலியவைகளையும் ஜகத்தையும் பரிபாலிக் கிறார். த்ருவமண்டலத்திலிருந்து கோடியோஜனை தூரத்திற் கப்பால் மஹர்லோகமுளது. அதிலிருந்து இரண்டுகோடி யோஜனை தூரத்தில் ஜநோலோகமிருக்கிறது. அங்கு ஸநகாதி மஹர்ஷிகள் வஸிக்கின்றனர். அங்கிருந்து மூன்று யோஜனை தூரத்தில் தபோலோகமிருக்கிறது. ஆங்கு வைராஜர்கள் என்ற தேவர்கள் யாதொரு தாபமுமின்றி வஸிக்கின்றனர். அங்கிருந்து ஆறுகோடி யோஜனை தூரத்தில் ஸத்திய லோகமிருக்கிறது. அங்கே பிரும்மா பல பிரும்ம நிஷ்டர் களுடன் கூடி ஆநந்தமாக வாழ்கிறார். அங்கு சென்றவர் மறுபடி பூமியில் வந்து பிறப்பதில்லை. அங்குதான் வை குண்டமும் கைலாஸமுமிருக்கின்றன.

மேரு மலை. பூமியின்கீழே அதலம்முதலிய ஏழு லோகங் களிருக்கின்றன. பூமியில் நாம் வஸிக்கும் த்வீபம் ஜம்பூத் வீப மெனப்படும். இதில் நடுவில் அமைந்திருப்பது மேரு

மலை. அது எண்பத்து நாலாயிரம் யோஜனை தூரம் உயர முள்ளது. இந்த மலைமீது பிரும்மாவுக்கும் மற்றதேவர் களுக்கும் தனித்தனியாக நகரமிருக்கிறது. அமராவதி எனும் நகரில் இந்த்ராணியுட னிந்த்ரன் வஸிக்கிறான். யாகம் செய்த மஹர்ஷிகளங்கு அவனை உபாஸித்துக்கொண் டிருக்கின்றனர். அதற்குத் தென்புறத்தில் தேஜோவதி என்றோர் நகரமிருக்கிறது. அது அக்கினிக்குச் சொந்தமா னது. அங்கு ஜபம் செய்தவர்களும் ஹோமம் செய்தவர்க ளும் அக்னியை உபாஸித்துக் கொண்டிருக்கின்றனர். அங் கிருந்து தென்புறத்தில் யமனுக்குச் சொந்தமான ஸம்யமநீ என்ற பட்டணமிருக்கிறது. ஸத்யந் தவறாதவர்களங்கே சென்று யமனை உபாஸிக்கின்றனர். அதற்குமேற்கு மூலையில் ராக்ஷஸர்கள் நிறைந்த ரக்ஷோவதீ எனும் நகரமிருக்கிறது. அதற்கு அதிபதி நிருரிதி என்பவர். தாமஸ குணத்தோடு தர்மம் செய்பவர் அங்கு செல்வர். மேற்கு புறத்தில் சுத்தவதீ என்றோர் நகரமுளது. அதற்கு வருண ராஜனே அதிபதி. அதற்கு வடபக்கத்தில் ஓர் நகரமுண்டு. அதற்கு கந்தவதீ என்றுபெயர். அதை ஆளுபவன் வாயுதேவன். ப்ராணயாமம் செய்த புண்யசாலிக ளங்கு செல்வர். கிழக்கு புறத்தில் காந்தி மதி என்றோர் அழகிய பட்டணமுண்டு. அதை ஆண்டு வருகிறவன் ஸோமன். ஸ்வதர்மத்தைத்தவறாமல் அனுஷ்டிப் பவர் அங்கு செல்வர். அவரவர்களது புண்யத்திற் கேற்ற படி அநேக போக ஸாதநங்களங்கே இருக்கின்றன. அதற்கு கிழக்கே யசோவதீ என்ற பட்டணமிருக்கிறது. அதற்கு ஈசாநன் அதிபதி. அங்கு பல கணங்களிருக்கின்றனர். கணாதிபதிக்குத் தனித்ததோர் நகரமுண்டு. அங்கே கங்கை ஓடுகிறது. கங்கைக்கு ஸீதா அலகநந்தா சுசுக்ஷு பத்ரா என நாலு முகங்களுண்டு. நாலுமுகங்களால் நாலுதிக்குகளுக்கும் சென்று ஆங்குளோரை அவள் சுத்தமாக்கி ரக்ஷிக்கிறாள்.

ஜம்பூத் வீபத்தில் தேவாலயம். நாம் வஸிக்கும் இந்த த்வீபத்திற்கு ஜம்பூத்வீபம் என்று பெயர். இதில் கௌசிகீ ரூலாஹினீ வர்ஞுசா, சந்தநா, மஹாகௌரீ துர்கா, பாகீரதீ, கோதாவரீ கிருஷ்ணு, வேணு, முதலிய எண்ணிறந்த மஹாநதிகளும் உபநதிகளுமிருக்கின்றன. அவை ஸ்நாநம் செய்வோரது பிரும்மஹத்தி முதலிய ஸகல பாபங்களையும் அகற்றுகின்றன. புண்டரம், களிங்கம், மகதம், தாக்ஷிணுத்யம், ஸௌவீரம், ஸௌராஷ்ட்ரம், மாலகம், ஸைந்தவம் மாத்ரம், ஆந்த்ரம், பாரஸீகம் முதலிய பற்பல தேசங்களிருக்கின்றன. அன்றியும் ஹேமகூட மலைமீது மஹாகூடம் என்றோர் சிகரமிருக்கிறது. அங்கு ஸ்படிக மயமான விமாநத்தில் பரமசிவன் பார்வதியுடன் வீற்றிருக்கிறார். அவரை தேவரிஷிகணங்கள் அன்றன்றும் அர்ச்சிக்கின்றன. அந்த மலைக்கு நூற்றுக்கணக்கான சிகரங்களுண்டு. ஸ்ரீ சிருங்கமென்ற இடத்தில் ஸ்ரீ தேவி வஸிக்கிறாள். இங்ஙனம் ப்லக்ஷ, சால்மலி, குச, க்ரௌஞ்ச, சாக,புஷ்கரமெனும், மற்ற ஆறுத்வீபங்களிலும் மலை நதிகளும் தேசங்களும் இருக்கின்றன. ஸ்வாயம்புவ, ஸ்வாரோசிஷ, உத்தம தாமஸ, ரைவத, சாக்ஷுஷ, மநுக்கள் என்ற ஆறுமநுக்களது காலஞ்சென்றது. தற்சமயம் வைவஸ்வத மநுவின் ஆக்ஷியாகும். ஒவ்வொரு மநுவின் காலத்திலும் இந்திரன் தேவகணம் ஸப்தர்ஷிகணம், வ்யாஸர் ஆகிய இவைகள் வெவ்வேறாக உண்டாகும்.

வேதவியாஸாவதாரங்கள். ஒவ்வொரு த்வாபரயுகத்திலும் வெவ்வேறு வேதவியாஸர் தோன்றி வேதத்தை நான்காக வகுத்துப் பதினெண் புராணங்களை இயற்றுகிறார். ஸ்வாயம்புவமநு, ப்ராஜாபதி, உசநஸ், பிருஹஸ்பதி, ஸூர்யன் மிருத்யு, இந்த்ரன், வஸிஷ்டர், ஸாரஸ்வதர்

*பதினன்கு மநுக்களது சரிதத்தையும் ஸ்ரீ மார்க்கண்டேய புராணத்தில் காணலாம். அதன்விலை அணு 6.

திரிதாமா, ரிஷபர், ஸுதேஜஸ், தர்மர், ஸுசக்ஷுஸ், த்ரய்யாருணி, தநஞ்ஜயன். கிருதஞ்ஜயன், ரிதஞ்ஜயன், பரத்வாஜர் கௌதமர், வாஜச்ரவஸ், நாராயணர், த்ரிணபிந்து, வால்மீகி ஜாதுகர்ணர், ஆகிய இவர்கள் முன் த்வாபரயுகங்களில் வேதவ்யாஸர்களாகஅவதரித்தார்கள்.இக்கலியுகத்திற்கு முன்சென்ற த்வாபரயுகத்தில், பராசரமாமுநி பரமசிவத்தை ஆராதித்து மஹாவிஷ்ணுவின் அம்சமான கிருஷ்ணத்வைபாயநர் என்ற வியாஸரைப் பெற்றார். அவர் வழக்கப்படியே ஒன்றாக இருந்த வேதத்தை நான்காகப் பிரித்தார். அவருக்கு அறிவிற் சிறந்த ஐந்து சிஷ்யர்களுண்டு. அவர்களில் பைலருக்கு ருக்வேதத்தையும், வைசம்பாயனருக்கு யஜுர் வேதத்தையும், ஜைமிநிக்கு ஸாம வேதத்தையும் ஸுமந்துவுக்கு அதர்வண வேதத்தையும் அஷ்டாதச புராணங்களை சூதருக்கும் உபதேசித்தார். ருக்வேதத்தில் இருபத்தோரு சாகைகளையும் யஜுர் வேதத்தில் நூறு சாகைகளையும் ஸாமவேதத்தில் ஆயிரம் சாகைகளையும் அதர்வண வேதத்தில் ஒன்பது சாகைகளையும் பிரித்து இயற்றினர். ப்ரணவத்திலிருந்தே ஸகல வேதங்களும் தோன்றின. அந்தப்ரணவம் பரமாத்மாவின் உடலாகும். அதை நன்றாக அறிந்து உபாஸிப்பவன் வேதத்தை அறிந்தவனாவான்.

## சிவாவதாரங்கள்.

ஒவ்வொரு கலியுகத்திலும் பரமசிவன் தனது அம்சத்தினால் பூமியில் ஓர்ரிஷியாக அவதரித்துத்தனது சிஷ்யர்கள் மூலம் வேதசாஸ்தரங்களை ப்ரசாரம் செய்கிறார். ஆதி கலியுகத்தில் ச்வேதர் என்ற முநிவராகத் தோன்றினர். அவர் ஹிமவானது சிகரத்தில் வஸித்தார். அவருக்கு ச்வேதர், ச்வேதசிகர் ச்வேதாஸ்யர் ச்வேதலோஹிதர் என நாலு முக்ய சிஷ்யர்களிருந்தனர். ஸுதாரர், மதநர், ஸுஹோத்ரர்,

கங்கணர், லோகாக்ஷி ஜைகீஷவ்யர் ததிவாஹர் ரிஷபர், பிருகு உக்ரர் அதிஸமர், பாலீ கௌதமர், வேததர்சீ, கோகர்ணர், குஹாவாஸர் சிகண்டத்ருக், யக்ஞமாலீ, அட்டஹாஸர் தாருகர், லாங்கலீ,மஹாயாமர் டிண்டமுண்டீச்வரர், ஸஹிஷ்ணு, ஸோமசர், மாநகுலீச்வரர், என்ற பெயர் கொண்ட மஹர்ஷிகளாக மற்றகலியுகங்களில் பரமசிவன் வதரித்தார். இருபத்தெட்டாவது கலியுகத்தில் நகுலீச்வரராகத் தோன்றிய பரமசிவத்திற்குக் குணிகர் கர்க்கர் மித்ரகர் ருரு என நான்கு சிஷ்யர்களிருந்தார்கள். இங்ஙனம் ஒவ்வோரவதாரத்திலும் நாலு சீடர்கள் தோன்றி வேதசாஸ்த்ரஸம்ப்ரதாயங்களை விருத்திசெய்து வந்தனர். இந்த வைவஸ்வதமன்வந்தரத்திற்குப் பிறகு ஸாவர்ண, தக்ஷஸாவர்ண, ப்ருஹ்மஸாவர்ண ருத்ர ஸாவர்ண ருச்யஸாவர்ண பௌத்யஸாவர்ண என்ற மநுக்கள்தோன்றி அவரவர் பெயரால் மன்வந்தரங்களைச் செய்யப்போகின்றனர். இந்த சரிதத்தை ஸ்நாநம்செய்து சுத்தமாய் தேவாலயம் நதீதிரம் முதலிய இடங்களில் படித்தால் இஹபரசுகம் உண்டாகும்.

---

## உத்தரார்த்தம்

### ஈச்வரகீதை

நைமிசாரண்ய வாஸிகளான மஹர்ஷிகள் ஸூத புராணிகரை நோக்கிப் பிறப்பிறப்பெனும் ஸம்ஸாரக்கடலைக் கடக்கும் மார்க்கத்தைக் கூறும்படி வேண்டினர். ஸூதர் ஞானமார்க்கம் ஒன்றே இதற்கு வழி என்று நினைத்து அதைக் கூற ஆரம்பித்தார். அச்சமயத்தில் எதிர் பாராமல் வேதவ்யாஸர் அங்கு தோன்றினர். உடனே அனைவரும் எழுந்து நின்று அவருக்கு நல்வரவு கூறி ஸாஷ்டாங்க

நமஸ்காரம் செய்தனர். வ்யாஸர் அவர்களை ஆசீர்வதித்து யோகக்ஷேமம் விசாரித்தார். சௌனகாதி முனிவர் தங்களுக்குத் தத்வோபதேசம் செய்யும்படி வேண்டினர். மஹர்ஷி பரமசிவனை வணங்கிக் கூறுகிறார். முன் ஒரு ஸமயம் ஸநத்குமாரர் ஸநகர் ஸநந்தநர் ஆங்கிரஸ் கணாதர் கபிலர் வாமதேவர் முதலிய மஹர்ஷிகள் தங்களுக்குள் வேதாந்த விசாரம் செய்தனர். கடவுள் யார்? ஜீவன் எத்தகையது ? மாயை எப்படிப்பட்டது? அதை அகற்றும் வழி யாது? என்ற விஷயத்தில் ஓர் முடிவிற்கு வராமல் பதரிகாச்ரமஞ் சென்றனர். அங்கு நரநாராயணராகத் தவம் செய்யும் பகவானைப் பணிந்துப்போற்றினர். இவர்களது துதியைக் கேட்ட நாராயணர் நரரூபத்தை மறைத்து சங்கசக்ரகதா பாணியாக அவர்களுக்குக் காக்ஷியளித்தார். மஹாவிஷ்ணுவின் கருத்திற்கிசைந்து மஹேச்வரனுமங்கு தோன்றினர். ஒரே ஸமயத்தில் ஒரே இடத்தில் இரு மூர்த்தியையும் தர்சிக்கும் பாக்யம் பெற்ற தவஸிகள் அளவிலா ஆநந்தமடைந்தனர். இரு மூர்த்திகளும் ஒருவரை யொருவர் தழுவி குசலங்கேட்பதைக் கண்ட முனிவர் மனமகிழ்ந்து மெய்மறந்தனர். இருவரையும் ஏககாலத்தில் பணிந்து போற்றினர். மஹாவிஷ்ணு மஹர்ஷிகளது எண்ணத்தை அறிந்து பரமசிவனைப் பார்த்துக்கூறினர். தேவ! முனிவர்கள் ஆத்மதத்வத்தை அறிய ஆவல்கொண்டு இங்குவந்தனர். ஞானவடிவமான நீரே இதைவிளக்க வல்லவர். ஆதலின் எனது ஸன்னிதியில் இதை அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். என்று பகவான் கூறியபடி பரமசிவன் உபதேசிக்க எண்ணினர். அதற்குள் ஆகாயத்திலிருந்து ஓர் அழகிய விமாநம் வந்தது. அதில் ஹரியும் ஹரனும் ஒருமிக்க அமர்ந்தனர். பரமசிவன் மஹர்ஷிகளுக்கு உபதேசம் செய்தார்.

## ஆத்மஸ்வரூபம்.

ஆத்மா என்பதே கடவுள் எனப்படும். அவன் எக்காலத்தும் எங்கும் உள்ளவன். அவன் நித்யாநந்தஸ்வரூபீ. அவன் எல்லாரிடத்திலும் அந்தர்யாமியாக விளங்குகிறுன். அவனது உண்மையை அறியாதவர் உடலை நானென்று கூறுவர். இரவும் பகலும் போலவும் நிழலும் வெயிலும் போலவும் ஆத்மாவும் உலகும் வெவ்வேறுனது. ஆத்மா அறிவுமயன். உலகம் ஜடமானது. ஆத்மாவிற்குமாறுதலில்லை. அழிவுமில்லை. உலகம் மாறிக்கொண்டே இருக்கும். அழியும். அவன் ஓர் கார்யத்தைச் செய்பவனல்ல. ஒன்றை அநுபவிப்பவனுமல்ல. கர்த்தா போக்தா என்பவை அந்தக்கரணத்தாலுண்டான தீமைகளாகும். நித்ய கர்மானுஷ்டத்தாலும் சிவாராதனையினுலும் எவரது அந்தக்கரணமலம் நீங்குகிறதோ அவர்களுக்கு நல்ல ஆசார்யன் கிடைப்பான். அவனிடம் ஆத்மஸ்வரூபத்தைப் பற்றிப் பலமுறை கேட்டு மநநம் செய்யவேண்டும். ஆத்மஸ்வரூபத்தை த்யானம் செய்யவேண்டும். நமது ஹிருதய கமலத்தில் சுடர்போல் விளங்கும் ஆத்மாவை மறைத்து நிற்பது அக்ஞாநமாகும். அதை அவித்யை, மாயை, தமஸ்ப்ரகிருதி என பல பெயர்களாலழைப்பார்கள். அது அழிந்தால் தான் ஆநந்தவடிவனுன ஆத்மாவைத் தர்சிக்கலாம். மநதை ஒருமைப்படுத்துவோர் விரைவில் மாயையை வெல்வர். சித்தத்தை ஏகாக்ரப் படுத்துவதே யோகம். ஆத்மஸ்வரூபத்தை அறிவதே ஞாநம். ஆத்மா கர்மவசத்தால் உடலைப் பெற்று மனதோடு கூடியிருக்கும்போது அதை ஜீவன் என்பார்கள். ஆத்மா ஜீவனுவதற்கு எப்போது கர்மாவைச் செய்ய ஆரம்பித்ததென்பதை அறிய முடியாது.

காலம் அநாதியானது. காலத்திற்கு எல்லோரும்

வசமானவர்கள். காலம் எவருக்கும் வசமாவதில்லை. அந்தக் காலமே கடவுள் வடிவமாயிருந்து எல்லோரையும் ஆட்டி வைக்கிறது. நமது சரீரத்திலிருக்குமந்த ஆத்மாவை ப்ராணன் ஜீவன் எனக் கூறுவர். இந்திரியங்களைவிட மநம் சிறந்தது. மனதைவிட அஹங்காரமும் அதைவிட மஹத்தும் மஹத்தைவிட அவ்யக்தமும் அவ்யக்தத்தைவிட புருஷனும் புருஷனைவிடப் பகவானும் சிறந்ததாகும். பகவானே ஜகத்திற்குக் காரணமானவர். அவரைவிடச் சிறந்தது சின்மயமான ஆகாசம். அதைவிடச் சிறந்தவன் அக்நி வடிவமான ஈச்வரன். அவனே சிவன். அவனைவிடச் சிறந்த பொருள் வேறொன்றுமில்லை. அச்சிவனை ஆராதித்தாலன்றி மாயை அகலாது. மாயை அகன்றாலன்றி சிவன் விளங்கான். அவனை அறிந்தாலன்றி மோக்ஷமில்லை.

சிவனைப் பக்தியால் ஸ்வாதீநப் படுத்தலாம். சிவ பக்தனுக்கு என்றுமழிவில்லை. அன்புடனளிக்கும் பத்ரம் புஷ்பம் பழம் ஜலம் முதலியவகைகளைச் சிவன் ஏற்றுபக்தனை ரக்ஷிக்கிறார். என்று கூறிப் பரமசிவன் ஆகாயத்தில் நின்று மஹாவிஷ்ணுவுடன் கூடித் தாண்டவமாடி விச்வரூபத்தைக் காட்டினார். மூன்று தேவர்களை மூன்று கண்ணாகக் கொண்டு புலித்தோலுடுத்தி சூலபாணியாக நடநமாடும் திவ்ய மூர்த்தியைக்கண்டு மஹர்ஷிகள் மிக ஸந்தோஷமடைந்தனர். ஸாஷ்டாங்கமாகப் பூமியில் விழுந்து பணிந்து துதித்தனர். தேவ தேவ! நீரே உலகத்தைப் படைத்து பரிபாலித்து அழிப்பவர். உம்மிடமிருந்து ஸகல வேத சாஸ்த்ரங்களும் தோன்றின. வேதங்களெல்லாம் உம்மையே போற்றுகின்றன. நீர் தான் ஸச்சிதாநந்தரூபம். உலகநிமித்தம் உடலைப்பெற்று ஸகுண மூர்த்தியாகத் தோன்றினவரும் நீரே. உமது விச்வரூபத்தைக்கண்டு உம்மிடத்தில் எங்களுக்கு அளவில்லாத பக்தி உண்டா

கிறது. எங்களிடம் தயைகூர்ந்து தங்களது மஹிமையைக் கூறவேண்டும் என்று முனிவர் வேண்டப் பகவானுரைத்தார்.

## சிவமாஹாத்ம்யம்.

பக்தர்களே! நானே காலவடிவமாக இருந்து ஜகத்தில் எல்லாக்கார்யமும் நடக்கும்படி செய்கிறேன். ஹிரண்ய கர்ப்பனைப் படைத்து அவனுக்குத் திவ்ய ஞானத்தைத் தந்தேன். அதனால் கல்பத்தின் ஆதியில் ரிக்யஜுஸ்ஸாம அதர்வமெனும் நான்கு வேதங்கள் அவருக்குத்தோன்றின. அதைக் கொண்டு அவர் உலகைப்படைக்கிறார். எனது வேறொரு மூர்த்தியான விஷ்ணு உலகைப்பரிபாலிக்கிறார். என்னிடமிருந்து தோன்றிய ருத்ரன் ப்ரளயகாலத்தில் உலகை ஸம்ஹாரம் செய்கிறார். என் அம்சத்தினால் உதித்த விநாயகர் என் விருப்பத்திற் கிணங்கி உலகை ரக்ஷிக்கிறார். பிரும்மவித்துக்களில் முதல் வரான ஸேநாபதி சுப்ரமண்யன் ஸ்வயம்புவாகத்தோன்றி உலக நன்மை செய்கிறான். மற்ற தேவர்களும் இங்ஙனமே எனது அம்சத்தினால் தோன்றி என் ஆணையை நிறைவேற்றுகின்றனர். இவ்வளவு பெரிய பதினான்கு லோகங்களையும் ஆங்குள்ள அளவற்ற ஜீவராசிகளையும் படைத்தவன் நானே. நாலுவர்ணத்தையும் வர்ணாச்ரம தர்மங்களையும் படைத்தவன் நான். ஆனாலும் என்னிடம் கர்த்ருத்வம் கிடையாது. மாயையினிடம் எனது கர்ப்பத்தை விடுகிறேன். அதனால் தான் உலகமுண்டாகிறது. என்னைச் சரணமடைந்தாலன்றி அபாரசக்திவாய்ந்த மாயையை ஜயிக்க முடியாது. எல்லோரது ஹிருதயகமலத்தில் நானிருந்தும் என்னை அறியாததற்குக் காரணம் அந்தமாயையே ஆகும். அடிக்கடி பிறப்பிறப்பை அளிக்கும் ஸம்ஸாரமே மிருத்யு எனப்படுவது. அதை யான் ஜயித்ததால் என்னை மிருத்யுஞ்ஜயன் என்பார்கள். எனக்கு ப்ரணவமே சரீரம்.

வாக்கிற்கும் மநதிற்கும் எட்டாதது எனது ரூபம். தீர்க்கவை ராக்யத்தை அடைந்த முநிவரில் ஆயிரத்திலொருவரே என்னைத் தர்சிக்கிறார். சந்த்ரஸூர்யர்களது ஒளி என்னைப் பிரகாசப்படுத்த சக்தியற்றவை. எனது ஒளியால் அவைப்ரகாசிக்கின்றன. அந்நமயப்ராணமய மநோமய விஜ்ஞாநமயஆநந்த மயமெனும் ஐந்து கோசங்களுக்கு மேலாயிருப்பது என் ஸ்வரூபம்.

## பிரும்மயோகம்.

எல்லா உபநிஷத்துகளும் என்னையே ப்ரும்மம் என்கின்றனன். என்னைச் சுலபமாக அடையும் வழிக்கு ப்ரும்மயோகம் என்று பெயர். பிரும்மயோகத்தில் அபாவயோகம் மஹாயோகம் என்று இருவகை உண்டு. மநோவிருத்தியைச் சூன்யமாக்கி ப்ரபஞ்சத்தில் காணப்படும் பொருள்களெல்லாம் இல்லாதவை என்று எண்ணுவது அபாவயோகமெனப்படும். அபாவயோகத்தை அனுஷ்டிப்போர் விரைவில் என்னைக்காண்பர். தன்னையே நிர்மலமான பரமசிவன் என்று எண்ணி ஏகாக்ர சித்தமாக என் நிஷ்டையில் நிற்பது மஹாயோகமாகும். மஹாயோகத்தை அப்யஸிப்பவர் எனது ஆநந்தஸ்வரூபத்தில் கலந்து மோக்ஷஸுகத்தைப் பெறுவர். யம நியம ஆஸந ப்ராணாயாம ப்ரத்யாஹார த்யாந தாரண ஸமாதி எனும் அஷ்டாங்கயோகம் ப்ரும்மயோகத்திற்கு ஸாதநமாகும். அஹிம்ஸை, ஸத்யம், திருடாமை, பிரும்மசர்யம், அபரிக்ரஹம், என்பவைகள் யமத்தைச் சார்ந்தவைகள். மநஸ் வாக்கு சரீரம் ஆகிய முக்காரணங்களாலும் எவருக்கும் ஹிம்ஸை செய்யாதிருத்தல் அஹிம்ஸை எனப்படும். வேதசாஸ்த்ரங்களில் கூறியபடி யாகத்தில் செய்யும் ஹிம்ஸையும் அஹிம்ஸையேயாகும் முக்காரணங்களாலும் ஸ்த்ரீபோகம் செய்யாமலிருப்பது பிரும்மசர்யம். ஆப

த்து வந்தகாலத்தில் கூட ஒருவரிடமும் எந்தப் பொருளையும் வாங்காமலிருப்பது அபரிக்ரஹமாகும். தபஸ்வேதாத்யயநம் ஸந்தோஷம் சௌசம் ஈச்வர பூஜை ஆகிய இவைகளுக்கு நியமமெனப் பெயர். உபவாஸமிருத்தலே தபஸாகும். வேதாந்தம், சதருத்ரீயம் ப்ரணவம் முதலியவைகளே வேதமாம். அவைகளை ஜபிப்பதே வேதாத்யயநமெனப்படும். அது வாசிகம் உபாம்சு மாநஸிகமென மூவ்வகைப்படும். பிறர் காதில்படும்படி சொல்வது வாசிகமாகும். இரு உத டுகள் மாத்ரம் அசையும்படி பிறர் காதில் விழாமல் மந்தரங் களைச் சொல்வது உபாம்சுவாகும். மந்த்ரார்த்தத்தை மனதால் நினைத்து ஆவர்த்தி செய்வது மாநஸிகமாகும். வாசிகத்தைவிட உபாம்சுவும் உபாம்சுவை விட மாநஸிகஜ பமும் சிறந்ததாகும். தற்செயலாகக்கிடைத்தபொருளைப் போதுமென்று நினைப்பது ஸந்தோஷமாகும். சௌசம் பாஹ்யமென்றும் ஆப்யந்தரமென்றும் இருவகைப்படும். மண் ஜலங்களால் சரீரசுத்தி செய்வது பாஹ்ய சௌசமாகும் மதம் பொறாமை முதலியவைகளை விட்டு மநம்சுத்தமாயிருப் பது ஆப்யந்தரசௌசமாகும். வாக்கினுல் துதித்தும் மனதினுல் நினைத்தும் சரீரத்தால் அர்ச்சித்தும் சிவனிடத் தில் அசஞ்சலமான பக்திசெய்வது சிவபூஜையாகும்.

ப்ராணயாமம், மந்தம் மத்யமம் உத்தமம் எனமூவ் வகைப்படும். நமது உடலிலுள்ளவாயுவுக்கு ப்ராணன் என்று பெயர். அதை அடக்குவது ப்ராணயாமமாகும். பனிரண்டுமாத்ராகாலம் வாயுவை அடக்குவது மந்தமாகும். இருபத்துநான்கு மாத்ராகால மடக்குவது மத்யமமாகும். முப்பத்தாறுமாத்ராகாலமடக்குவது உத்தமமாகும். உள்ளே இருக்கும் மூச்சை ஒரு மூக்கால்விட்டுக் கொண்டே ஓர் பிராணயாமம் செய்ய வேண்டும். அது ரேசகமெனப்படும். ப்ராணனை அடக்கிக்கொண்டே ஓர் ப்ராணயாமம் செய்தல்

வேண்டும். அது கும்பக மெனப்படும். மற்றோர் மூக்கால் வாயுவை உள்ளே இழுத்துக்கொண்டே ஓர் ப்ராணயாமம் செய்வது பூரகமெனப்படும். பூரகம்கும்பகம் ரேசகம் என்ற முறையில் மந்தமத்யம உத்தம ப்ராணயாமங்களைச் செய்து அப்யாஸம் செய்தால் பலவகைநன்மைகளைப் பெறலாம். வெளியில்திரியும் இந்திரியங்களை அடக்குவது ப்ரத்யாஹார மெனப்படும். ஹிருதயத்திலோ நாபியிலோ தலையிலோ மனதை நிறுத்துவது தாரணை எனப்படும். ஓரிடத்தை மன தால் பற்றிக்கொண்டு ஓரே எண்ணத்தை எண்ணி வேறொன்று குறுக்கிடாமல் கவனிப்பது த்யாநமெனப்படும். ஒரு இடத்தையும் அவலம் பிக்காமல் அதன் பொருளை மாத்ரம் ஏகாகாரமாக எண்ணுவது ஸமாதி எனப்படும். பனிரண்டு ப்ராணயாமம் ஓர் தாரணைக்குச் சமமாகும். பனி ரண்டு தாரணை ஓர்த்யாநமாகும். பனிரண்டுத்யாநம் ஓர் ஸமாதி எனப்படும். சீதபாதை உஷ்ணபாதை கொசுக்கடி பலத்த காற்று முதலியவைகளில்லாத சுத்தமான இடத்தில் உட்கார்ந்து ப்ராணயாமத்தை அப்யாஸம் செய்யவேண்டும். பர்வதத்தின்குஹை நதீதீரம் தேவாலயம் ஜநக்கூட்ட மில் லாத உள் முதலிய சுத்தமான இடங்கள் ப்ராணயாம அப் யாஸம் செய்யச் சிறந்தவை. பாசுபதயோகம். ஸ்வஸ்திகாஸ நமல்லது பத்மாஸநத்திலமர்ந்து விநாயகர் பரமசிவன் ஸ்வ குரு முதலியவர்களை நமஸ்கரித்துக் கோணமல் உட்கார்ந்து தனது மூக்கின் நுனியைப்பார்த்துக் கொண்டு யோகாப் யாஸம் செய்யவேண்டும். மனக்கலக்கத்துடனும் கோபத்துட னும் யோகாப்யாஸம் செய்யக்கூடாது. தனது சிகையி லிருந்து பணிரண்டங்குலத் திற்குமேல் எட்டிதழுள்ள ஓர் வெண்தாமரைப்புஷ்ப மிருப்பதாகவும் அதுதர்மமெனும் கிழங்கிலிருந்து உண்டானதாகவும் தாமரையின் நடுவிலுள்ள கர்ணிகையில் ஸ்வர்ண வர்ணமாய் ஓங்காரவடிவமாய் பரம

சிவன் ப்ரகாசிப்பதாகவும் த்யாநம் செய்யவேண்டும். இதைப் பாசுபதயோகமென்றும் கூறுவார்கள். ப்ரம்மசர்யம் அஹிம் ஸைஸத்யம் சௌசம் தபஸ் தமம் ஸந்தோஷம் ஆஸ்திக்யம் ஆகிய இவைகள் இந்தப் பாசுபதயோகத்திற்கு அங்கங்களா கும். இவ்வங்கங்களில் ஏதேனுமொன்று குறைந்தாலும்விரு தத்திற்குக் குறைவில்லை. ஆயினும் பூர்ணஅங்கத்துடன் மனம் ஒருவகைப்பட்டு இந்தயோகத்தை அனுஷ்டித்தால் சீக்ரமாக என்னைத்தர்சித்து மோக்ஷஸுகத்தை அனுபவிப்பர். இந்த யோகத்தினுல் பேராநந்தமடைந்தவர் பலருண்டு.

பக்தியும் ஸாதநமும். இந்தயோகத்தை அனுஷ்டிக்க முடியாதவர் பக்தியினுல் என்னை அடையலாம். எப்போதும் சுத்தனுகயிருந்து மனதினுல் என்னை ஸதா த்யானம் செய் வது உயர்ந்தபக்தியாகும். அஹங்காரத்தை விட்டுஸகலப் ராணிகளிடமும் அன்புகொண்டு எவரையும் வெறுக்காமல் கிடைத்ததைக்கொண்டு ஸந்தோஷமடையும் பக்தனே என க்கு மிகவும் பிரியமானவன். எவரிடமும் எதையுங் கோருத வனும் நிந்தாஸ்துதிகளைஸமமாக எண்ணுபவனும் ஸ்திர புத்தி உள்ளவனுமானபக்தன் எனக்கு மிகப்ரியமானவன். என்னை எப்பொழுதும் மனதினுல் த்யாநம் செய்து கொண்டு எந்தக்கர்மாவைச் செய்தாலும் அது பந்தத்தை அளிப்ப தில்லை. எனது பக்தர்களிடமிருக்கும் மாயையை எனது அறிவெனும் ஒளியால் நாசம் செய்கிறேன். ஒரேஜன்மத்தில் ஓயாது லிங்கார்ச்சனைசெய்வோர் மோக்ஷமடைவது நிச்சயம். ஜலத்திலோநெருப்பிலோ ஆகாயத்திலோ எனதுஸ்வ ரூபத்தை விளக்கக்கூடியலிங்கத்தை நினைத்துப் பூஜைசெய் வோர் க்ஷேமமடைவர். கர்மமார்க்கத்தைத்தழுவியவர் அக்னி யைலிங்கமாகநினைத்துப் பூஜைசெய்யவேண்டும். வித்வான் கள் ஆகாயத்திலும் ஸூர்யமண்டலத்திலும் என்னைத் யாநம் செய்து பூஜிப்பார்கள். சிலை மரம் முதலியவைகளால்

சிவலிங்கத்தைச் செய்து ஸாமான்யமானமனிதர் பூஜிக்க வேண்டும். யோகிகள் ஹிருதயகமலத்தில்லிங்கத்தை வைத்து அர்ச்சிப்பார்கள். ஞானம்வரும்வரை சுத்தஉணவை உட் கொண்டு ஏகாந்தமான இடத்திலமர்ந்து மனதை அடக்கி ப்ரணவம் அல்லது ருத்ரத்தை ஜபம் செய்யவேண்டும். அல்லது மரணம் வரும்வரையில் வாராணஸியில் வஸிக்க வேண்டும். அல்லது தானிருக்கு மிடத்திலேயே தனக்கு சாஸ்த்ரம்விதித்த வர்ணாச்ரமதர்மங்களை ஒழுங்காக அநுஷ் டித்து வந்தால் சிவஞானம் தானே உதயமாகும். வேதசாஸ் திரங்களில் மிகரஹஸ்யமாகக் கூறப்பட்ட இம் மூன்றுமார்க் கத்தைச்சாமான்யரிடம் கூறக்கூடாது. எவன் மனம் சாந்த மாக இருக்கிறதோ? எவன் பக்தனோ? எவன் வேதசாஸ்த் ரங் கூறிய கர்மாவை விடாது அனுஷ்டிப்பவனோ? எவன் கர்வமற்றவனோ? எவன்குருவிற்குப் பணிவிடை தவராமல் செய்கிறானோ அவனுக்கே இதைக்கற்பிக்கவேண்டும். மஹா விஷ்ணுவும் நானும் ஒன்றே என்றறிந்து இருவரிடமும் பேதபுத்தியில்லாமலிருப்பவன் எவனோ அவனுக்கு இந்தர ஹஸ்யத்தைக் கூறவேண்டும். எனக்குச் சிவன் விஷ்ணு என இரண்டுசரீரங்களுண்டு. இதில் எந்த மூர்த்தியை இதர மூர்த்தி த்வேஷமில்லாமல் பூஜித்தாலும் மோக்ஷமடையலாம். எந்த மூர்த்தியை வெறுத்தாலும் மோக்ஷமடைய முடியாது. ஹரிஹரன்என்ற இரண்டு பேரையும் ஒன்றாக எண்ணிபக்தி செய்பவன் மூர்க்கனானாலும் பண்டிதனானாலும் பிராமண னானாலும் சண்டாளனானாலும் அவனை ஸம்ஸாரபந்தத்தி லிருந்து யான் விடுவிப்பேன். என்றுகூறிப் பரமசிவன் மஹா விஷ்ணுவை ஆலிங்கனம் செய்து விட்டுத் திடீரென மறைந்து விட்டார். உடனே வைகுண்ட நாதனும் தனது நிஜரூபத்தை விட்டுப் பதரி காச்ரமத்தில் தவம் செய்யும் நாராயணரிஷி யாகத்தோன்றினார். உபதேசம் பெற்ற முனிவர்களைப்

பார்த்து நாராயணமுனி, மஹர்ஷிகளே! மிக அருமையான ஈச்வர ஞானத்தை ஈச்வரனிடமிருந்தே கேட்டீர்கள். இதை மிக்கபக்தர்களான சிஷ்யர்கள் மூலம் லோகோபகாரமாகப் பிரசாரம் செய்யுங்கள். என்று கூறிமறைந்தார். பிறகு மஹாவிஷ்ணுவின் உத்திரவுபடி ஸநத்குமாரர் ஸம்வர்த்தருக்கு உபதேசித்தார். ஸநந்தநர் புலஹருக்கும், புலஹர் கௌதமருக்கும், அங்கிரஸ் பாத்வாஜருக்கும், கபிலர் ஜைகீஷவ்யருக்கும் ஸநகர் பராசாருக்கும் இதை உபதேசித்தார்கள். இதைத்தான் தேவகியின் வயிற்றில் ஜநித்த வாஸுதேவன் அர்ஜுநனுக்குரைத்தார். ஆதலால் ஸர்வலோகசரண்யனுன பரமசிவனைத் திரிகரணத்தினுலும் பூஜை செய்யுங்கள். என்று வேதவ்யாஸர் சௌநகாதி முனிவர்களுக்குரைத்தார். அதைக்கேட்ட மஹர்ஷிகள் மஹேச்வரனிடத்தில் அதிகபக்தி கொண்டார்கள். பாற்கடலைக் கடைந்த போது இந்த ஈச்வரகீதையை வ்யாஸர், கூர்மரூபியான பகவான் இந்திரனுக்குச் சொன்னபோது கேட்டிருந்தார். இதைப் பக்தியுடன் படிப்பவரும் படிக்கக் கேட்பவரும் பாபத்தை விட்டுப்பிரும்ம லோகஞ்செல்வர்.

## வ்யாஸகீதை

சௌநகாதிமஹர்ஷிகள் வேதவ்யாஸரை வணங்கிக்கர்மயோகத்தைப்பற்றிக் கூறும்படிவேண்ட அவர் அங்ஙனமே உபதேசித்தார். மஹர்ஷிகளே, வேதத்தில் வேதியர்களுக்கு விதித்தபடி கர்மாவைச் சொல்கிறேன் கேளுங்கள். இது ஸகலபாபங்களையும் அகற்றவல்லது. பலமஹர்ஷிகளுடைய முன்னிலையில் முன்னர் மநு இதை உபதேசித்தார். எல்லோருமிதை அனுஷ்டித்து நன்மைபெற்றனர். பிராமணச் சிறுவர்களுக்கு ஏழு அல்லது எட்டாவது வயதில் உபநயநம் செய்துவைக்கவேண்டும். பிறகு பிரும்மசர்யத்திற்குரிய

தண்டம் மேகலே கிருஷ்ணஜிநம் முதலியவைகளே ஏற்று பிக்ஷைஎடுத்துக் கொண்டு குரு குலத்தில் வேதாப்யாஸம் செய்யவேண்டும். பருத்தியினல் செய்யப்பட்ட யக்ஞோப வீதத்தை எப்போதும் தரித்துக்கொண்டிருக்க வேண்டும். அக்நிசாலே பசுக்கொட்டகை ஹோமம் ஜபம் வேதாத்யயநம் போஜநம் பிராமணர் முந்நிலே குருபூஜை ஸந்த்யா காலம் ஸாதுஸங்கம் முதலிய இடங்களில் எப்போதும் யக்ஞோப வீதம் அணிந்து கொண்டே இருக்கவேண்டும். இது பிரும்ம சாரிகளுக்கு கிருஷ்ண ஜிநத்திஞலும் கிருஹஸ்தர்களுக்கு வஸ்த்ரத்திஞலும்யக்ஞோபவீதம் தரித்துக்கொள்ள வேண்டு மென்ற விதியாகும். காலந்தவருமல் ஸந்த்யைஜபம் ஹோமம் முதலியவைகளேச் செய்யவேண்டும். குரு பெற்றோர் பெரி யோர் முதலியவர்களுக்குத் தனது பெயர் கோத்ரம் ஸூத் ரம் வேதம் முதலியவைகளேக்கூறி நமஸ்காரம் செய்யவேண் டும். அவர்கள் ஆயுஷ்மான்பவஸௌம்ய என்று கூறி அவன் சர்மாவின் கடைசி எழுத்தின் முந்திய எழுத்தில் ப்லு தமும் முடிவில் அகாரமும் சொல்லவேண்டும். இதற்குப் ரத்யபிவாதந மென்று பெயர். இதைக்கூற அறியாதவ ருக்கு அபிவாதநம்சொல்லக்கூடாது. அபிவாதநம்சொல்லக் கூடியவர்களுக்கு அதைச் சொன்னபின் கைகளே மாருக வைத்துக்கொண்டு பெரியாரின் இடது காலே நமது இடது கையாலும் வலது காலே வலதுகையாலும் தொடவேண்டும்.

பிராமணனேக்குசலமா என்றும் க்ஷத்ரியனே அநாமயமா என்றும் வைச்யனே க்ஷேமமா என்றும் சூத்ரனே ஆரோக்யமா என்றும் விசாரிக்கவேண்டும். உபாத்யாயர் பிதா ஜ்யேஷ்டப் ராதா அரசன் மாமன் மாமனுர் பாட்டனுர் வர்ணஜ் யேஷ்டன் தந்தையுடன் பிறந்தவர் ஆகிய இவர்கள் எல்லோ ரும் குருவாவர். தாய் பாட்டி குருபத்நீ தாய் தந்தைகளு

டன் பிறந்த பெண்கள் மாமியார் அண்ணன் மனைவி ஆகிய இவர்கள் வரும்பொழுது எழுந்துநின்று மரியாதைசெய்து நமஸ்கரிக்கவேண்டும். அவர்களுடன் ஸமமான ஆஸநத்தில் உட்காரக்கூடாது. அவர்களுடன் வாயாடக்கூடாது. அவர்களை த்வேஷிக்கவும்கூடாது. எவ்வளவு புண்யசாலியாக யிருந்தாலும் இவர்களை த்வேஷிப்பவன் அழிவான். இவர்களில் எல்லோரையும்விட மிக்கமேலானகுரு தாயாவாள். தந்தைதாய் வித்யோபதேசஞ் செய்பவன் ஜ்யேஷ்டப்ராதா அன்னமளிப்பவன் ஆகிய இந்தஐவரும் விசேஷ குரு ஆவார்கள். இஹபர நன்மையை நாடுவோர் இவர்களைப் பூஜிக்க வேண்டும். இவர்களிலும் நம்மைப் பெற்றெடுத்ததாயும் தந்தையும் சிறந்தவராவர். அதிலும் தந்தையைவிடத் தாய் மிகச்சிறந்தவள். அவள் நமக்குச் செய்த உதவிக்கு நமது ஜன்மமெல்லாம் அவளுக்கு உழைத்தாலும் போதாது. தாய்க்குச்சமமான வேறு தெய்வம் கிடையாது. ஆதலின் நித்யநைமித்திக கர்மங்களைவிட்டுக் கூட தாய்க்குப் பணிவிடைசெய்யவேண்டும். பெற்றோருத்திரவில்லாமல்வேறெந்த தர்மத்தையுஞ் செய்யக்கூடாது. மோக்ஷம்பெற முயற்சிக்கத் தான் அவர்கள் உத்திரவு அவச்யமில்லை. இதுதான் ஸூக்ஷ்மமானதர்மமாகும். தனது மூத்தஸஹோதரனை அவமதித்தவன் நரகம் செல்வான். யக்ஞம் செய்தவர் தீக்ஷிதர் எனப்படுவர். அவர் நம்மைவிட வயதிற் சிறியவராய் இருந்தாலும் அவர் பெயரைச்சொல்லக்கூடாது. அவரைப் பெரியவராக மதித்து அவர் வந்தபோது எழுந்து நின்று நல்வரவுகூறி அவரை நமஸ்கரித்துப் பூஜிக்கவேண்டும். அர்த்தஞானத்துடன் வேதமறிந்த பெரியார் செய்யும் வேள்வி உலகிற்கு நன்மையை உண்டுபண்ணும். ஆதலாலவரை எல்லோரும் பூஜிக்கவேண்டும். பிராமண க்ஷத்ரிய வைச்யர்களுக்கு அக்கினிதான் குரு. நாலுவர்ணத்தவருக்கும்

பிராமணனேகுரு. பெண்மக்களுக்குக் கணவனேகுரு. எல்லோருக்கும் விருந்தாளிகுரு ஆவான்.

வித்யை புண்யகர்மா தபஸ்பந்துத்வம் செல்வம் ஆகிய இவைகள் ஒருவரைப் பூஜிப்பதற்கேற்ற காரணங்களாகும். இவைகளில் முன்னே இருப்பவைபின்னரிருப்பவைகளைவிட சிறந்தவைகளாம். இவை மூன்றுவர்ணங்களுக்குள் கவனிக்கத்தக்கவை. பிராமணன் ஸ்த்ரீ ராஜா கண்ணில்லாதவன் கிழவர் சுமைதூக்கிவருபவர் ரோகி பலமில்லாதவர் ஆகிய இவர்களுக்கு மற்றவர் வழியைவிட்டுத்தாங்கள் விலகிவழி கொடுக்கவேண்டும். பிரும்மசாரி பிக்ஷை எடுத்த அன்னத்தை முதலில் குருவினிடம்கொடுத்து அவர் உத்தரவு கொடுத்தபின் அதைப்புஜிக்கவேண்டும். பதிதன் வேதமறியாதவன் தேவபூஜைசெய்யாதவன் முதலியவர்கள் வீட்டில் பிக்ஷைவாங்கக்கூடாது. பங்காளிபந்து முதலியவர்கள் வீட்டில் பிக்ஷை வாங்கக்கூடாது. சரீரசுத்தியுடனும் மனச்சுத்தியுடனும் மௌனமாகக் கிழக்கல்லது மேற்குமுகமாக உட்கார்ந்து சாப்பிடவேண்டும். இப்படி நியமத்துடன் புஜிப்பவர் உபவாஸமிருந்த பயனைப்பெறுவர். வடக்கு முகமாக உட்கார்ந்து சாப்பிடலாகாது. புஜிப்பதற்கு முன் காலை அலம்பி இரண்டுமுறை ஆசமநம் செய்து இலையில் உட்காரவேண்டும். சாப்பிட்டபிறகு இரண்டு முறை ஆசமநம் செய்யவேண்டும்.

ஆசமநம். தூங்கி எழுந்தபிறகும் குடிக்கத்தக்கதைக் குடித்தபிறகும் ஸ்நாநம் வழிநடை உதட்டைத்தொடுதல் வஸ்த்ரத்தைக்கட்டிக்கொள்ளுதல் ரேதஸ் மூத்ரம் மலம் ஆகிய இவைகளைக் கழித்தல் தகாதவர்களுடன் பேசுதல் காரித்துப்பல் முதலியவைகளைச் செய்தபிறகும் அத்யயநாரம்பகாலத்திலும் சண்டாளன் மிலேச்சன் முதலியவர்களுடன் பேசியபின்பும் எச்சிலுடனிருக்கும் ஸத்ரீசூத்ரர்க

ளுடன் பேசினாலும் எச்சிக்கையுடனிருப்பவனைத் தீண்டினா லும் கண்ணீரல்லது ரத்தம் சிந்தியபிறகும் கச்சமல்லது பெண்கள் இக்குழுடிச்சு கேசம் பழையவஸ்த்ரம் ஆகிய இவைகளைத்தொட்டாலும் உடனே ஆசமனம் செய்ய வேண்டும். உஷ்ணம் உப்புநுரை முதலிய தோஷமில்லாத ஜலத்தில் ஆசமநம் செய்யவேண்டும். மேற்கல்லது தெற்கு திக்காகச் செய்வதும் தலை அல்லது கழுத்தில் வஸ்த்ரத்தைப் போர்த்துக்கொண்டு செய்வதும் கச்சமில்லாமல் செய்வதும் காலலம்பாமல் செய்வதும் தலைகுட்டை அல்லது பாது கையை அணிந்து செய்வதும் அவிழ்ந்தமயிருடன் செய்வ தும் ஜலத்தில் நின்று கொண்டும் தாரையாகவிழும் ஜலத்தில் செய்வதுமான ஆசமநம் பயனற்றதாகும். இடதுகையி னால் எடுத்த ஜலத்தினாலும் ஆஸநத்தில் உட்கார்ந்து கொண்டும் முழங்கால்களுக்கு வெளியில் கைகளை வைத்துக் கொண்டும் வைச்யர் சூத்ரர் முதலியவர்கள் கொடுத்த ஜலத் தாலும் ஏதாவது ஓர் ரஸங்கலந்த ஜலத்தாலும் விரல்பட்ட ஜலத்தாலும் ஆசமநம் செய்யக்கூடாது. மநதை வேறிடத் தில் வைத்துக்கொண்டு ஆசமநம் செய்யக்கூடாது. பிரா மணர்கள் ஹிருதயம் வரை போகத்தக்க அளவுள்ள ஜலத்தா லும் க்ஷத்ரியர் கழுத்து நினையும் ஜலத்தாலும் வைச்யர் வாய் நினையும் ஜலத்தாலும் ஆசமநம் செய்யவேண்டும். ஸ்த்ரீ சூத்ரர்கள் ஜலத்தைத்தொட்டால் போதும். மும்முறை ஜலமருந்தி விரல்களின் அடிபாகத்தால் உதடுகளைத்துடைக்க வேண்டும். கட்ட விரலாலும் மோதிர விரலாலும் இரு கண்களைத் தொடவேண்டும். கட்டவிரலாலும் ஆள்காட்டி விரலாலும மூக்கைத் தொடவேண்டும். சுண்டிவிரலாலும் கட்டைவிரலாலும் காதுகளைத் தொடவேண்டும். எல்லா விரல்களாலும் கைகளையும் உள்ளங்கையால் ஹிருதயத்தை யும் தொடவேண்டும். தலையையும் நாபியையும் எல்லாவிரல்

களாலும் அல்லது கட்ட விரலால் தொடலாம். மும்முறை ஆசமநம் செய்தால் பிரும்மா விஷ்ணு சிவன் என்ற மும்மூர்த்திகளும் ஸந்தோஷப் படுகின்றனர். உதட்டைத்துடைப்பதால் கங்கையும் யமுனையும் கண்களைத்தொடுவதால் சந்த்ர ஸூர்யர்களும் மூக்கைத் தொடுவதால் அச்விநிதேவர்களும் காதுகளைத் தொடுவதால் அக்நியும் வாயுவும் ஹிருதயத்தைத்தொடுவதால் ஸகலதேவர்களும் தலையைத்தொடுவதால் வேத புருஷனும் ஸந்தோஷமடைகிறார்கள். ஆசமநம் செய்யும் பொழுது அந்த ஜலம் நமது வேறெந்த அவயவங்களில்பட்டாலும் அது அசுத்தமாகாது. மதுபர்க்கம் ஸோமரஸம் தாம்பூலம் பழம் கிழங்கு கரும்பு முதலியவைகளைப் பக்ஷித்தால் ஆசமநம் செய்யவேண்டுவதில்லை. அதிகமான அன்ன மல்லது ஜலத்தை எடுத்துச் செல்லும் பொழுது நமது சரீரத்தில் எச்சில் பட்டால் அந்த பொருள்களைக் கீழே வைத்துவிட்டு நாம் ஆசமநீயம் செய்துவிட்டு அவைகளை ஜலத்தினால் ப்ரோக்ஷித்து விட்டால் அவை சுத்தமாகிவிடும்

எந்தபதார்த்தத்தையுங் கையில் வைத்துகொண்டு ஜலமலங்களைக்கழிக்கக்கூடாது. ஆனால் ஆரண்யம் இரவு ஜலமில்லாத இடம் திருடன் புலி முதலியவர்களால் கஷ்டமுண்டாகும் காலம் ஆகிய ஸமயங்களில் கையிலுள்ள பொருளுடன் ஜலங்கழித்தால் அவை அசுத்தமாவதில்லை. ஜலமலங்களைக் கழிக்கும்போது தலையை வஸ்திரத்தால் மூடிக்கொண்டு பகலானால் வடக்குமுகமாகவும் இரவானால் தெற்குமுகமாகவும் உட்காரவேண்டும். ஜலமலங்களை நேராகப் பூமியில் விடாமல் உலர்ந்த சிறகுகளைப்போட்டு அதன்மேல் அவைகளைக் கழிக்கவேண்டும். நிழல் கிணறு குளம் நதி கோசாலை ஆலயம் தெரு வழி பஸ்ம அக்கினி வீடு சுடுகாடு உழுதபூமி மரம் புத்து கோவில் புல் முதலிய இடங்களில் ஜலமலங்களை விடக்கூடாது. நின்று கொண்டோ வஸ்த்ர

யில்லாமலோ மலைமீதோ புழு முதலிய ஜந்துக்களுள்ள பள்ளத்திலோ உத்யாநத்திலோ காலில் பாதுகைகளை அணிந்து கொண்டோ நடந்து கொண்டோ வாஹநத்தின் மீதிருந்துகொண்டோ நதி நக்ஷத்ரம் ஜலம் சந்த்ரஸூர்ய அக்நிகுருப்ராஹ்மணன் முதலியவைகளுக்கு எதிர்முகமாகவோ ஜலமல விஸர்ஜநம்செய்யக்கூடாது. நல்லமண்ணையும் ஜலத்தையுங்கொண்டு துர்நாற்றம் போகும் வரை ஜலமலத் வாரங்களையும் கைகால்களையும் சுத்தி செய்யவேண்டும்.

சிஷ்யதர்மம். சிஷ்யன் எப்போதும் சுசியாயிருந்து கொண்டு ஆசார்யர் கூப்பிட்டபிறகு கல்விகற்கப்போக வேண்டும். உட்காரென்றுகுரு கூறிய பிறகு நமஸ்காரம் செய்து விட்டு அவருக்கு எதிர்முகமாக உட்காரவேண்டும். குரு நிற்கும்போழுது சிஷ்யன் உட்காரக் கூடாது. குருவின் எதிரில் படுக்கக்கூடாது. குருவின் பெயரைக்கூறக் கூடாது. அவர் எதிரில் இஷ்டமானபடி உட்காரக்கூடாது. குருவைப்போல் நடிக்கக்கூடாது. குருவை நிந்திக்குமிடத்திலிருக்கக்கூடாது. இரண்டுகாதுகளையும் மூடிக்கொண்டு எழுந்து வேறிடம் செல்லவேண்டும. தூரத்திலிருந்து குருவைப் பூஜிக்கக்கூடாது. பெண்கள் எதிரிலும் கோபத்துடனும் குருவை அர்ச்சிக்கக்கூடாது. குருவிற்கு வேண்டிய ஜலம் தர்ப்பை புஷ்பம் ஸமித் முதலியவைகளைத் திநந்தோறும் தவறாமல் கொண்டு வந்து கொடுக்கவேண்டும். அவர் வஸ்த்ரத்தைத் தோய்த்து அவர் சரீரத்தை அழுக்குப்போக தேய்க்கவேண்டும். அவரது படுக்கை பாதுகைபாத்ரம் முதலியவைகளைச் சிஷ்யன் உபயோகிக்ககூடாது. குருவின் உத்திர வின்றி எங்கும் போகக்கூடாது. அவர் எதிரில் கோட்டுவாய் விடுவது விளையாட்டாகப் பேசுவது கழுத்தில் வஸ்திரத்தைக் போட்டுக் கொள்வது, முதலிய காரியங்களைச் செய்யக்கூடாது. அவருடன்ஸமமான ஆஸநத்தில் உட்காரக்கூடாது.

சந்தநம் மாலை கண்ணுடி முதலிய போகவஸ்துக்களை உபயோகப் படுத்தக்கூடாது. பெண்களிருக்கு மிடத்திற்குப் போகக்கூடாது. அதிகநித்திரை பாட்டு ஆட்டம் சூதாட்டம் ஜநாபவாதம் கோள் சொல்லல் ப்ராணி ஹிம்ஸை முதலிய துர்க்குணங்களைப் பிருஹ்மசாரி விடவேண்டும். ரஹஸ்யமாக உட்கார்ந்து கொண்டு எவருடனும் பேசக்கூடாது. மநதினுல் கூட குருத்ரோகத்தை எண்ணக்கூடாது. ஆனுல் கர்வங்கொண்டு அகார்யத்தைச் செய்யும் குருவை த்யாகம் செய்துவிடலாம். குரு மனைவியையும் குரு புத்ரர்களையும் குருவைப்போல் எண்ண வேண்டும். குருபத்நிக்கு மையிடுவது எண்ணெய் தேய்ப்பது கை கால்களைப் பிடிப்பது தலைவாறுவது முதலிய காரியங்களைக் குருபத்நிசெய்யச் சொன்னுலும் செய்யக்கூடாது. குருபத்நி பால்யமாக இருந்தால் நமஸ்காரம் செய்து அவள் காலைத்தொடக்கூடாது. நன்ருகப் பணிவிடை செய்து வரும் நல்ல சிஷ்யனுக்கு குரு ஓராண்டிற்குமேல் வித்யை கற்பிக்காமலிருந்தால் நரகமடைவார். சுத்தனுக இருந்துகொண்டு மூன்று ப்ராணுயாமம் செய்து வேத ஆரம்பத்திற்கு முன்னும் பின்னும் ப்ரணவத்தைக்கூறி சிஷ்யன் அத்யயநம் செய்யவேண்டும். ஸகலப்ராணிகளுக்கும் வேதமென்பது கண்ணுகும். ஒவ்வோர் வேதத்திலும் ரிக் யஜுஸ்ஸாமம் என்ற வேதபாகங்களிருக்கின்றன. ரிக்கை நியமத்துடன் அத்யயநம் செய்தால் பாலினுல் ஹோமம் செய்து தேவதைகளை ஸந்தோஷப்படுத்தியது போலாகும். அங்ஙனமேயஜுஸ்ஸை அத்யயநம் செய்தால் தயிரால் தேவர்களுக்கு ஆஹுதி செய்வதுபோலாகும். ஸாமத்தை அத்யயநம் செய்தால் நெய்ஆஹுதி செய்தது போலாகும். இவைகளால் ஸந்தோஷமடைந்த தேவர்கள் அத்யயநம் செய்பவனது இஷ்டத்தைப்பூர்த்தி செய்கின்றனர். வேதாகமங்களையும் இதிஹாஸ புராணங்களையும் பாராயண செய்

தால் ஒருதினம் செய்தபாராயணம் ஒருமாஸம் வரை தேவ தைகளை ஸந்தோஷப்படுத்தும். இங்ஙனம் தினந்தோறும் ப்ரும்மசாரி கிருஹஸ்தன் வாநப்ரஸ்தன் ஆகிய மூவரும் செய்யவேண்டும். இதேப்ரஹ்மயக்ஞ மெனப்படும்.

காயத்ரீ. தினந்தோறும் காலை வேளையில் மிக சுத்தனாக காயத்ரியை ஜபம் செய்ய வேண்டும். ஆயிரம் முறை ஜபம் செய்வது உத்தமம். நூறு ஆவர்த்தி ஜபம் செய்வது மத்யம மாகும். அதம பக்ஷமாக ஆபத்துக் காலத்தில்கூடப் பத்துமு றையாவது ஜபம் செய்யவேண்டும். இது ஜபயக்ஞ மெனப்ப டும். ப்ரஹ்மா ஒரு ஸமயம் காயத்ரியின் மஹிமையை அறிய ஓர் புரத்தில் நான்கு வேதங்களையும் மற்ருேர் புரத்தில் காய த்ரியையும் வைத்துத்துலையில்நிறுத்தார். காயத்ரியே மிக்க பாரமுள்ளதாகக் காணப்பட்டது. பிரும்மா விஷ்ணு ருத்ரன் எனும் மும்மூர்த்திகளே மூன்று வ்யாஹிருதிகளாக ஜநித் தார்கள். ஆதலின் அவைகளை முதலில் கூறவேண்டும். அதற்கும் முன்னுதாக ப்ரணவத்தை உச்சரிக்க வேண்டும். மூன்ருவதாக மூன்று பாதமுள்ள வேதமாதாவான காயத் ரியை ஜபிக்க வேண்டும். காயத்ரியின் அர்த்தத்தை அறிந்து எழுத்து தப்பில்லாமலும் அபஸ்வரமில்லாமலும் சுசியாக ஜபிப்பவர் நற்கதி அடைவது ஸத்தியம். காயத்ரியைவிட சிறந்த மந்த்ரம் உலகில் இல்லை. வேதாத்யயநம். ச்ராவண மாஸ பௌர்ணமியில் அல்லது ஆஷாடப்ரோஷ்டபதிகளில் வேதங்களுக்கு உபாகரணம் என்ற ஸம்ஸ்காரஞ் செய்ய வேண்டும். தை பௌர்ணமியில் உத்ஸர்ஜநமெனும் ஸம்ஸ் காரம் செய்ய வேண்டும். மாகமாஸ சுக்லப்ரதமையில் வேதங்களுக்கு ப்ரீணநம் என்ற கர்மாவைச்செய்யவேண்டும். ஆவணி முதல் தைவரை வேதாத்யயநம் செய்வதற்கு ஏற்ற காலமாகும். சுக்லபக்ஷங்களில்தான் வேதங்களைக் கற்க வேண்டும். கிருஷ்ண பக்ஷங்களில் வேதஅங்கங்களைப் பயில

வேண்டும். வேதத்தைக் கற்கத்தகாத அஷ்டமி சதுர்தசி பர்வம் ப்ரதமை முதலிய சில தினங்களுண்டு. இவைகள் அநத்யயந காலமெனப்படும். அச்சமயம் மனிதர்களுக்கு பலஹீநம் ஏற்படுகிறது. அந்த ஸமயத்தில் நாம் அத்யயநம் செய்தால் ராக்ஷஸர்கள் நம்மைக் கஷ்டப்படுத்துவார்கள். ஆதலால் அநத்யாயகாலங்களில் வேதங் கூறக் கூடாது. வேதாங்கங்களுக்கும் இதிஹாஸ புராணங்களுக்கும் பர்வம் ஒன்றே அநத்யாயமாகும். வேதத்தைக்கற்று அர்த்த முணராமலிருப்பவன் சூத்ரனுவான். ஸாவித்ரீ சதருத்ரீயம் வேதாங்கம் இவைகளைத் திநந்தோறும் பஸ்மஸ்நாநம் செய்த பின் ஜபிக்க வேண்டும்.

கிருஹஸ்ததர்மம். நற்குலத்திலுதித்தலக்ஷணம் நிறைந்த பெண்ணைத்தர்மம் செய்யவும் ஸத்ஸந்ததியை உண்டுபண்ண வும் விவாஹம் செய்து கொள்பவன் கிருஹஸ்தனுவான். ஸ்வர்ண குண்டலம், குடைபாதுகை இரண்டுயக்ஞோபவீதம் வேணுதண்டம் வெண்மையான வஸ்த்ரம் முதலியவைகளை அவன் தரிக்கவேண்டும். காரண மில்லாமல் கேசத்தையும் நகங்களையும் வளர்க்கக்கூடாது. ஷஷ்டி அஷ்டமி ஏகாதசீத் வாதசி அமாவாஸ்யை பௌர்ணமீ ஆகிய இந்த திநங்களில் ஸ்திரீயுடன் சேரக்கூடாது. கிருஹ்ய கர்மாக்களையும் யக் ஞங்களையும் செய்யவேண்டும். தன்னைவிட உயர்ந்தவர்க ளுடன் ஸ்நேஹம் செய்யவேண்டும். ஈச்வராராதனம் தவறுமல் செய்யவேண்டும். மனைவிக்கு ஆபரணம் செய்து கொடுக்கவேண்டும். தான் செய்த தர்மத்தை எவரிடமும் சொல்லக்கூடாது. பாபத்தை மறைக்கக் கூடாது. ஸர்வ ப்பிராணிகளிடமும் அன்பு கொள்ள வேண்டும். தனது பிதா பிதாமஹர் முதலியவர்கள் கைப்பற்றி வந்த தர்மத்தை யும் ஆசாரத்தையும் விடாமல் அனுஷ்டிக்க வேண்டும். காயத்ரீஜபம் ச்ராத்தம் தந்தைதாய் பணிவிடை நித்யகர்மா

இவைகளை விடாமல் செய்பவர் பிரும்மலோகஞ் செல்வர். வீட்டிலிருப்பதால் ஒருவன் கிருஹஸ்தனுக மாட்டான். அவ்வாச்ரமத்திற்குரிய கர்மாக்களைத் தவறுமல் செய்தால்தான் கிருஹஸ்தனுக முடியும். க்ஷமை தயை விக்ஞாநம் ஸத்யம் இந்திரியங்களை அடக்குதல் மனதை அடக்குவது வேதாந்த ஞானம் ஆகிய இவைகளை யுடையவனே பிராமணனுவான். கூடியவரையில் நமக்கு சாஸ்த்ரம் விதித்தகர்மாக்களை இடைவிடால் செய்து, செய்யக்கூடாதென்று நிஷேதம் செய்த கார்யங்களை விட்ட கிரகஸ்தன் ஸம்ஸாரபந்தத்திலிருந்து விரைவில் விடுபடுவான்.

பிறர் நமக்குத் தீங்கிழைத்தபோது அவரிடம் நமக்கு உண்டாகும் கோபத்தை அடக்குவதே க்ஷமையாகும். தனக்குண்டாகும் துன்பத்லதக்கண்டு எப்படித் தன்மனம் இளகுகிறதோ, அதேபோல் துன்பப்படுவரைக்கண்டு இளகுவது தயையாம். இதுதான் ஸகல தர்மங்களுக்கும் முதல் ஸாதநமாகும். பதினுன்கு வித்தைகளைக்கற்பது விக்ஞாநமெனப்படும். ஸாக்ஷாத் மஹாதேவனை உண்மையாக உணர்வதே வேதாந்த ஞானமாகும். தர்மானுஷ்டாநம் செய்வதற்கு ஸாதனமாக இருப்பதால் இவ்வுடலை நன்றாக கவனித்து ரக்ஷிக்க வேண்டும். இந்த தர்மாத்யாயத்தில் கூறிய விஷயத்தைப் படிப்பவரும் கேட்பவருமே நற்கதி பெறுவாரெனில் இதை அனுஷ்டித்தவரைப்பற்றிக் கேட்கவேண்டுமா? த்ருணமாயினும் சாகமாயினும் மண்ணுயினும் அல்லது மற்ற எந்த அற்பப் பொருளாயினும் அவைகளைப் பிறரிடம் வாங்காமலிருப்பது நலம். ராஜாவிடமிருந்தும் சூத்ரனிடமிருந்தும் தாநம் வாங்கக்கூடாது. புஷ்பம் சாகம் தீர்த்தம் காஷ்டம் கிழங்கு த்ருணம் பழம் ஆகிய இவைகளைக் கூட அதன் சொந்தக்காரர் கொடுக்காமல் நாமே எடுத்துக் கொண்டால் அது திருடேயாம். இவைகள் தர்மத்திற்காக

எடுக்கபடுமானல் யஜமாநன் கொடுக்காவிட்டாலும் திரு டாகாது. வழியிலிருக்கும் எள்ளு பயர் முதலியவைகளில் பசிக்காக ஓர் பிடியஜமானைக் கேளாமல் எடுத்துப் புசித்தால் அது பாபமாகாது. தர்மத்தை வியாஜமாகக் கொண்டு மேற்கண்ட பொருள்களைத் தனக்கு உபயோகித்துக்கொள் பவர் நரகம் செல்வர். பாஞ்சராத்ரர்களையும் பாசுபதர்களையும் வாக்கினல்கூட பூஜிக்கக்கூடாது. தேவத்ரோஹத்தை விட குருத்துரோகம் கோடிமடங்கு அதிக நரகத்தை அளிக்கும். அதை விட நாஸ்திக்யம் கோடிமடங்கு அதிகபாபத்தை அளிக்கும். தகாதவர்களுடன் மணஞ்செய்வதாலும் விஹித கர்மங்களை விடுவதாலும் வேதாத்யயநம் செய்யாததாலும் பொய் பரஸ்த்ரீகமநம் சாப்பிடத்தகாததைச் சாப்பிடுவது வேத மறியாதவனிடம் தாநம் செய்வது ஆகிய இவைகளா லும் நல்ல குலம் துஷ்குலம் ஆகிவிடும். பாபிகளும் வியாதிக ளும் நிறைந்த இடத்தில் வஸிக்கக் கூடாது. நதிக்கு ஐந்துமை யில் தூரத்திற்கப்பாலும் சண்டாளர் வஸிக்கு மிடத்திலும் வஸிக்கக்கூடாது. சண்டாளர் பதிதர் முதலியவர்களுடன் ஒரேபடுக்கையில் படுத்து ஒரே ஆஸநத்தில்உட்காருவது ஸம பங்க்தியில் உட்கார்ந்துண்பது அவர்களது பாத்ரத் துடன் நமது பாத்ரங்களைச் சேர்த்துவைப்பது அவரது பக் வான்னத்தை எற்பது பூஜை செய்து வைப்பது அவருடன் சேர்ந்து வேதங்கற்பது அவன் வீட்டில் சாப்பிடுவது அவரிடம் வித்தைகற்பது மற்றவருடன் ஸமமாக அவ ருக்கு பூஜை செய்வது ஆகிய இவைகள் வர்ண ஸாங்கர் யத்தை உண்டுபண்ணும். ஸாங்கர்ய முண்டாகதக்க காரியங் களைச் செய்பவருடன் அவர் ஒரே ஜாதியைச்சார்ந்தவ ராக இருந்தால் கூட அவருடன் ஒரு பங்கதியில் உட்கார்ந்து சாப்பிடக்கூடாது. ஒருஸமயம் தற்செயலாக அவர்களுடன் உட்கார்ந்து புஜிக்கும்படி நேர்ந்தால் அத்தகையவருக்கும்

நமக்குமிடையில் அக்நி பஸ்மம் ஜலம் வாசர்படி தூண் சுவர் ஆகிய இவ்வாறில் ஏதேனும் ஒன்றிருந்தால் பங்க்தி வேருகி விடும். ஸமபங்க்தியில் உட்கார்ந்த பாபம் வராது. பசுங் கன்று கட்டை அவிழ்த்துக்கொண்டு தன் தாயை ஊட்டும் பொழுது அதன் ஸொந்தக்காரனிடம் அதைச் சொல்லக் கூடாது. தீட்டுள்ளவர்களுடன் கூட ஒரே இடத்தில் வசிக்கக்கூடாது. பஹிஷ்டைகளுடன் பேசக்கூடாது. பாபிகளுடைய பாபத்தைச் சொல்லக்கூடாது. சொன்னல் அந்தபாபம் நம்மைச்சாரும். ஒருவரிடம் இல்லாத குற்றத்தைச்சொல்லி அவர் கண்ணீர் விடும்படிச் செய்தால் அந்தக் கண்ணீர் அபவாதம் சொன்னவருடைய பசுக்களேயும் புத்ரர்களேயும் கொல்லும்.

உதயாஸ்தமனமாகும் பொழுது சந்த்ரஸூர்யர்களேப் பார்க்கக் கூடாது. கிரஹணம்பிடித்த பொழுதும் ஆகாச மத்தியிலிருக்கும் போதும் ஜலத்திலும் கண்ணுடியிலும் அசுத்தனுக இருந்து கொண்டும் துணியால் மறைத்துக் கொண்டும் சந்த்ரஸூர்யர்களேப் பார்க்கக்கூடாது. வஸ்த்ரமில்லாதவர்களேயும் சிருங்காரத்திற்குப் பிறகு ஸ்நாநம் செய்யாதிருப்பவர்களேயும் மல ஜலங்களேயும் எச்சில் இலேயையும் பார்க்கக்கூடாது. தைலமல்லது ஜலத்தில் விழும் நமது நிழலேயும் உணவை உட்கொண்டிருக்கும் மனேவியையும் பார்க்கலாகாது. மனேவியுடன் உட்கார்ந்து சாப்பிடக்கூடாது. ஜலம் மலங்கழிக்கும்போதும் கோட்டுவாய் விடும்போதும் தும்பும்போதும் கைகால்களேத்தன்னிஷ்டப்படி வைத்துக் கொண்டிருக்கும் போதும் மனேவியைப் பார்க்கக்கூடாது. தன்னேத்தான் அவமதித்துக்கொள்ளலாகாது. ஒருவரிடம் சென்று தன் ஏழ்மையை வெளியிடக்கூடாது. நகங்களால் பூமியைக்கீறக்கூடாது. ஒருநதியிலிருந்துகொண்டு மற்ருேர் நதியையும் ஓர் மலேயிலிருந்துகொண்டு மற்ருேர்மலேயையும்

பற்றிபேசக்கூடாது. வஸ்த்ரமில்லாமல் ஜலத்திலிறங்கக் கூடாது. இரண்டு கைகளாலும் தலையைச் சொரியக்கூடாது. தலையில் தேய்த்துக்கொண்ட எண்ணையை வழித்து உடம்பில் தடவிக்கொள்ளக்கூடாது. இரண்டுகைகளாலும் ஜலத்தைக்குடிக்கக்கூடாது. கைகளாலும் கால்களாலும ஜலத்தை அடிக்கக்கூடாது. லௌகிகமான ஸ்தோத்ரங்களால் தேவர்களைத் துதிக்கக்கூடாது. மடியில் வைத்துக்கொண்டு எதையும் தின்னக்கூடாது. பற்களால் நகத்தைக்கடிக்கக் கூடாது. தூங்குகிறவர்களை எழுப்பலாகாது. காலால் காலைத் தேய்க்கக் கூடாது. வெங்கலபாத்ரத்தினல் காலை அலம்பக்கூடாது. அக்கினியில் காலைக் காச்சுவதும் தேவாலயம் அக்நி பிராமணன் பசு சந்த்ர ஸூர்யர் முதலியவர்களுக்கு நேராகக் காலை நீட்டுதலும் அக்நியைக் காலால் தாண்டுவதும் வாயால் ஊதுவதும் மயிருக்குமேல் தெரியும் படியாக புஷ்பம் தரித்துக்கொள்வதும் பின் வாசற்படிவழியாக நுழைவது முதலியவைகளைச் செய்தால் பாபமுண்டாகும். ஆதலின் இவைகளை விடவேண்டும். அக்நியைக் கையால் தொடுவதும் வஸ்தரம் முதலியவைகளால் விசிறுவதும் பாபமாகும். அக்நி பகவானது முகத்திலிருந்தே உண்டானதால் முகத்தினலேயே ஊதி அக்நியைப் பற்றவிட வேண்டும். ஆனல் நேராகவாயினல் ஊதுவது கூடாதென சாஸ்த்ரங் கூறுவதால் குழாய் மூலமாக ஊதவேண்டும். தனியாக ஸபைக்குப் போகக்கூடாது. தீர்த்தமும் பாதுகையும் இல்லாமல் வெகுதூரம் வழிநடக்கக்கூடாது. பசு அக்நி பிராமணர் இவர்களுக்கு இடையில் போகக்கூடாது. துடப்பத்தினல் தள்ளப்பட்ட குப்பை தூளியும் வஸ்த்ரஜலமும் நமது சரீரத்தில் பட்டால் மிக்கபாபம் ஸம்பவிக்கும். அரசன் ஆட்டக்காரன் தச்சன் கூலியாள் ஓர் கூட்டம் தாசி ஆகிய இவர்களது அன்னத்தை புஜிக்கலாகாது. குலா

லன் ஸ்வர்ணகாரன் திருடன் நாஸ்திகன் மனைவிக்கு அடங்கிய புருஷன் வைத்யன் தீட்டுள்ளவன் புத்ரனில்லாத ஸ்தரீ, பூஜையில்லாதவன் ஆகிய இவர்கள் அன்னத்தை உண்ணுதல் பாபமாகும். பூஜைவைச்வதேவமில்லாவீடு ஆசார்யனுடையதாயினும் அங்கு புஜிக்கலாகாது. மனிதரது பாபம் அன்னத்தைப்பற்றி நிற்கின்றது. ஆதலின் நாம் ஒருவனது அன்னத்தைப் புசித்தால் அவன் பாபத்தை ஏற்றுக்கொண்டதாகும். புண்ணுக்கு சொரக்காய் வெங்காயம் வெள்ளைப் பூண்டு முதலியவைகள் புஜிக்கத்தக்கதல்ல. இரவில் எள்ளையும் தயிரையும் நெல்லிக்காயையும் சாப்பிடக்கூடாது. நல்ல எண்ணமில்லாமல் கொடுக்கும் பொருள், கேசமல்லது புழு உள்ள அன்னம் பசு மனிதன் நாய்முதலியவைகள் முகர்ந்தது சண்டாளனல்லது பஹிஷ்டாஸ்திரீ பார்த்தது குஷ்டரோகமுள்ளவன் தீண்டியது கன்றில்லாத பசுவின் பால் கன்று பிறந்த பத்துநாட்களுக்குள் கறந்தபால் எருமைப்பால் ஆட்டின் பால் ஆகிய இவைகளைப் புஜிக்கலாகாது. காலை ஸ்நாநம் இம்மை மறுமை என்ற இரண்டு ஸுகங்களையுங் கொடுக்கும். மஹரிஷிகள் ப்ராத ஸ்நாநத்தினாலேயே மஹர்ஷியானார்கள். ஸ்நாநம் செய்யாமல் எந்தகர்மாவையும் செய்யக்கூடாது. ஜலத்தில் முழுகி ஸ்நாநம் செய்வது வாருணஸ்நாநமெனப்படும். தலைக்கு ஸ்நாநம் செய்யமுடியாதபோது கழுத்து வரையிலாவது ஸ்நாநம் செய்யவேண்டும். அதையுஞ் செய்ய சக்தி இல்லாத காலத்தில் கீழ் கண்டவைகளில் ஒன்றைச் செய்யலாம். அதற்குறிய மந்தரங்களைக்கூறி தர்ப்பையால் ஜலத்தைப்ரோக்ஷித்துக்கொள்வது பிரம்மஸ்நாநமாகும். பாதாதிகேசம்வரை அதற்குரிய மந்திரத்தை ஜபித்து பஸ்மத்தைப் பூசிக்கொள்வது ஆக்நேயஸ்நாநமாகும். பசுக்களின் பாத தூளி நம்மேல் படும் படி செய்வது வாயவ்ய ஸ்நாநமாகும். வெய்யிலிருக்கும் போது

பெய்யும்மழையில் நனைவது திவ்ய ஸ்நாநமெனப்படும். பரமாத்மாவைத்யானம் செய்வது யோகி ஸ்நாநமாகும். மநதைச் சுத்தமாக வைத்திருத்தல் ஆத்மதீர்த்த ஸ்நாந மெனப்படும்.

பாலுள்ள மரத்திலிருந்து நடுவிரல் அளவுபருமனுள்ள பன்னிரண்டங்குலம் நீளமுள்ளதுமான பற்குச்சியால் பல்லைத் துலக்கவேண்டும். மாலதீ, நாயுருவி, பில்வம், கரவீரம், ஆகிய இவைகளிலிருந்து பற்குச்சி எடுப்பது ச்லாக்யமானது. அமாவாஸ்யை ஏகாதசி சிராத்ததிநம் முதலிய நாட்களில் பற்குச்சியைக் கொண்டு பல்தேய்க்கலாகாது.

ஆயுர் பலம் யசோவர்ச்ச: ப்ரஜா: பசு வஸூநிச பிரும்ஹ ப்ரஞாஞ்ச மேதாஞ்ச த்வம் நோதேஹி வநஸ்பதே. என்ற சுலோகத்தைச் சொல்லி பற்குச்சி ஒடிக்க வேண்டும். பல் தேய்த்த பிறகு பதினாறுமுறை வாய் கொப்பளித்து மூன்று முறை ஆசமநம் செய்து ஸ்நாநத்திற்கு ஸங்கல்பம் செய்யவேண்டும். ஸ்நாநம் செய்த பிறகு உலர்ந்ததும் சுத்தமாக யிருப்பதுமான வஸ்த்ரத்தை விதிப்படி அணிந்து மேற்கு முகமாக காலலம்பி ஆசமநம் செய்து கிழக்கு முகமாக உட்கார்ந்து காலை ஸந்தியா வந்தநத்தை அனுஷ்டிக்க வேண்டும். ஸந்த்யை என்பவள் மூன்று தத்துவத்திலிருந்து உண்டானவள். ஜகத்தையெல்லாம் படைப்பவள். மாயையைக் கடந்தவள். அவளை ஸூர்ய மண்டலத்தினுள்ளே த்யாநம் செய்யவேண்டும். இந்த ஸந்த்யாதேவியின் உபாஸனையினால் தான் மஹர்ஷிகள் பெருமைபெற்றனர். இதைவிட்டு வேறு எந்தக் கர்மங்களைச் செய்தாலும் அவைகள் பலனைத்தரா. ஸந்த்யையை உபாஸிப்பவன் பரமாத்மாவைப் பூஜித்தவனாவான். ஆயிரம் முறைகாயத்ரியை ஜபிப்பது உத்தமமாகும். நூறு முறை ஜபிப்பது மத்யமமாகும். பத்து முறை ஜபிப்பது மிக்க அதமமாகும். காயத்ரீ ஜபம் செய்த பின் ஸூர்யோபஸ்

தாநம் செய்யவேண்டும். பின்னர் ஸூர்யஹ்ருதயம் (பத்து சுலோகங்களிங்கு காணப்படுகின்றன) என்றதுதியைக்கூறி ஸூர்ய நமஸ்காரம் செய்யவேண்டும். இது மிக்க அபூர்வ மான தியாநமாதலின் புத்ரன் நல்ல சிஷ்யன் முதலியவர் களைத் தவிர மற்றவர்களுக்கு உபதேசிக்கத்தக்கதல்ல. பின் னர் அக்நிஹோத்ரம் ஔபாஸநம் ஸமிதாதாநம் முதலிய வைகளை அதற்கேற்ற அதிகாரிகள் ஹோமம் செய்யவேண்டும். தர்ப்பையும் யக்ஞோபவீதமுமில்லாமல் செய்யப்படும் கர்மா ராக்ஷஸனைச்சேரும். அதன் பிறகு தேவபூஜை செய்து பெரியோரை நமஸ்காரம் செய்யவேண்டும். அதன் பிறகு வேதாப்யாஸம் செய்து சிஷ்யர்களுக்கு வேதத்தைக்கற்பிக்க வேண்டும். பின்னர் ஜீவனத்திற்காக வேண்டியகார்யங்களை முடித்துக்கொண்டு மாத்யான்ஹிக ஸ்நாநத்திற்குச் செல்ல வேண்டும். ஸமுத்ரஸங்கமமாகும் நதிகள் ஸ்நாநத்திற்கு மிக்க ச்லாக்யமானவை. அவை கிடைக்காவிட்டால் இயற்கையாய மைந்த தடாகம் பொது ஜநங்களால் ஏற்படுத்தப்பட்ட குளம் ஏரி முதலியவைகளில் முழுகலாம். பிறருக்குச் சொந்தமான தடாகத்திலும் கூபத்திலும் ஸ்நாநம் செய்யக்கூடாது. வேறு வகையில்லாமல் அங்கு ஸ்நாநம் செய்யும்படி ஏற்பட்டால் அந்த குளத்திலிருந்து ஐந்துபிடிமண்ணை எடுத்துக் கரையில் போட்டு விட்டு ஸ்நாநம் செய்யவேண்டும். மாத்யாந்ஹிகஸ் நாநத்தை ஸாவகாசமாகச் செய்யவேண்டும். பச்சைநெல் லிக்காயளவு சுத்தமண்ணை எடுத்துக் கொண்டுதலையை ஒரு முறையும் இடுப்புவரை இரண்டு முறையும் கால்வரை மூன்று முறையும் பாதங்களை ஆறுமுறையும் அந்த மண்ணால் தேய் க்கவேண்டும். நெல்லிக்காயளவு கோமயத்தைக் கொண்டும் உடம்பைத்தேய்த்து அகமர்ஷணம் வருணசூக்தம் முதலிய மந்த்ரங்களைச்சொல்லி ஸ்நாநம் செய்யவேண்டும். அச்வமே தத்தைப் போல் அகமர் ஷணமந்த்ரம் எல்லாப்பாபங்களையும்

நீக்கவல்லது. ஸ்படிகம் இந்தராக்ஷம் ருத்ராக்ஷம் முதலிய வைகளால் ஜபமாலை செய்து கொண்டு அதனால் ஜபம் செய்ய வேண்டும். ஜபகாலத்தில் எவருடனும் பேசக்கூடாது. கோணலாகவோ சாய்ந்தோ அங்கங்களை அசைத்துக் கொண்டோ ஜபம் செய்யக்கூடாது. சுசியான தேசத்தில் ஏகாந்தமாக உட்கார்ந்து ஏகாக்ரமாக ஜபம் செய்யவேண்டும். பேசிக்கொண்டோ சண்டாளர்பதிதர் நாய் முதலியவைகளைப் பார்த்துக்கொண்டோ ஜபம் செய்தால் அந்த ஜபத்தின் பயனை ராக்ஷஸர் அடைவர். சண்டாளபதிதர்களுடன் ஜப காலத்தில் பேசும்படி நேர்ந்தால் ஸ்நாநம் செய்துவிட்டு மறு படி ஜபம் செய்யவேண்டும். மாத்யான்ஹிக ஜபத்திற்குப் பிறகு பிரம்மயக்ஞம் செய்து தேவரிஷி பித்ருதர்ப்பணம் செய்யவேண்டும். பின்னர் பிரும்மா சங்கரன் ஸூர்யன் மா தவன் தனது குலக்ரமமாக ஆராதிக்கப்பட்டு வந்த இஷ்ட தேவதை . ஆகிய இவர்களைப் பூஜிக்கவேண்டும். ஜலத்தில் எல்லாத்தேவதைகளும் வஸிப்பதால் அந்த ஜலத்தைக் கொண்டு தேவதைகளுக்கு அபிஷேகம் செய்யவேண்டும். நல்ல புஷ்பங்களைப்பறித்து பக்தியுடனும் ஆசாரத்துடனும் அர்ச்சிக்கவேண்டும். புருஷ ஸூக்தத்தைப் போன்ற மந்திரமும் விஷ்ணுவைப் போன்ற தெய்வமும் கிடைப்ப தரிது. ஆதலால் புருஷஸூக்தத்தை ஜபித்துப் பிரதிதிநமும் மஹாவிஷ்ணுவைப் பூஜிக்க வேண்டும். அதேபோல் மஹா ருத்ரமும் மஹாதேவனும் மிகச் சிறந்ததானதால் ருத்ரத்தை ஜபித்துப்பரமசிவத்தையும் ஆராதிக்கவேண்டும். ஹம்ஸமந்தி ரத்தினால் ஆகாசமத்தியில் பரமசிவத்தைத் தியாநம் செய்து ஸூர்யனைத்தர்சிக்கவேண்டும்.

ப்ரதிதிநம் பல ஜீவராசிகளை ஆஹாரத்திற்காக கிருஹஸ் தன் ஹிம்ஸை செய்யவேண்டியிருக்கிறது. அதில் சாகங் களை நறுக்குவதாலும் தான்யங்களைப் பொடி பண்ணுவ

தாலும் அடுப்பு எரிப்பதாலும் வீட்டைப் பெருக்குவதாலும் ஜலத்தை உபயோகிப்பதாலும் உண்டாகும் பாபங்களுக்குப் பஞ்சஸூநா என்று பெயர். அந்த ஐந்து வகைப் பாபங்களும் அகலுவதற்காக பஞ்சமஹாயக்ஞம் செய்ய வேண்டும். தேவயக்ஞம் பித்ருயக்ஞம் பூதயக்ஞம் மநுஷ்ய யக்ஞம் பிரும்மயக்ஞம் ஆகிய இவைகளுக்குப் பஞ்சமஹா யக்ஞம் என்று பெயர். இதில் ஸகல தேவர்களுக்கும் ஸகலப் ராணிகளுக்கும் பூஜை நடப்பதால் இதை வைச்வதேவம் என்றும் கூறுவதுண்டு. பஞ்சமஹாயக்ஞத்தைச் செய்வதற்கு முன் பிரும்மயக்ஞம் என்ற வேதாத்யயநத்தைச் செய்யாமலிருந்தால் வைச்வதேவத்தில் மநுஷ்யயக்ஞம் ஆன பிறகு வேதாத்யயநம் செய்யவேண்டும். நாய் சண்டாளன் பதிதன் காக்கை முதலிய பாமபாப ஜன்மங்களுக்கும் வைச்வ தேவ விதிப்படி பலி அளிக்கவேண்டும். இராக்காலங்களில் மந்திரமில்லாமல் மனைவியே பலிகளைக்கொடுக்கலாம். பித்ருக்களை உத்தேசித்து திநந்தோறும் ஒரு ஸத்ப்ராமணனுக்கு அன்னமளிக்க வேண்டும. அது நித்ய ச்ராத்தமெனப் படும். ஓர் கபள அன்னத்திற்கு பிக்ஷை என்று பெயர். நாலு கபளங்களுக்கு அக்ரயம் என்று பெயர். வேதமறிந்த ச்ரோத்ரியனுக்கு அக்ரய பாகம் திநந்தோறு மளிக்கவேண்டும். வயிறுநிறைய அன்ன மிடுவது ஹந்தா எனப்படும். மநுஷ்யயக்ஞத்திற்காக ஒரு பிராமணனுக்கு ப்ரதிதிநம் அன்னமளிக்கவேண்டும் வைச்வதேவம் ஆன பிறகு வாசற் படியில்நின்று கொண்டு லோப மில்லாமல் ஓர் பசுகறக்கும் நேரம் வரை அதிதி யாராவது வருகிறாரா என்று பார்க்க வேண்டும். அச்சமயம் வரும் அதிதியைத் தெய்வமாக எண்ணிப் பூஜிக்கவேண்டும். அதிதி கிடைக்கா விட்டால் பசுவிற்கு அன்னம் கொடுத்து விட்டுப் பலருடன் உட்கார்ந்து மௌனமாக புஜிக்கவேண்டும். பஞ்சமஹாயக்ஞம்

செய்யாமல் புஜிப்பவன் மிருக ஜன்மத்தைப் பெறுவான். தேவ பூஜை செய்யாமல் உண்பவன் ஸூகர நரகத்தை அடைவான். போஜநத்திற்கு அங்கமாக ஒரு முறை காலை அலம்பி ஆசமநம் செய்து விட்டுக் கால்கள் பூமியில் படும்படி ஆஸநத்தில் உட்கார்ந்து அன்னத்தை நிந்திக்காமல் புஜிக்க வேண்டும். கிழக்கு முகமாக உட்கார்ந்து புஜித்தால் ஆயுஸ்ஸூம் தெற்கு முகமாக உட்கார்ந்தால் யசஸ்ஸூம் மேற்கு முகமாக உட்கார்ந்தால் லக்ஷ்மியும் விருத்தியாகும். வடக்குமுகமாக உட்கார்ந்தால் கடன் விருத்தியாகும். இரண்டுகால் இரண்டுகை முகம் ஆகிய இவ்வைந்தும் ஈரமாக இருக்கும் போது புஜித்தால் அது உபவாஸத்திற்கு ஸமம் என மநு கூறினர்!

விதிவழுவாமல் அன்னத்தை ப்ரதிதிநமும், தினம் தனக்குக் குறைவில்லாமல் அன்னம் கிடைக்கும்படிப்ரார்த்தித்து ப்ராணாக்நிஹோத்ரம் செய்ய வேண்டும். அது ஆஹூதியானதால் உப்பு முதலிய ரஸங்கலக்காமல் பல்லால் கடிக்காமலும் இரண்டு ஆஹூதிகள் வாயிலேயே ஒன்ருகச் சேராமலும் ஆஹூதிகளுக்குக்குறித்த அளவு அன்னத்தை உட்கொள்ள வேண்டும். உத்தர ஆபோசநத்திற்கு முன் நமது சரீரத்தை ரக்ஷிப்பதற்கு வேண்டிய அளவு சாஸ்திரம் நிஷேதம் செய்யாத பதார்த்தங்களை உட்கொண்டு வயிற்றை நிறப்ப வேண்டும். எச்சில் கையை அலம்பி ஆசமநம் செய்யும் வரை எவர்மேலும் படக்கூடாது. பதினறு முறை வாயைக் கொப்பளித்து இரண்டு முறை ஆசமநம் செய்து "ப்ராணாநாம்" என்ற மந்திரத்தைக் கூறி ஜலத்தோடு வயிற்றைத் தொடவேண்டும். வலது கால் கட்டவிரலில் ஜலம் பெருகும்படி ஜலத்தைவிட வேண்டும். பகல் இரவு என்ற இரண்டு வேளைதான் போஜனம் செய்யவேண்டும். இடையில் புஜிப்பவர் நரகஞ் செல்வர். க்ரஹண காலத்திலும்

அதற்கு முந்தி சூர்யக்ரஹணமானல் நான்குயாமமும் சந்திர க்ரஹணமானல்மூன்றுயாமமும் போஜனம் செய்யக்கூடாது. தனக்காக பாகம் செய்பவனும் ச்ருங்காரத்திற்காக பத்நியை மணப்பவனும் ஜீவநத்திற்காக அத்யயநம் செய்பவனும் ஜீவித்திருப்பது வீணுகும். தலையில் வஸ்த்ரத்தைக்கட்டிக் கொண்டும் காலில் செருப்புடனும் வடக்குமுகமாகவும் பாதி ராத்திரியிலும் நடுப்பகலிலும் ஸாயங்காலத்திலும் அஜீர்ணமாக இருக்கும் பொழுதும் ஈரவஸ்த்ரத்துடனும் உடைந்த ஆஸநத்திலமர்ந்தும் வாஹனத்தின்மீது உட்கார்ந்தும் போஜநம் செய்யக்கூடாது.

எச்சக்கையுடன் நெய்யைத் தொடக்கூடாது. எச்சலுடன் வேதத்தைச் சொல்லக்கூடாது. இலையில் ஒன்றுமில்லாமல் துடைத்துச் சாப்பிடக்கூடாது. அந்த இலைக்காகக் காத்திருக்கும் காக்கை நாய் முதலியவைகளுக்காக கொஞ்சம் மிகுதியாக அன்னத்தை வைக்க வேண்டும். இருட்டிலும் தேவாலயத்திலும் ஒரே வஸ்திரத்துடனும் சிறித்துக்கொண்டும் அழுதுக்கொண்டும் மனைவியுடன் உட்கார்ந்தும் புஜிக்கக் கூடாது. போஜநத்திற்குப் பிறகு சிறிது தூரம் நடந்து விட்டு இதிஹாஸபுராணங்களைப் படிக்க வேண்டும். தான்படிக்க சத்தியில்லாதவர் பிறர்படித்துச் சொல்வதைக் கேட்கவேண்டும். பிறகு ஸாயங்காலத்தில் அக்னிஹோத்ரமில்லாதவர், வீட்டைவிட்டு வெளியில் சென்று நதீ தடாகாதிகளில் ஸாயம் ஸந்தியையை உபாஸிக்க வேண்டும். ஸாயங்காலத்தில் உட்கார்ந்து கொண்டு தான் காயத்ரீ ஜபம் செய்யவேண்டும். அக்நி ஹோத்ரமல்லது ஔபாஸந ஹோமங்களைச் செய்து விட்டு பந்துக்களுடன் உட்கார்து யக்ஞசேஷத்தைப் புஜிக்கவேண்டும். காலை ஈரமில்லாமல் நன்ருகத் துடைத்து விட்டு பகவத்யாநம் செய்து படுக்கவேண்டும். வடக்கு முகமாகவும் மேற்குமுகமாகவும்

மேல்கூரைஇல்லா இடத்திலும் வஸ்திரமில்லாமலும் உட்காரும் ஆஸநத்திலும் சூன்யமான வீட்டிலும் பழைய கட்டிலிலும் மூங்கல் அல்லது பலாசத்தினுல் செய்யப்பட்ட படுக்கையிலும் படுத்துறங்கக்கூடாது. இந்த தர்மசாஸ்த்ர விதிகளைச் சோம்பலாலோ நாஸ்திக்யத்தினுலோ அனுஷ்டிக்காதவன் நரக யாதனைகளை அனுபவித்துப் பின்னர் காக்கையாகப் பிறப்பன்.

ச்ராத்தம். ச்ரத்தையுடன் பித்ருதேவதையைக்குறித்துச் சாஸ்திர விதிப்படி செய்யும் கார்யம் ச்ராத்தமெனப்படும். நரகத்திலுள்ளோர் அதிலிருந்து விடுபட ச்ராத்தத்தைத் தவிர வேறு வழியில்லை. அந்த ச்ராத்தம் நித்யம் நைமித்திகம் காம்யம் ஏகோத்திஷ்டம் பார்வணம் என ஐந்து வகைப்படும். திநந்தோறும் பித்ருக்களை நாடி விதிப்படி ஓர் உத்தமப்ராமணனுக்கு அன்ன மிடுவது நித்ய ச்ராத்தமாகும். சந்த்ரஸூர்யக்ரஹணகாலங்களில் செய்யப்படுவது நைமித்திகமெனப்படும். ஓர் காமனையைக் கருதி திதிவிசேஷமல்லது நக்ஷத்ர விசேஷத்தில் செய்யப்படுவது காம்யமாகும். இறந்த ஒரு ஜீவனை நாடிபதினோருவது நாள் செய்யப்படுவது ஏகோத்திஷ்ட மெனப்படும். பர்வாவில் செய்யப்படுவது பார்வணமாகும். யாத்ராகாலத்தில் செய்ய வேண்டிய ஓர் ச்ராத்தம் ஆருவதாகும். ஆத்ம சுத்திக்காகச் செய்யப்படுவது ஏழாவதாகும். பயம் அகல தேவதைகளை உத்தேசித்துச் செய்யப்படுவது எட்டாவதாகும். க்ரஹண காலந் தவிர மற்ற தினங்களில் ராத்திரி தர்ப்பணம் செய்யக்கூடாது. க்ஷேத்திரவிசேஷத்தினுல் ச்ராத்தத்திற்குப் பலன் அதிகமாகும். கயையில் செய்யும் ச்ராத்தம் அக்ஷயமான பலனை அளிக்கும். ஆதலால் பித்ருக்கள் தம் ஸந்ததியில் அநேக பிள்ளைகள் பிறந்தால் எவனுவது ஒருவன் கயைக்குச் சென்று ச்ராத்தம் செய்ய

மாட்டானு என்று ஸதா பாடிக்கொண்டே இருக்கிருர்கள். கங்காத்வாரம் ப்ரபாஸம் பில்வகம் நீலபர்வதம் குருக்ஷேத்திரம் குப்ஜாம்ரம் ப்ருகுதுங்கம் கேதாரம் பல்குதீர்த்தம் நைமிஷாரண்யம் புஷ்கரம் ஸரஸ்வதீ நர்மதா குசாவர்த்தம் ஸ்ரீசைலம் பத்ரகர்ணம் வேத்ரவதீ விசாகா கோதாவரி ஆகிய இந்த இடங்களில் ச்ராத்தம் செய்தால் பித்ரு தேவர்கள் பேரானந்தமடைந்து புத்ரனை வாழ்த்துவார்கள். கோதுமை எள்ளு பயத்தம்பருப்பு உளுந்து மாம்பழம் மாதுளம்பழம் தேன்சர்க்கரைகளுடன் கலந்த பொரி பசும் பால் நெய் தயிர் முதலியவைகளை ச்ராத்தத்தில் விநியோகம் செய்தால் அவை பித்ருக்களுக்கு அதிக ஸந்தோஷத்தை அளிக்கும்.

ச்ராத்தார்ஹமானவர்கள். யாகம் செய்தவர் நியமத்துடன் விருதானுஷ்டானம் செய்பவர் ருதுகாலத்தில் ஸ்த்ரீ ஸங்கமம் செய்பவர் நான்குவேதமறிந்தவர் ஏதாவது ஒரு வேதத்தைக் கற்றவர் அக்நி ஹோத்ரீ வேதாங்கங்களை அறிந்தவன் தர்மசாஸ்திர முணர்ந்தவன் சாந்தகுணமுள்ளவன் பிரும்மானுஸந்தானம் செய்பவன் சாந்த்ராயணாதி விருதங்களைச் செய்பவன் ஸத்யஸந்தன் புராணமறிந்தவன் குருபூஜை தேவபூஜை அக்நிபூஜை அதிதிபூஜைமுதலியவைகளைச்செய்பவன் நற்குலத்தில் பிறந்தவன் கர்ப்பம் முதல் சுத்தமாக இருப்பவன் மஹாதேவனையும் மஹாவிஷ்ணுவையும்பூஜிப்பவன் எவருக்கும் ஹிம்ஸை செய்யாதவன் ஈதானம் வாங்காதவன் தானம் செய்பவன் காயத்திரீ ஜபத்தைப் பக்திச்ரத்தையுடன் தவறுமல் செய்பவன் பெற்ருேருக்குப் பணிவிடை செய்பவன் யோகாப்யாஸம் செய்பவன் பித்ரு தேவாராதநத்திலீடுபட்டவன் ஸ்நாதகன் ச்ராத்தகர்த்தாவின் கோத்ரமும் ப்ரவரமும் இல்லாதவன் முதலியவர்கள் ச்ராத்தத்தில் பித்ருக்களாக வரித்துப் பூஜிக்கத் தக்கவர்கள் ஆவார். யோகியான கிருஹஸ்தன் கிடைக்காத பக்ஷத்தில்யோ

காப்யாஸம் செய்யும் பிரும்ம சாரியை வரிக்கலாம். வேதாந்தியைப் பூஜித்தால் ஆயிரம் மடங்கு பலனுண்டாகும். இங்கு கூறியவர்களை வைத்துச்சராத்தம் செய்வது உத்தம பக்ஷம். இத்தகையவர் கிடைக்கா விடில் மத்தியம பக்ஷமாக மாதாமஹன் மாமன் மருமகன் மாமனூர் குரு தௌஹித்ரன் ரித்விக்கு முதலியவர்களைப் பூஜிக்கலாம். ஸ்நேஹிதரைப் பித்ருக்களாக எண்ணி அர்ச்சிப்பது அதம பக்ஷமாகும்.

ச்ராத்த அநர்ஹர்கள். வேதமறியாதவனை வைத்து ச்ராத்தம் செய்வது சாம்பலில் செய்த ஹோமம்போல் பயனற்றதாகும். வேதாத்யயநம் செய்யாமல் ச்ராத்தத்தில் உட்கார்ந்து புஜிப்பவன் எவ்வளவு கபளங்களை உட்கொள்கிறுனே அவ்வளவு இரும்பு குண்டுகளை விழுங்கும்படி நரகத்தில் அவனை யமகிங்கரர்கள் அடிப்பார்கள். மூன்று தலைமுறையாக வேதாத்யயந மில்லாதவன் துர்ப்ராஹ்மணன் எனப்படுவான். சூத்ரனிடத்தில் வேலை செய்பவன் ராஜாங்கத்தில் வேலை செய்பவன். சூத்ரபுரோஹிதன் வேதத்தை விக்ரயம் செய்பவன் பெண் அல்லது பிள்ளையை விற்றவன் காபாலிகன் பாசுபதன் பாஞ்சராத்ரன் ஒருவித ஆச்ரமதர்மமத்தையு மனுஷ்டிக்காதவன் தேவபூஜை செய்யாமல் உண்பவன் ஆச்ரமத்திற்குறிய தர்மத்தைச் செய்யாதவன் வெண்குஷ்டம் பெருவியாதி முதிலிய ரோக முள்ளவன், சொத்தநகமுள்ளவன் சொத்தப் பல்லன் ஸந்ததி இல்லாதவன் திருடன் நாஸ்திகன் நபும்ஸகன் மதுபாநம் செய்பவன் சூத்ரஸ்த்ரீ ஸங்கமம் செய்பவன் அக்நியை விட்டவன் ஜ்யேஷ்டனுக்கு விவாஹமாகாதபோது தான் கல்யாணம் செய்துக் கொண்ட கநிஷ்டன் ஹிம்ஸை செய்பவன் வாத்ய கீதத்தைத் தொழிலாகக் கொண்டவன் ஹீநாங்கன் அதிகாங்கன் மித்ரத்ரோஹீ கோள் சொல்பவன் மாதாபிதா பத்நீ குரு முதலியவர்களை விட்டவன் தந்தை இருக்கும்போது சோர

அன்ய புருஷனுல் உண்டான கோளகன் யாசகன் பொய்ஸாக்ஷி சொல்பவன் ஸமுத்ர யாத்ரை செய்தவன் நம்பியவரை மோசம் செய்தவன் வேதநிந்தை செய்பவன் நன்றி கெட்டவன் பிராமணத்வேஷி அத்யயநம் செய்ததை மறந்தவன் ஸ்நாந தாநங்களை விட்டவன் கபட முள்ளவன் முதலியவர்களை ச்ராத்தத்தில் நிமந்த்ரணத்திற்கு வைக்கக்கூடாது.

ச்ராத்தத்திற்கு முதல் நாள் கர்த்தா பிராமணர்களிடம் தானே நேராகச் சென்று நாளையதிநம் ச்ராத்தம் நடப்பதால் தாங்கள் பித்ருக்களாக இருந்து ச்ராத்தத்தைப் பூர்த்தி செய்து வைக்க வேண்டும் என்று பிரார்த்திக்க வேண்டும். வரித்த உடன் அவர்கள் பிரும்மசர்ய நியமத்துடனிருக்க வேண்டும். ச்ராத்தத்திற்கு முதல் நாளே கர்த்தா அவர்களைத் தன் வீட்டிற்கழைத்து வந்து போஜநம் செய்து வைக்க வேண்டும். அன்று முடியா விட்டால் ச்ராத்தமான மறு நாளாவது அவர்களைப் பூஜிக்க வேண்டும். பிராமணர்களை வரித்தவுடன் பித்ருக்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு ஸந்தோஷத்துடன் வாயுரூபமாக இருந்து பிராமணர்களுடன் கூட சாப்பிடுகிருர்கள். கர்த்தா கோபம் அவஸரம் தவறுதல் பொய் சொல்லுதல் சுமை தூக்குதல் ஸ்த்ரீ ஸங்கமம் வழி நடத்தல் முதலியவைகளைச் ராத்தத்திற்கு முதல் நாள் ச்ராத்ததிநம் மறு நாள் ஆகிய மூன்று நாட்களிலும் செய்யக் கூடாது. வரிக்கப்பட்ட பிராமணன் பணத்தாசையால் இங்கு வாாமல் வேறிடத்திற்குச் சென்றுல் அவன் கோர நரகத்தை அனுபவித்துப் பன்றியாகப் பிறப்பான். கர்த்தா முதலில் ஒருவரைச் சொல்லிவிட்டு மோஹத்தினுல் மற்றெருவரைச் சொன்ஞல் வரித்த பின் வேறிடஞ் சென்ற பாபத்தை விட அதிக பாபத்தை அடைவான். ச்ராத்தத்திற்காக வரித்த பின்

பிராமணன் ஸ்த்ரீஸங்கமம் செய்தால் அவன் பிருஹ்மஹத்தி செய்தபாபத்தை அனுபவிப்பான். வழி நடந்தால் ஓர் மாதம் அவன் பித்ருக்களுக்குப் பாபஅன்னமே கிடைக்கும். சண்டையிட்டால் ஓர் மாதம் அவன் பித்ருக்கள் மலத்தை யேபுஜிப்பார்கள். ஆதலால் போக்தாவும் கர்த்தாவும் நியமத்துடன் இருக்கவேண்டும். ச்ராத்தத்திற்கு முதல் நாள் கர்த்தா தென்திக்கில் சென்று தெற்கு முகமாக உள்ள தர்ப்பையை மூலத்துடன் கொண்டுவர வேண்டும். நதீ தீரம் தீர்த்தக்கரை தனக்குச் சொந்தமான பூமி ஆகிய இவ்விடங்களில் கோமயத்தால் சுத்தி செய்து ஏகாந்தமாக ச்ராத்தம் செய்தால் பித்ருக்கள் ஸந்தோஷமடைவார்கள். பிறர் மனையில் செய்தால் பித்ருக்கள் அங்கு வரமாட்டார்கள். காடு மலை புண்ய தீர்த்தம் ஆலயங்கள் ஆகிய இவைகளுக்கு எவனும் சொந்தக் காரனல்லன். ஆதலாலங்கு செய்யலாம். ச்ராத்தம் செய்யுமிடத்தில் எள்ளை முதலில் நிறைய இறைக்க வேண்டும். இல்லையேல் நாம் செய்யும் ச்ராத்தத்தை ராக்ஷஸர்கள்கொண்டு செல்வார்கள்.

விச்வேதேவர்களுக்காக இருவரையும் பித்ருக்களுக்காக மூவரையும் வரிக்கவேண்டும். அத்திமரத்தினலாகிய பாத்திரத்தில் அவர்களுக்கு எண்ணெய் கொடுக்க வேண்டும். ஸத்கர்மா தேசம் காலம் சௌசம் பிராமணர் ஆகிய இவைகளை விஸ்தாரமாக்குவோமானல் பற்பல அபசாரங்கள் வந்து சேறும். ஆதலால் மிகச்சுறுக்கமாகச் செய்வது சிறந்தது. தேவர்களுக்காக ஒருவரையும் பித்ருக்களுக்காக ஒருவரையும் வரித்தால் போதும். இரண்டு பேர் கிடைக்காதபக்ஷத்தில் ஒருவரைப் பித்ருக்களாக வரித்து விட்டு விச்வே தேவருக்குக்காக அன்னபக்ஷ்யாதிகளை எடுத்து தேவாலயத்தில் நிவேதநம் செய்து ஓர் பிரும்மசாரிக்குக் கொடுத்து விடலாம். அன்னர்த்தியாக பிரும்மசாரியோ ஸந்யாஸி

யோ ச்ராத்தகாலத்தில் வந்து விட்டால் பிராமணர்களுடன் அவர்களையும் உட்காரவைத்து அன்னம் போடலாம். ச்ராத்தகாலத்தில் ஹீநாங்கர்கள் பதிதன் குஷ்டரோகி வ்ரணமுள்ளவன் நாஸ்திகன் கோழி பன்றி நாய் அசுத்தமானவன் பஞ்சகச்சமணியாத கிருஹஸ்தன் துஷ்டன் பயித்தியக்காரன் ரஜஸ்வலை ஆகிய இவர்களைப் பார்கக்கூடாது. காக்கை முகமாகவும் பித்ருக்கள் வரக்கூடும். ஆதலால் அவைகளை ஓட்டக்கூடாது. அதைக் கண்ணால் பார்க்கவுங்கூடாது. கர்த்தாவின் மனைவிக்குப் புத்ரன் பிறக்கவேண்டுமென்ற ஆசை இருந்தால் மத்யம பிண்டத்தை அவள் சாப்பிடலாம். பழம் கிழங்கு பாநீயம் இவைகளைத்தவிர மற்ற போஜ்ய வஸ்துக்களை உஷ்ணமாகவே அளிக்கவேண்டும். கையினால் உப்பைப் பிரத்யக்ஷமாக இலையில் போடக்கூடாது. இரும்பு பாத்திரத்தினால் எதையும் பரிமாறக்கூடாது. அச்ரத்தையுடன் எதையும் போடக்கூடாது. ஸ்வர்ணம் வெள்ளி அத்திமரம் ஆகிய இவைகளால் செய்த பாத்திரத்தை ச்ராத்தத்தில் உபயோகப்படுத்தினால் பித்ருக்கள் பரம ஸந்தோஷமடைவர். மண்பாத்திரத்தில் புஜிக்கும்படி செய்பவன் நரகத்தை அடைவான். பங்க்தியில் எல்லோருக்கும் ஸமமாகப் பரிமாறவேண்டும். புஜிப்பவர் இது வேண்டுமென்று வாயால்சொல்லக்கூடாது. மற்றொருவரைக்கொண்டும் இவருக்கு இதைப்போடென்றும் கூறக்கூடாது. புஜிப்பவர் வாயினால் கேட்டு அல்லது மற்றொருவர் கூறி வேண்டியதைக்கர்த்தா கொடுத்தால் இம் மூவரும் நரகம் செல்வர். கர்த்தா, சாப்பிடுகிறவர் அபேக்ஷிக்காதபடி இலையில் நிறைய பரிமார வேண்டும். அத்யவச்யம் ஏற்பட்டால் போக்தா வேண்டிய பொருளைக் கையால் குறித்துக் காட்ட வேண்டும். பிராமணர்கள் புஜிக்கும்போது வேதம் தர்ம சாஸ்த்ரம் இதிஹாஸ புராணங்கள் ச்ராத்தகல்பம் முதலிய

வைகளை இதரப்ராமணர்களைக் கொண்டு போக்தாவின் காதில் விழும்படி சொல்லச்சொல்லவேண்டும். பித்ரு சேஷத்தைப்பங்காளிகளுடன் புஜிக்கவேண்டும். பிராமணர்கள் புஜித்த இலையை ஸூர்யாஸ்தமநத்திற்கு முன் வெளியில் போடக்கூடாது. கர்த்தா போக்தா இருவரும் அன்று ஸ்த்ரீஸங்கம் கோபம் வேதம் முதலியவைகளை விட்டு நியமத்துடன் இருக்க வேண்டும். நியமந்தவறினால் பலகாலம் நரகத்தை அனுபவித்துப் பின்னர் புழுவாகப்பிறப்பார். ஆப்யுதயிக ச்ராத்தத்தைத் தேவபூஜைக்குரிய காலத்தில் இரண்டு தர்பங்களைக் கொண்டே செய்யவேணடும்.

ஆசௌசம்:—ஞாதிகளுள் ஒருவருக்கு ஆண்குழந்தை பிறந்தாலும் அல்லது ஒருவர் இறந்தாலும் எல்லோருக்கும் பத்து நாட்கள் ஆசௌசம் உண்டாகும். அச்சமயத்தில் ஸந்த்யாவந்தனத்தைத் தவிர மற்ற நித்திய கர்மங்களையும் காம்யகர்மங்களையும் செய்யக்கூடாது. ஆசௌசமுள்ளவர்களை மற்றவர் தீண்டக்கூடாது. அவர்களிடமிருந்து எதையும் இதரர் வாங்கக்கூடாது. ஐந்து நாட்கள் சென்றபின் ஆசௌசிகளைத் தொடுவது அதிக தோஷமில்லை. ஜநந ஆசௌசத்தில் பிரஸவித்தவள் அவள் புருஷன் இவர்களைத் தவிர ஸபிண்டர்களில் ஒருவரை ஒருவர் தொட்டுக்கொள்வது தோஷமில்லை. ஸ்வதர்மத்தை விட்டவனும் மஹாரோகியும் தனதிஷ்டப்படி நடப்பவனும் இறந்தால் ஞாதிகளுக்கு மூன்று நாள் ஆசௌசமாகும். ஆறுமாதத்திற்கு முன் கர்ப்பம் ஸ்ராவமானால் எத்தினை மாதத்தில் அது நேர்ந்ததோ அத்தினை நாட்கள் தாய்க்குமாத்திரம் தீட்டுண்டு. வேதவேதாங்கங்களை அறிந்தவனுக்கும் தவறாமல் தேவ பூஜை செய்பவனுக்கும் ஜீவனத்திற்கு மிகக் கஷ்டப்படுபவனுமான பிராமணனுக்கும் எந்த ஞாதி தீட்டு வந்தாலும் ஒரே நாள் தான் ஆசௌசம்.

ஸூதகத்தில் மற்றோர் ஸூதகத்தீட்டு வந்தாலும் மரண ஸௌசத்தில் மற்றோர் ஆசௌசம் வந்தாலும் முதல் காத்த தீட்டுடன் இரண்டாவது வந்த தீட்டும் போய்விடும். குரு குருபுத்ரன் குருபத்நீ ஊரில் வஸிக்கும் ச்ரோத்ரியன் முதலியவர்களது மரணத்தில் ஒரு நாள் தீட்டுஉண்டு. பிரா மணர்களுக்கு ஞாதிகளது ஜநநமரணத்தில் பத்து நாட்கள் தீட்டிருப்பதுபோல் க்ஷத்ரியர்களுக்குள் பனிரண்டு நாட் களும் வைச்யர்களுக்குப் பதினைந்து நாட்களும் சூத்ரார் களுக்குள் ஒரு மாதமும் தீட்டுகாக்கவேண்டும். யுத்தத்தில டிபட்டிறந்தாலும் ஸர்ப்பந்தீண்டி இறந்தாலும் துர்ப்பிக்ஷம் அக்நிவாயு இவைகளாலிறந்தாலும் பிராமணனையும் பசுவை யுங் காப்பதற்காக உயிர்துறந்தாலும் ஸன்யாஸிகள் இறந் தாலும் ஸ்நாநம் செய்தால் போதும். தீட்டில்லை. பிரும்ம சாரி நைஷ்டிகன் வாநப்ரஸ்தன் ஸந்யாஸி இவர்களுக்கு ஆசௌசமில்லை. பதிதனுக்கும், ஆத்மஹத்திசெய்துக் கொண்டவனுக்கும் கர்மாவும் செய்யக்கூடாது. தீட்டு மில்லை. தவறுதலாக விஷத்தைப் புஜித்தோ அக்நியில் அல்லது ஜலத்திலோ உயிரை விட்டவனுக்குக் கிரமமாக கர்மாவைச் செய்யவேண்டும். தீட்டும் உண்டு. குழந்தை பிறந்த திநத்தில் அந்த வீட்டிலிருந்து ஹிரண்யம் கோ தான்யம் எள்ளு வெல்லம் பால் தயிர் நெய் பழம் புஷ்பம் கறிகாய் உப்பு விறகு ஆகிய இவைகளை வாங்கிக்கொண்டால் தோஷ மில்லை.

இறந்தவனுக்கு நாலாவது நாள் அஸ்திஸஞ்சயநம் செய்யவேண்டும். இரண்டாவது நாள் ஞாதிகள் க்ஷவரம் செய்து கொள்ளவேண்டும். இறந்தவனுக்கு நாலு ஐந்து ஒன்பது பதினொன்று ஆகிய இந்த தினங்களில் இரண்டு பிராமணர்களை வரித்து ச்ராத்தம் செய்யவேண்டும். இதை நவச்ராத்தம் என்பார்கள். ப்ரதிமாஸமும் இறந்த தினத்

தில் ஸோதகும்பத்துடன் ச்ராத்தம் செய்து ஓர் வருஷம் பூர்த்தியானபிறகு ஸபிண்டீ கரணம் செய்ய வேண்டும். பிறகு ப்ரதி வருஷத்திலும் இறந்த திநத்தில் ச்ராத்தம் செய்யவேண்டும். புத்ரனில்லாவிட்டால் இறந்தவனது மனைவி செய்யலாம். அவளுமில்லாவிடின் இறந்தவனது ஸஹோதரன் செய்யவேண்டும். இங்ஙனம் கிருஹஸ்ததர்மத்தை அநுஷ்டிக்கும் புருஷன் நற்கதி அடைவது போல் தன்து புருஷனுக்குப் பணிவிடை செய்யும் உத்தமியும் உத்தமகதி அடைவாள்.

நியாயமார்க்கத்தினுல் ஸம்பாதித்த பொருள் கிருஹஸ்தனுக்கு மூன்று வருஷங்கள் தன் குடும்பத்தை ரக்ஷிப்பதற்குப் போதிய அளவு கிடைத்தால் அல்லது அதிகம் கிடைத்தாலும் உடனே அவன் ஸோமயாகமென்னும் ஈச்வரபூஜை செய்யவேண்டும். யாகத்தினுல்தான் மநதிலுள்ள மலம் அகலும். மலம் அகன்ருல்தான் ஞானம் உண்டாகும். ஞாநம் உண்டானுல் தான் மோக்ஷம் பெறலாம். பிராமணன் ஜீவனத்திற்காகப் பிறர்க்கு யாக அத்யயநங்களைச் செய்துவைத்துப் பொருளைத் தேடுவது உத்தமம். அது கிடைக்காவிடில் க்ருஷியைச்செய்து ஜீவிப்பது மத்யமமாகும். அதுவுங் கிட்டாவிடில் ஆபத்விருத்தியாக வியாபாரம் செய்யலாம். அஃதுவும் முடியாவிடில் வட்டியினுல் ஜீவிக்கலாம். வட்டியைக் கொண்டு ஜீவிப்பது மிகபாபமான விருத்தியாகும். க்ஷத்திரியனுக்குரிய வேலையைச் செய்து குடும்ப ரக்ஷணம் செய்வது ச்லாக்யமாகும். தானே உழுது ஜீவிப்பது நல்லதல்ல. க்ருஷியினுல் ஜீவிக்கும் பிராமணன் கிருஷியில் வரும் வருமானத்தில் இருபதில் ஒரு பங்கைத் தேவபித்ரு பூஜைக்கும் முப்பதில் ஓர் பங்கை பிராமண பூஜைக்கும் செலவு செய்தால் கிருஷியினுல் வரும் பாபம் அவனை விட்டு அகலும். வியாபாரம் செய்து ஜீவிக்கும்

பிராமணன் இங்ஙனம் இரண்டுபங்கு அதிகமாகவும். வட்டி யில் ஜீவிப்பவன் மூன்றுபங்கு அதிகமாகவும் தர்மத்திற்குச் செலவு செய்யவேண்டும். வித்யை சில்பம் முதலியவை களைக்கொண்டும் ஜீவிக்கலாம். தநத்தைத்தேடிய த்விஜன் தேவபித்ரு பிராமண பூஜைகளைச் செய்யாதிருந்தால் அவன் மிருக ஜன்மத்தை அடைவான். ஸந்யாஸத்திற்குத் தன் னைத் தயார்படுத்திக் கொள்ளும் பிராமணனுக்கு ஸாதகன் என்று பெயர். அவன் களங்களில் சிந்திக்கிடக்கும் தான் யங்களைப் பொறுக்கி ஜீவிக்கலாம். தான்ஒருவரை யாசிக்கா மலிருக்கும் பொழுது தானுகவே பிறர்கொண்டு கொடுக் கும் பொருளுக்கு அமிர்தம் என்றுபெயர். தான் கேட்ட பின் கிடைத்த பொருளுக்கு மிருதம் என்று பெயர். ஸாதகன் மிருதத்தினுலும் அமிருதத்தினுலும் ஜீவிக் கலாம்.

தாநம். ஒருவன் நியாயமாகத் தேடிய பொருளை ஸத் பாத்ரத்தில் ச்ரத்தையுடன் கொடுப்பது தாநமெனப் படும். புக்தி முத்தி என்ற இருபலனையு மளிக்கவல்லது தாநம். அது நித்யம் நைமித்திகம் காம்யம் விமலம் என நால்வகைப்படும். அன்றன்றும் ஒரு பலனையும் கோராமல் தனக்கு உபகாரம் செய்யாத ஒரு பிராமணனுக்களிப்பது நித்ய தாநமாகும். தனது பாபம் நீங்குவதற்காக வித்வா னுக்குப் பொருள் அளிப்பது நைமித்திக தாநமாகும். ஸந் ததி ஜயம் ஐச்வர்யம் ஸ்வர்க்கம் முதலியவைகளில் ஆசை கொண்டு தாநம் செய்வது காம்ய தாநமாகும். ஈச்வரனை ஸந்தோஷப்படுத்துவதற்காக பிரும்மவித்தினிடத்தில் நல் லெண்ணத்துடன் கொடுக்கப்படுவது விமல தாநமாகும். ஸத்பாத்ரத்தில் அளிக்கும் தானம் தாதாவை பிறவிக்க டலிலிருந்து கைதூக்கிவிடும். தனது குடும்பத்திற்கு வேண்டிய வஸ்த்ரம் அன்னம் இவைகளுக்கு அதிகமாக

இருக்கும் தனத்தையெல்லாம் தானம் செய்வதுதான் ஸரியான தானமாகும். வேதமறிந்தவன் ஸத்குலத்தில் பிறந்தவன் விநயமுள்ளவன் தபஸ்வீ விருதானுஷ்டானம் செய்பவன் ஏழை ஆகிய இவர்களுக்குப் பக்தியுடன் செய்யும் தானம் மிகச்சிறந்ததாகும். விளைந்திருக்கும் தான்யத்துடன் அக்நி ஹோத்ரிக்குச் செய்யும் பூமிதானத்திற்கு ஸமமாக அன்னதானத்தைத்தான் கூறலாம். இவ்விரண்டுகளையும் விட ஸத்சிஷ்யனுக்கு ஸத்வித்யா தானம் செய்வது மிகச்சிறந்ததாகும். வைசாகபௌர்ணமியில் உபவாஸமிருந்து மறுநாள் ஐந்து அல்லது ஏழுப்ராமணர்களுக்கு அன்னமிட்டால் அதுவரை அவன் செய்திருந்த பாபங்கள் அனைத்தும் அகன்றுவிடும். மான் தோலில் எள்ளை வைத்துத் தேனுடனும் நெய்யுடனும் தானம் செய்தால் ஸகல பாபங்களுமகலும். அமாவாஸ்யை க்ருஷ்ணாஷ்டமீ த்வாதசி சதுர்த்தசி இந்த தினங்களில் பிராமணர்களைப் பூஜித்து அன்ன தானம் செய்தால் அழிவற்ற பலனுண்டாகும். வேத வித்தான பிராமணனது சரீரத்தில் ஸகல தேவர்களும் வஸிப்பதால் எந்த தேவதையைப பூஜிப்பதானாலும் பிராமணர்களிடமே பூஜிக்கவேண்டும். பிராமணன் கிடைக்காத பக்ஷத்தில் விக்கிரஹத்தில் பூஜிக்கலாம்.

காம்யபூஜை. செல்வத்தை விரும்பினல் இந்த்ர பூஜை செய்யவேண்டும். பிரும்மவர்ச்சஸை விரும்பினுல் பிரும்மனையும் ஆரோக்யம் வேண்டுமானுல் சூர்யனையும் கோவை விரும்பினுல் அக்நியையும் கார்ய ஸித்தியைக் கோரினுல் விநாயகரையும் போகேச்சை உள்ளவன் சந்த்ரனையும் தேக பலத்தை அபேக்ஷிப்பவன் வாயுவையும் மோக்ஷத்தை விரும்புபவன் நாராயணனையும் யோகம் க்ஞானம் முதலியவைகளை விரும்பினுல் பரமசிவனையும் பூஜிக்கவேண்டும். ஸந்தோஷத்தை விரும்பினுல் தீர்த்ததானத்தையும் அக்ஷப்ப

மான ஸுகத்தைக் கோரினல் அந்நதாநத்தையும் ஸந்ததியை விரும்புபவன் திலதாநத்தையும் நல்ல கண்ணை விரும்பினல் தீபதாநத்தையும் எல்லாவற்றையும் விரும்பினல் பூதாநத் தையும் தீர்க்காயுளைக் கோரினல் ஹிரண்ய தாநத்தையும் செய்யவேண்டும். கிருஹதாநம் செய்பவர் நல்ல கிருஹத் தையும் வெள்ளியை அளிப்பவர் நல்ல ரூபத்தையும் பெறு வர். வஸ்த்ரதாநம் செய்பவர் சந்த்ரலோகத்திற்கும் அச்வ தாநம் செய்பவர் அச்விநீதேவர்களது லோகத்திற்கும் செல்வர். விருஷபதாநம் செய்தால் பூர்ணமான ஸம்பத் துண்டாகும். கோதாநம் செய்பவர் ஸ்வர்க்கம் செல்வர். வாஹநம் படுக்கை இவைகளை அளித்தவர் நல்ல மனைவியை யடைவர். தாந்ய தாநம் செய்தால் எல்லாஸுகமும் கிடைக்கும். வேதத்தை நல்ல சிஷ்யனுக்குத் தாநம் செய் தால் பிரும்மலோகம் செல்வர். விறகு தாநம் செய்தால் ஜாட ராக்நி நன்ருக இருக்கும். பழம் கிழங்கு சாகம் முதலிய வைகளை அளிப்பவர் எப்பொழுதும் ஸந்தோஷமாக வஸிப் பர். மருந்து அல்லது பத்யமானபக்ஷ்யங்களை ரோகிக்கு அளிப்பவன் ஆரோக்யத்தையும் நீண்ட ஆயுளையும் பெறு வான். குடைசெறுப்புகளைத் தானம் செய்தால் நரகத்தில் தாபமிராது. நமக்கு எது உலகில் மிக்க ப்ரியமானவஸ்து வோ அதையே குணவானன பிராமணனுக்குத் தாநம் செய்ய வேண்டும். ஆயுள் ஸந்ததிபலம் ஐச்வர்யம் ஸ்வர்க் கம் முதலிய பலனை விரும்புபவன் ஸத்பாத்ரத்தில் தாநம் செய்ய வேண்டும். தாநம் மோக்ஷத்தையும் அளிக்க வல்லது. ஆதலால் மோக்ஷத்தை விரும்புபவரும் தாநம் செய்யவேண்டும்.

தாநம் செய்பவனை வேண்டா மென்று தடுப்பவன் நரகத்தை அடைவான். துர்ப்பிக்ஷகாலத்தில் அன்னமில்லா மல் இறப்பவர்களை அன்னமளித்துக்காக்காமலிருக்கும்·

தனிகனை அரசன் அவனது பொருளைப் பிடுங்கிக்கொண்டு ஊரைவிட்டு விரட்ட வேண்டும். வயிற்றுநிறையச்சாப்பிட்ட வனாக இருந்தாலும் ஸதாசாரமுள்ள வித்வானுக்கு அன்ன மிட்டுப் பூஜிக்க வேண்டும். பத்து நாள் பட்டினி கிடந்தவ னாக இருந்தாலும் ஆசார மில்லாத மூர்க்கனுக்கு அன்னமிடக் கூடாது. அருகிலுள்ள ஸத்பாத்ரத்தை விட்டு அன்னிய ருக்குத் தானம் செய்பவனது குலம் அழியும். கொடுப்ப வனும் வாங்குபவனும் பக்திச்ரத்தையுடன் ஒருவரை ஒரு வர் பூஜித்தால் இருவருக்கும் நன்மை விளையும். ஒருவரை ஒருவர் அலக்ஷ்யம் செய்தால் இருவரும் நரகஞ் செல்வர். நிறையதனம் வேண்டும் என்ற பேராசையை விட்டு எவ்வ ளவு இருந்தால் குடும்பத்தைக்காக்க முடியுமோ அவ்வளவு பொருள் கிடைத்தவுடன் ஸந்தோஷ மடைந்து தானம் வாங்காமலிருந்தால் பல யாகங்களைச் செய்த பயன் உண் டாகும். திருடன் எப்படிப் பிறரை நடுங்கும்படிச் செய் வானோ அப்படியே யாசகனும் மற்றவரை நடுங்கும்படிச் செய்கிறான். ஸதா யாசகத்தைக் கைக்கொள்பவன் நரகஞ் செல்வான்

**வானப்ரஸ்ததர்மம்.** கலியில் மானிடருக்கு வேதம் கூறிய ஆயுள் நூறாண்டுகளாகும். அதில் இருபத்தைந்து ஆண்டுகள் கல்விகற்க பிரும்மசர்ய ஆச்ரமத்தை ஏற்று மற்றும் இருப்பத்தைந்தாண்டுகள் கிருஹஸ்த தர்மத்தை அனுஷ்டிக்க வேண்டும். தன் புதல்வன் வயிற்றில் ஓர் புதல்வன் பிறந்தபின் ஐம்பத்தொன்றாவது வயதில் தன் மனைவியைப் புதல்வனிடம் விட்டு விட்டு அல்லது அக்னி யுடன் அவளை அழைத்துக்கொண்டாவது ஆரண்யத்திற்குச் செல்லவேண்டும். உத்தராயணம் சுக்ல பக்ஷப்ரதமையில் கிளம்புவது நலம். பரிசுத்தமான பழங்களையும் கிழங்கு களையுங் கொண்டு தேவ பூஜை பித்ரு பூஜை அதிதி பூஜை

முதலியவைகளைச் செய்து எட்டு கபளம் உட்கொள்ள வேண்டும். தலைமயிரை ஜடையாகச் செய்து கொண்டு நகத்தையும் கத்தரிக்காமல் வளர்க்க வேண்டும். வேதம் அக்நி ஹோத்ரம் தர்சபூர்ணமாஸேஷ்டி ஆக்ரயணம் சாதுர் மாஸ்யம் முதலியவைகளைச் செய்ய வேண்டும். இஷ்டியில் செய்த புரோடாசத்தைப்பாதி தேவதைகளுக்கு ஹோமம் செய்து விட்டு மிகுதியைத்தான் புஜிக்கவேண்டும். தானே செய்த உப்பைத்தான் வாநப்ரஸ்தன் உட்கொள்ளவேண்டும். உழுதுவளர்ந்ததான்யம் சிந்திக்கிடந்தாலும் பிறர் அளித்தா லும் அதை ஏற்கக்கூடாது. கிராமங்களிலிருந்து வந்த புஷ்பங்களையும் பழங்களையும்கூட ஏற்கக்கூடாது. வாநப் ரஸ்தன் வேதாந்த சிந்தை செய்ய வேண்டும். மநதினும் ஸ்திரீ போகத்தை நினைக்கலாகாது. அவன் தவறுதலாக காமத்தினுல் போகம் செய்தால் அவ்வாச்ரம தர்மபலனைப் பெறமாட்டான். அவனுக்குப் பிறந்த குழந்தை தீண்டத் தகாதவனுவான். அவனுக்கு வேதங்கற்க அதிகாரமில்லை. வாநப்ரஸ்தனுக்கு அஹிம்ஸாதர்மம் முக்கியமாகும். பூமியிலேயே அவன் படுத்துக் கொள்ளவேண்டும். காயத்ரீ ஜபத்தை விடாமல் செய்யவேண்டும். பராபவாதம் பொய் அதிக தூக்கம் சோம்பல் முதலிய வைகளைவிட வேண்டும். வாநப்ரஸ்தனுக்கு ஒரே அக்னிதான் உண்டு. ஓரிடத்தில் ஸ்திரமாக அவன் வீடு கட்டிக்கொண்டிருக்கக் கூடாது. ஒருவருஷத்திற்கு வேண்டிய கந்த மூலங்களைச் சேர்த்து வைத்துக்கொள்ளலாம். அதற்குமேல் அதிகம் சேர்த்து வைத்துக் கொள்ளக்கூடாது. ஆச்வயுஜ மாஸத் தில் பழைய வஸ்த்ரங்களையும் கந்தமூலங்களையும் எறிந்து விட்டுப் புதிதாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும். மூன்று வேளை ஸ்நாநம் செய்யவேண்டும் உண்ணும் பொருள்களை அக்நியில் பாகம் செய்யாமல் வாயில் போட்டுக் கடித்துக்

தோலைத் துப்பலாம். இப்படிச் செய்பவருக்குத் தந்தோலூகலர் என்று பெயர். கல்லால் நசுக்கிப் புஜிப்பவர் அச்மகுட்டர் எனப்படுவர். பகலெல்லாம் உண்ணுதிருந்து இரவில் ஒரேவேளை புஜிக்கலாம். அல்லது பகலை எட்டாகப் பிரித்துக்கொண்டு நாலாவது அல்லது எட்டாவது காலத்தில் புஜித்து இரவில் உபவாஸமிருக்கலாம். ஓர் பக்ஷத்திற்கு ஓர் முறை புஜித்து மிகுந்த திநங்களில் உபவாஸமாக இருக்கவேண்டும். க்ரீஷ்ம காலத்தில் நாலுபுறமும் தீயை மூட்டி நடுவே நின்றுகொண்டு ஸூர்யனைப் பார்த்துக்கொண்டே ஜபம் செய்யவேண்டும். இதைப்பஞ்சாக்நி தபஸ் என்பார்கள். மழைகாலத்தில் ஜலத்தில்நின்று அல்லது ஈரவஸ்திரத்தைக் கட்டிக்கொண்டுஜபம்செய்யவேண்டும். சுக்லபக்ஷத்தில் ஜலத்தையும் கிருஷ்ணபக்ஷத்தில் கோமூத்ரமல்லது உலர்ந்த சிறகுகளையும் புஜிக்கவேண்டும். இங்ஙனம் செய்ததவத்தினுல் பாபமகன்று மநம் நிர்மலமாகும். பின்னர் அக்நியைத் தன்னிடத்திலேயே லயப்படுத்திக்கொண்டு அக்நியோடிருக்கும் வாநப்ரஸ்தரிடம் பிக்ஷைவாங்கி புஜிக்கலாம். இரண்டு கைகளினுலேயே பிக்ஷை வாங்கிப் புஜித்து காயத்ரீ ருத்ராத்யாயம் உபநிஷத் ஆகிய இவைகளை ஸதா ஜபிக்கவேண்டும். உடல் ஜீர்ணமாய் விட்டால் சாப்பிடாமல் ப்ராயோப வேசத்தாலோ அல்லது வடக்கு திக்கை நோக்கி நடந்துகொண்டே சென்ருே அல்லது அக்நிப்பிரவேசம் செய்தோ உடலை விடலாம்.

யதிதர்மம். முதல் மூன்று ஆச்ரம தர்மங்களையும் நன்ருக அனுஷ்டித்து விட்டு எழுபத்தாருவது வயதில் ஸந்யாஸாச்ரமத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். அக்நிகளை விதிப்படி தன்னிடத்தில் ப்ரதிஷ்டை செய்து பிரும்ம வித்யையை அப்யாஸம் செய்யவேண்டும். மநதிலுள்ள ஆசைகளெல்லாம் அகன்றபிறகே ஸன்யாஸம் செய்து கொள்ள

வேண்டும். ப்ராஜா பத்யமல்லது ஆக்நேய இஷ்டியைச் செய்துவிட்டு ஸன்யாஸத்திற்கு வரவேண்டும். நன்கு வேதாந்தக் ஞாநம் வந்தபின் செய்துக்கொள்ளும் ஸன்யாஸத்திற்கு ஞாந ஸன்யாஸமென்று பெயர். பத்நி ஆசை முதலியவைகளைவிட்டு எப்பொழுதும் வேதத்தையே சொல்லிக்கொண்டிருப்பவர் வேத ஸன்யாஸி ஆவார். தன்னிடத்தில் அக்நியை அடக்கிக்கொண்டு தான்செய்யும் ஸகல கார்யங்களையும் பிரும்மார்ப்பணம் செய்து கொண்டிருப்பவர் கர்ம ஸன்யாஸி எனப்படுவர். இவர்களுக்குள் க்ஞாந ஸன்யாஸியே சிறந்தவர். அவருக்குச் செய்யவேண்டிய கார்யம் ஒன்றுமில்லை. ஆச்ரமத்திற்குரிய அடையாளத்தையும் அவர் மறந்துவிடுவார். கந்தல்கௌபீனத்தை உடுத்தோ அது கூட இல்லாமலோ அவர் ஸஞ்சரிப்பார். மற்ற ஸன்யாசிகள் ஆச்ரம தர்மத்தை நன்றாக அனுஷ்டிக்க வேண்டும். கிராமத்தில் வஸிக்காமல் மூன்று வீட்டில் பிக்ஷை வாங்கி மிதமாக புஜிக்கவேண்டும். தான் அதிககாலம் ஜீவித்திருக்க வேண்டுமென்றோ விரைவில் இறக்கவேண்டுமென்றோ கோராமல் தானாக வருங்காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கவேண்டும். ஒரே வஸ்த்ரமல்லது கௌபீநத்தைத் தரிக்கலாம். தலையை மொட்டை அடித்துக்கொண்டாவது அல்லது சிகையை வளர்த்துக் கொண்டாவது த்ரிதண்டியாக இருக்கலாம். காஷாயத்தை உடுத்து மடம் அல்லது ஆலயத்தில் வஸித்திருந்து சத்ரு மித்ரன் ஸுக துக்கம் முதலியவைகளைச் சமமாக எண்ணவேண்டும். ஒரே வீட்டு அன்னத்தைப் புஜிக்கும் ஸந்யாஸி நரகஞ் செல்வார். மழைகாலந்தவிர மற்ற நாட்களில் ஒரே இடத்தில் வஸிக்கக்கூடாது. கண்பார்த்த இடத்திலேயே அடியை வைக்கவேண்டும். வஸ்த்ரத்தினால் வடிக்கட்டியே ஜலத்தைக் குடிக்கவேண்டும். சாஸ்த்ரத்

தினல் சுத்தமான வாக்கையே கூறவேண்டும். மநதினல் யோசித்துச் சுத்தமான கார்யங்களேயே செய்யவேண்டும். ஸ்நாந சௌசங்களே நன்ருக அனுஷ்டிக்கவேண்டும். தண்ட கமண்டலங்களே எப்போதும் கைகளில் வைத்துக்கொண்டே இருக்கவேண்டும். எப்போதும் ப்ரணவத்தை ஜபித்தவண்ண மிருக்கவேண்டும். ஓரே வேளே பிக்ஷான்னத்தைப் புஜிக்கவேண்டும். புகையும் உலக்கை சத்தமும் அடங்கிய பிறகு கிராமத்திற்குள் நுழைந்து சிஷ்டன் வீட்டில் பிக்ஷை என்று கூறி குனிந்ததலேயுடன் ஓர்பசுவைக்கறக்கும் காலம்வரை காத்திருக்கவேண்டும். அதுவரைபிக்ஷை போடாவிட்டால் வேருேர்வீடு செல்லவேண்டும். பிக்ஷான்னதைச்சூர்யனுக்குக்காட்டிவிட்டு காலலம்பிஆசமநம்செய்து கிழக்கு முகமாகஉட்கார்ந்து எட்டு கபளம் புஜிக்கவேண்டும். புஜித்தபின் ஆசமநம் செய்து பிரும்மனேயும் பரமசிவத்தையும் த்யாநம் செய்யவேண்டும். சொரைக்காயினலானபாத்ரம் மரப்பாத்தரம் மூங்கிலாலானது ஆகிய இவைகளிலொன்றையே ஸன்யாஸி ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆகாசமத்தியில் பரமசிவத்தைப் பிரணவத்தினல் த்யாநம் செய்ய வேண்டும். தநம் என்பது வெளியில் ஸஞ்சரிக்கும் தனிகன் பிராணனுகும். அதை ஸன்யாஸிக்களித்தவறும் வாங்கியயதியும் நரகம் செல்வர்.

ப்ராயச்சித்தம். ஒருவன் சாஸ்திரம் விதித்தகர்மாவைச் செய்யாதிருந்தாலும் நிஷித்தம் செய்த கர்மாவைச் செய்தாலும் ப்ராயச்சித்தம் செய்து கொள்ளவேண்மெ். இது பாபம் என்று அறியாமலே பல முறை ஓர் பாபத்தைச் செய்திருந்தாலும் தெரிந்திருந்தும் ஆபத்காலத்தில் ஓர் முறை ஓர் பாபத்தைச் செய்தாலும் அவனேப்ராயச் சித்தம் செய்துகொள்ளத்தக்கவனுவான். தெரிந்திருந்தும் பாபத்தைப் பலமுறை செய்பவன் ப்ராயச்சித்தம் செய்து கொண்

டால் அவனை விட்டுப் பாபம் அகலாது. வேதம் தர்ம சாஸ்த்ரம் முதலியவைகளை அறிந்து அக்நி ஹோத்ரம் செய்யும் ஒருவர் இந்த பாபத்திற்கு இந்தப்ராயச்சித்தம் செய்துகொள் எனக்கூறினால் போதும். அவர்கூறியதைப் பாபம் செய்தவன் அனுஷ்டித்தால் சுத்தனாவான். யாகம் செய்யாதவராயின் மூன்று பேருக்குக்குறையாமல் பண்டிதர்களை அழைத்துத்தான் செய்தபாபத்தைக்கூறி ப்ராயச்சித்தம் விதிக்கும்படி ப்ரார்த்திக்க வேண்டும். ப்ராமணனைக் கொல்வது, மத்யபாநம் செய்வது ஸ்வர்ணத்தைத் திருடுவது இப்பாபங்களைச் செய்தவருடன் சேர்ந்திருப்பது என்பவைகள் பஞ்சமஹாபாதகங்கள் எனப்படும். அறியாமல் செய்தப்ருஹ்மஹத்திபாபத்தை அகற்ற எவனைக்கொன்றானோ அவன் மண்டை ஓட்டைக் கையில் எடுத்துக் கொண்டுதான் செய்தபாபத்தை உறக்கச் சொல்லிக்கொண்டு ஒரேவேளை பிக்ஷை எடுத்துப் பனிரண்டு வருஷம் ஊர் ஊராகச் செல்ல வேண்டும். தெரிந்திருந்தே பிருஹ்மஹத்தி செய்தவன் நெருப்பில் அல்லது ஜலத்தில் விழுந்தோ மலைமீதிருந்து விழுந்தோ ஓர் பசுவை அல்லது ப்ராமணனைக்காப்பதற்காகவோ தன் உயிரை விட்டால்தான் அந்தப்பாபமகலும். தனது சொத்தை எல்லாவற்றையும் வேதமறிந்த வித்வானுக்களித்து விட்டு காசிக்குச் சென்று மூன்று நாள் உபவாஸமிருந்து கபாலமோசநதீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து கபாலியைப்பூஜித்தாலும் அந்தப் பாபமகலும்

கபால மோசநதீர்த்தம். ஒருஸமயம் மேருமலை மீது வீற்றிருக்கும் பிரும்மனை வணங்கி மஹர்ஷிகள் எல்லாசக்தியுமமைந்த மஹாபுருஷன்யார் என்று வினவினர். சதுர்முகன் கர்வங்கொண்டு தானே எல்லாசக்தியுமமைந்த உத்தம புருஷன் என்றார். உடனே அங்கு முக்கண்ணன் எழுந்தருளி பிரும்மாவின் வாக்கை மறுத்துத் தானே

அத்தகையமஹா புருஷன் என்ருர். அப்போதும் பிரும்மா அஹங்காரத்திஞல் சிவனது வாக்கை ஏற்காமல் தானே உயர்ந்தவர் என்ருர். ருக்யஜுஸ்ஸாமம் அதர்வம் என்ற நான்கு வேதங்களும் சரீரமெடுத்து வந்து பிரும்மனைப் பார்த்து சிவனே சிறந்தவர் என்றன. உமையோடு கூடிப் பித்தனைப்போல் திரியும் சிவனே சிறந்த பரம புருஷன் என்று பிரும்மா நகைத்தார். ப்ரணவம் சரீரியாகத் தோன்றி பிரும்மனே! ஸதாசிவத்தின் பெருமையையாரே அறிவர்? ஸச்சிதாநந்தஸ்வரூபமான பரமசிவன் லோகக்ஷேமத்தின் பொருட்டு உருவெடுத்து உமாதேவியுடன் லீலை செய்கிருர். அவரைவிட உயர்ந்த புருஷன் உலகிவில்லை என்றது. இதைக்கேட்ட பிறகும் அவரது கர்வம் அகலவில்லை. பரமசிவன் ஆகாசத்தில் ஜ்யோதிர் மண்டலத்தின் மத்தியிலுள்ள தனது திவ்விய சரீரத்தைக்காட்டிஞர். அப்பொழுதும் பிரும்மா கர்வத்தை விடாமல் சிவனைநோக்கி எனதருளால் உனக்கு இந்த மஹிமைவந்தது. ஆதலால் என்னைச்சரணமடைவாயாக என்றுகூறி தனது ஐந்தாம் முகத்திஞல்கோவத்தோடுபரமனைப்பார்த்தார். இவ்வளவு சாந்தமாகக் கூறியும் பிரும்மா உண்மையை உணராதிருந்ததால் பரமாத்மா காலபைரவனை அழைத்து பிரும்மனது கர்வத்தைஅகற்றும்படி கூறிஞர். பிரும்மா காலபைரவரோடு சண்டை செய்ய பைரவர் பிரும்மனது ஐந்தாவது சிரத்தை அறுத்தார். உடனே அவர் இறந்தார். பரமசிவன் அவரை எழுப்பப் பின்னர் சதுர்முகனுக்கு கர்வமகன்று உண்மைவிளங்கிற்று. தனது குற்றத்தை மன்னிக்கும்படி உமாமஹேச்வரனைப் பணிந்து துதித்தார். பரமனும் பிரும்மனது அக்ஞானத்தை அகற்றி அருள்புரிந்தார். கால பைரவரை அழைத்து அவர் பிரும்மாவின் தலையை அறுத்ததால் அவர் பின்னல் மிக பயங்கர ரூபத்துடன் வரும் பிருஹ்மஹத்தியைக்காட்டி

ஞர். அது தன்னைவிட்டு அகலும்படி அருள்புரிய வேண்டு மென்று பைரவர் வேண்டப்பரமசிவன், பிரும்மாவின் கபா லத்தைக் கையிலேந்தி பன்னிரண்டாண்டு பிக்ஷை எடுத் துப்ராயசித்தம் செய்துகொள்ளும்படி கட்டளையிட்டார்.

அங்ஙனமே அவர் மூவ்வுலகிலும் பிக்ஷாடநம் செய் யக் கிளம்பினர். ஆயிரக்கணக்கான பூதங்களும் பிருஹ் மஹத்தியும் அவரைத்தொடர்ந்து சென்றன. ஒவ்வொரு லோகமாகச்சென்று பைரவர் வைகுண்டத்திற்கு வந்தார். அங்குள்ள விஷ்வக்ஸேநன் எனும் த்வாரபாலகன் இவரது உருவத்தைக் கண்டு வியந்து அவரை உள்ளேவிடாமல் தடுத் தார். இருவருக்கும் மிகக் கடுமையாகப் போர் நடந்தது. முடிவில் பைரவர் சூலத்தினல் த்வாரபாலகனைக் குத்திக் கீழே தள்ளினர். இதை யறிந்த மகாவிஷ்ணு விரைவாக வெளியில்வந்து பைரவரை உள்ளே அழைத்துச் சென்றார். பைரவரது கையிலுள்ள கபாலத்தைப் பார்த்து தன் நெற்றி யிலிருந்து ஓர் நரம்பின் வழியாக அதில் தனது ரத்தத்தை விட்டு இதேயான் உமக்களிக்கும் பிக்ஷை என்றார். அது ஆயிரம் ஆண்டு தாரையாக விழுந்தும் கபாலம் நிறம்பாதது கண்டு விஷ்ணு பயந்து பிருஹ்மஹத்தியைப்பார்த்து பைர வரை விட்டகலும்படி கூறினர். அது அவர் சொற்படி விலகாததைக்கண்டு பைரவரைக் காசிக்குச் செல்லும்படி கட்டளையிட்டார். அவரும் கணங்களுடன் கிளம்பி காசி நகரத்தில்நுழைந்த உடன் பிரும்மஹத்தி பயந்து பாதாளஞ் சென்றது. பைரவர் பிரும்மனது கபாலத்தைக் காசியில் ப்ரதிஷ்டை செய்து இது இங்கு ஜீவனுடனிருந்து ஸ்நானம் செய்வோரதுபாபத்தை அகற்றட்டு மென்று ஆசீர்வதித் தார். அன்று முதல் அதற்குக் கபாலவிமோசநதீர்த்தம் எனப் பெயர் வழங்குகிறது.

ஸுராபனம் செய்தவன் ஸுரையைப் பழுக்கக் காய்ச்சி அதைக் குடித்து இறந்தால் அந்த பாபம் அகலும். கோமூத்ரம் பால் நெய் ஜலம் இவைகளில் ஒன்றைக் காய்ச்

யைக் குடித்து இறந்தாலும் ப்ரஹ்மஹத்திக்குக் கூறிய ப்ராயச்சித்தத்தை அநுஷ்டித்தாலும் ஸுராபாநத்தால் வந்த பாபம் நீங்கும். ஸுவர்ணத்தைத் திருடியவன் அரசனிடம் ஓர் உலக்கையுடன் சென்று தான் செய்தபாபத்தைக் கூறி தனக்குச்சிக்ஷை விதிக்கும்படி கூற வேண்டும். அரசன் அந்த உலக்கையால் இவனை அடிக்கவேண்டும். அச்சமயம் இவன் இறந்தாலும் பிழைத்தாலும் அந்த பாபம் நீங்கி விடும். இவனை அரசன் அடிக்காவிடில் அந்த பாபம் அரசனைச் சாறும். தனது எடை அளவுள்ள ஸ்வர்ணத்தை ஸத் ப்ராமணர்களுக்குத் தாநம்செய்து ஓராண்டு ப்ரம்மசர்ய நியமத்துடன் க்ருச்ர விருதமநுஷ்டித்து அச்வமேதயாக அவபிருத்ததில் ஸ்நாநம் செய்தால் ஸ்வர்ணத்தைத் திருடிய பாபமகலும். குருஸ்த்ரீகமநம் செய்தவன் இரும்பினுல் ஓர் ஸ்தரீ பிம்பம்செய்து அதைப்பழுக்க அக்நியில் காய்ச்சி அதை ஆலிங்கனம் செய்துகொண்டு இறந்தால் அந்த பாபமகலும். அல்லது தனது சிச்னத்தை விருஷணங்களுடன் அறுத்துக் கையில் எடுத்துக்கொண்டு தெற்குதிக்கை நாடிச் சென்று எங்கு விழுந்து இறக்கிருனே அப்போது சுத்தனுவான். பிரும்மஹத்தி ஸுராபாநம் ஸ்வர்ணஸ்தேயம் குருஸ்த்ரீகமநம் ஆகிய இவைகளில் எந்தபாபத்தைச் செய்தவனுடனும் ஓராண்டு சேர்ந்திருந்தால் சேர்ந்தவனும் ஓர் மஹாபாதகியாவான். யாருடன் சேருகிருனே அவனுக்கு என்ன ப்ராயசித்தம் விதித்துளதோ அதைச் செய்தால் அவனுடன் சேர்ந்ததாலுண்டான பாபம் அகலும். பெண் தங்கை புத்ரனது மனைவி முதலியவர்களிடம் ஸங்கமம் செய்தவன் ஜ்வலித்துக் கொண்டிருக்கும் அக்நியில் ப்ரவேசித்து ப்ராயசித்தம் செய்து கொள்ள வேண்டும். சிற்றன்னை மாமனது மனைவி தந்தையின் ஸஹோதரி ஸஹோதரனது மனைவி ஆகியவர்களுடன் ஸங்கமம் செய்தவன் கிருச்ரம் அதிகிருச்ரம் சாந்த்ராயணம் முதலியவைகளைச் செய்து பாபத்தை அகற்ற வேண்டும். ப்ராணிகளை வதம் செய்தாலும் உள்ளிப்பூண்டு வெங்காயம் முதலியவைகளைப் புஜித்தாலும் சாந்த்ராயணம் முதலிய விருதங்களை அநுஷ்-

டிக்கவேண்டும். சூத்திரன் புஜித்து மிகுந்த அன்னத்தை உட்கொண்டால் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும். சண்டாள அன்னத்தைப் புஜித்தால் ஓராண்டு க்ருச்ரம் அனுஷ்டித்துப் பின்னர் புநருப நயநம் செய்து கொள்ள வேண்டும். சண்டாளனது கிணற்றில் முழுகினாலும் அவன் கொடுத்த ஜலத்தைக் குடித்தாலும் மூன்று நாள் உபவாஸ மிருந்து பஞ்சகவ்யத்தை உட்கொண்டால் பாபமகலும். ஒரு வேளை ஸந்த்யாவந்தநம் செய்யாமலிருந்து விட்டால் அன்று உபவாஸ மிருந்து அதற்கு ஏற்பட்ட கௌண காலத்தில் அதைச் செய்யவேண்டும். நித்யகர்மங்களை ஒரு நாள் விட்டவன் சாந்த்ராயணம் செய்யவேண்டும். அல்லது ஒரு கோதானம் செய்தால் அந்த பாபமகலும். ஒட்டையின் மேலும் கழுதையின் மேலும் ஏறி சென்றவன் மூன்று நாள் உபவாஸமிருக்கவேண்டும். கறுப்பு அல்லது சிவப்பு வர்ணமுள்ள வஸ்த்ரத்தைத் தரித்தால் ஒரு நாள் பூர்ணமாக உபவாஸமிருக்கவேண்டும். வேதம் தர்ம சாஸ்த்ரம் புராணம் இவைகளைச் சண்டாளனுக்குக் கூறினாலும் தூக்குப் போட்டுக்கொண்டு இறந்தவனது உடலைத் தொட்டாலும் சாந்த்ராயணவிருதத்தை அனுஷ்டிக்கவேண்டும். எண்ணெ தேய்த்துக் கொண்டிருக்கும்போது வாந்தி எடுத்தாலும் ஜலமல விஸர்ஜநம் செய்தாலும் ஒருநாள் உபவாஸமிருக்கவேண்டும். வபநம் செய்து கொண்டதிநத்திலும் ஸ்த்ரீ ஸங்கமம் செய்த திநத்திலும் உபவாஸமிருந்தால்தான் சுத்தி உண்டாகும். சண்டாளனது நிழலை மிதித்தால் ஸ்நாநம் செய்து நெய்யை உட்கொள்ளவேண்டும். சிறிய பாபங்கள் புண்ய க்ஷேத்ர யாத்ரையால் நீங்கும். அமாவாஸ்யையில் பிராமணர்களையும் கிருஷ்ணாஷ்டமி அல்லது கிருஷ்ணசதுர்த்தசியில் பரமசிவனையும் ஸப்தமியில் சூர்யனையும் பரணி சதுர்த்தி ஸ்திரவாரம் ஆகிய இவைகளில் யமனையும் பூஜித்தால் சிறிய பாபங்களகலும்.

பெண்களுக்கு ப்ராயசித்தம். தனது கணவனைத் தெய்வமாக நினைத்துப் பணிவிடை செய்யும் பதிவ்ரதை

க்குப் பாபங்கிடையாது. அவள் ஏதாவது மஹாபாதகங்களைச் செய்தால் தன் கணவனுடன் உடன் கட்டை ஏறினால் அவள் சுத்தமாவதுடன் அவளது பதிபிரும்மஹத்தி செய்திருந்தாலும் அவன் பாபமுமகலும். பதிவ்ரதையை எவரும் அவமதிக்க முடியாது. ஸ்ரீ ராமனிடத்தில் பக்தி கொண்டு பணிவிடை செய்து வந்த ஸ்ரீ ஸீதாதேவியை அவமதிக்கக் கருதிய ராவணன் அழிந்தான். தன்னை ராவணன் பெண்டாடக்கருதுகிறுன் என்றறிந்தவுடன் ஸீதாதேவி ஸ்ரீ ராகவனை வணங்கி அக்னி பகவானை எட்டு சுலோகங்களால் துதித்தாள். ஆவஸத்யமெனும் அக்னி ஆயதநத்திலிருந்து திவ்விய சரீரம் பெற்றெழுந்து தேவ மாயையால் ஓர் ஸீதாதேவியைப் படைத்து ராமனுடனனுப்பி ஸீதாதேவியைத் தன் உலகிற்கழைத்துச் சென்றுர். ராவணவதமான பிறகு ஸீதாதேவியை ஏற்றுக் கொள்ளலாமா கூடாதா என்ற சங்கை ராமருக்கு உண்டாயிற்று. உடனே ஸீதை அக்நிப்பிரவேசம் செய்தாள். அக்நி நிஜ ஸீதையை ராமனிடம் அளித்து நடந்த கதையைக் கூறினுர். ஸ்த்ரீகளது ஸகல பாபங்களும் அக்நிப்பிரவேசம் செய்தால் அகலும். தன் கணவனிறந்தபின் அவனுடன் உடன்கட்டை ஏறுவது என்ற இதே அவர்களுக்குக் குரியப் பிராயசித்தமாகும்.

தீர்த்த மஹிமையும் மங்கண சரிதமும். புண்ய தீர்த்தங்களில் ஸ்நாநம் தாநம் பித்ரு தர்ப்பணம் ஜபம் ஹோமம் முதலியவைகளைச் செய்பவர் தன் குலத்தில் பிறந்து இறந்த ஏழுபேரை நரகத்திலிருந்து கரை ஏற்றுவார். நமது வம்சத்தில் பிறந்த ஓர் புத்ரன் கயைக்குச் சென்று பிண்டமளிக்க மாட்டானு? என்று பித்ருக்கள் பிராத்திக்கின்றனர். ப்ரயாகை த்ர்யம்பகம் ஸோமேச்வரம் விஜயம் மந்தாவிரஜா கோகர்ணம், குப்ஜாம்ரம், புஷ்கரம், ஸப்தஸாரஸ்வதம் என்ற உத்தம தீர்த்தங்களில் ஸ்நாநம் செய்வோரது ஸகல பாபங்களுமகலும். ஆங்கு ப்ரத்யக்ஷமாக மூர்த்தி கரித்திருக்கும் பகவான் பக்தருக்கு எண்ணிறந்த அநுக்கிரஹம் செய்கிறுர்.

ஸப்தஸாரஸ்வதத்தில் மங்கணர் என்ற முனிவர் ஸ்நாநம் ஜபம் ஆராதநம் முதலியவைகளைச் செய்துவந்தார். ஒரு நாள் அவர் பகவானை ப்ரத்யக்ஷமாக தர்சித்துத் தனக்கு இந்தபாக்யம் கிட்டியது என்ற கர்வத்தால் ஆநந்தத்தாண்டவமாடினார். இதைக்கண்ட பரம சிவன் ஓர் பிராமண வேஷந்தரித்துத் தன் உடலைக்கீறி வெண்மைநிறம் வாய்ந்த வாஸனை விபூதியை மலைபோல் காட்டி மங்கணரே! என் தவத்தின் வலிமையைப்பாரும் என்று கூறி ஆயிரக்கணக்கான முகங்களையும் கைகால்களையும் எடுத்துக்கொண்டு அவரைப்போலவே தாண்டவமாடினார். அவராருகே அத்புத உருவத்துடன் ஓர் மாதரசி தாண்டவமாடினாள். அவ்விருவரையும் கண்டவுடன் மங்கணர் மதிமயங்கி அவர் காலில் விழுந்து துதித்தார். பரமாத்மா நிஜ ரூபத்துடன் அவர் எதிரே தோன்றி தான் பரமசிவனென்றும் தன்னருகில் தாண்டவமாடியவள் தனது மாயை என்றும் மாயையால் மோஹமடைந்த பலர் தன்னை நன்கு உணராமல் சிவன் வேறு விஷ்ணுவேறு என்று ஏமாந்துபோகின்றனர் என்றும் கூறி மறைந்தார்.

ஒரு ஸமயம் கோடி ரிஷிகள் ஒன்றுகச் சேர்ந்து சிவனை நான் முன்னே தரிசிப்பேன் என்று போட்டி போட்டுக்கொண்டு தவம் செய்தார்கள். அவர்களது தவத்திற்கிணங்கி ருத்ரன் கோடி வடிவமெடுத்துக்கொண்டு வந்து எல்லோருக்கும் ஏககாலத்தில் தர்சநமளித்தார். அந்த இடத்திற்கு அன்று முதல் ருத்ரகோடி என்று பெயர் வழங்கிற்று. மதுவநம் பத்மநகரீ காலஞ்ஜரம் என்ற க்ஷேத்திரங்களும் மிக சிறந்தவைகள்.

**ச்வேதராஜ சரிதம்.** கிருத யுகத்தில் ச்வேதன் என்றோர் ராஜனிருந்தான். அவன் காலஞ்ஜர மெனும் க்ஷேத்ரத்திற்குச் சென்று ருத்ர பாராயணம் செய்து பக்தியுடன் பரமசிவத்தைத் துதித்துவந்தான். ஒருநாள் யமதர்மராஜன் கோர வேஷத்துடன் ச்வேதனை யமலோகத்திற் கழைத்துச்செல்ல வந்தான். அவனைக்கண்டு பயந்த அரசன் இரு

கரங்களாலும் சிவலிங்கத்தை இறுகக்கட்டிக்கொண்டு ருத்ராஜபம் செய்தான். யமன் அரசனை நோக்கி வா இங்கே என்றழைக்க ச்வேதன் சிவபூஜைசெய்யும் என்னை விட்டுவிடு, ஏனையோரை அழைத்துச்செல் என்றான். அந்தகன் சிவபூஜை செய்பவனானால் என்ன? மற்றவனானால் என்ன? எனக்கு வசமாகாதவன் உலகிலுண்டோ என்று கூறி லிங்கத்துடன் ச்வேதன் மேல் பாசக்கயிற்றை வீசினான். முன்னிலும் பன்மடங்கு பயபக்தியுடன் அரசன்ருத்ரபாராயணம் செய்ய, ஆகாயத்தில் ஓர் அழகிய ஜ்யோதிஸ்கிளம்பிற்று. அதனிடையே உமாதேவியோடு பரமசிவன் பக்தனைக்காக்க விரைவாக வந்தார். அவரைக் கவனியாமல் யமன் ச்வேதனைக்கொண்டு செல்லமுயற்சித்தான். இதைக் கண்டு கடுஞ்சினம் கொண்ட கைலாஸநாதன் யமனைக் காலால் உதைத்துக் கொன்றுச்வேதனைத் தனது கணத்திற்கு அதிபதியாகச் செய்து சென்றார். அச்சமயம் யமதர்மராஜன் இறந்ததைக்கண்டு பயந்து சதுர் முகன் கைலாஸநாதனைப் பணிந்து, தேவதேவ! சிவபக்தர்களுக்கு அபசாரம் செய்த காலன் அதற்கேற்ற சிக்ஷைபெற்றான். இனி உலகிவேலை நடைபெறவேண்டியிருப்பதால் அவன் பிழைத்தெழுந்திருக்கும்படி அருள் புரிய வேண்டுமென்று ப்ராத்தித்தார். கருணாமூர்த்தியான உமாபதியும் அங்ஙனமே யமனை எழுப்பி இருவருக்கும் விடை கொடுத்தனுப்பினார். அந்த ச்வேதன் முத்திபெற்ற இடமே காலஞ்ஜரமெனப்படும்.

புண்யவனங்களும் தீர்த்தங்களும். கேதாரம் ப்லக்ஷாவதரணம், மகதாரண்யம், கநகலம், ஸ்ரீபர்வதம், கோதாவரீ, காவேரீ, ஸ்வாமிதீர்த்தம் தாம்ரபர்ணீ, சந்த்ரதீர்த்தம், வ்ருஷதீர்த்தம், தசாச்வமேததீர்த்தம், புண்டரீகம், ப்லக்ஷப்ரஸ்ரவநம், வ்யாஸதீர்த்தம், கந்தகாலீ, குபேர துங்கம், காலஸர்பி, தசார்ண, குருஜாங்கலம், வைதரணி, ஸ்வர்ணவேதி, தர்மபிருஷ்டம், கௌசிகம், க்ருத்ரவநம், முண்டப்ருஷ்டம், கநகநந்தா, மாநஸஸரஸ் உத்தரமாநஸம் புஷ்கரிணீ ஸரஷம் நா, பதர்யாச்ரமம், தேவதாருவநம், முதலிய புண்ய நதிகளி

லும் வநங்களிலுமுள்ள தீர்த்தங்களிலும் ஸ்நாநம் செய்து அவரவர் சக்திக்கேற்றபடி தாநம் செய்யவேண்டும் பித்ருக்களை நாடி ச்ராத்தம் செய்து ஆங்குள்ள ஆலயங்களுக்குச் சென்று ஸர்வேச்வரனை அர்ச்சிக்கவேண்டும். நியமத்துடன் க்ஷேத்திரோபவாஸமிருந்து ஸ்நாநம் தாநம் ச்ராத்தம் தேவ பூஜை ஆகிய இவைகளைச் செய்தால் தான் தீர்தயாத்ரையின் பலனைப் பெறலாம். சில தீர்த்தங்கள் நமது முற்பிறவியில் நடந்த விஷயங்களை நினைவூட்டும் சக்தி வாய்ந்தவைகளாக இருக்கின்றன. எவனது வாக்கும் மநமும் சுத்தமாக இருக்கின்றனவோ? எவன் தீர்த்தக் கரைகளில் தாநம் வாங்காதவனே எவன் இந்திரியங்களை ஜபித்தவனே அவனுக்கே தீர்த்தயாத்திரையால் பலனுண்டாகும். இதற்கு மாறாக நடந்தவர் அப்பயனைப் பெறார். தேவதாரு வநத்தில் பரமசிவத்தின் பூர்ண ஸாந்நித்ய மிருப்பதால் ஒவ்வொருவரும் தவறாமல் அங்கு சென்று கைலாஸ நாதனைப் பூஜித்துச் சிவகணமாகலாம்.

தாருகாவந ரிஷிகள்:தேவதாரு என்றமரங்கள் நிறைந்த ஓர் புண்யவநத்தைத் தேவதாருவநம் தாருகாவநம் தாருவநம் என்றழைப்பார்கள். அங்கு கர்ம மார்க்கத்தில் பற்றுகொண்ட பலகோடி மஹரிஷிகள் யாகம் செய்துக் கொண்டிருந்தனர். பக்திமார்க்கத்திலும் ஞாநமார்க்கத்திலும் அவர்களுக்கு அன்பு உண்டாகும்படி செய்து மோக்ஷமளிக்கவேண்டுமென்பது கைலாஸ நாதனது கருத்து. அதற்கேற்றபடி பகவான் மிகச்சுந்தர வடிவனாகத் தோன்றினார். இருபது வயது இளைஞனாக உருவெடுத்த உமாபதியின் அழகைக் கண்டு காமன் வெட்கமடைந்தான். அவ்வழகனுக்கேற்ற ஸௌந்தரியாக வரும்படி மஹாவிஷ்ணுவுக்கு மாதேவன் கட்டளையிட்டார். மன்மதனை மகனாகப் பெற்றமாலின் அழகைப்பற்றி கூறவும் வேண்டுமோ? த்ரிலோக ஸௌந்தரியான மால் மனைவியுடன் ஸர்வலோக ஸௌந்தரனான சந்த்ரசூடன் தாருகாவநத்திலுள்ள மஹர்ஷிகளின் ஆச்ரமங்களில் பிக்ஷை எடுக்கச்சென்றார். இவர்களைக்கண்டு மோஹிக்காதவரில்லை. பரம சிவத்தினருகே பல்லாயிரம் யுவதிகளும் விஷ்ணுவி

னருகே பல யுவாக்களும் புடைசூழ்ந்தனர். இதைக் கண்ட மஹர்ஷிகளுக்கு மட்டில்லாச்சின முண்டாயிற்று. அழகிய அவ்வபூர்வ தம்பதிகள் அழியும் வண்ணம் பல சாபந் தந்த னர். அவர்களது சாபம் சாம்பலில் செய்த ஹோமம்போல் பயனற்றதாயிற்று. பின்னர் அவமான மடைந்த ரிஷிகள் "ஐயா நீ யார்? ஏன் இடுப்பில் வஸ்த்ரமில்லாமலிருக்கிறாய்? அவதூதர்போல் வேஷம்போட்டு அருகில் ஓர் அழகிய மாதை அழைத்து வருகிறாயே? இஃதென்ன விபரீதசெயல்? என்று வினவினர். பரமசிவன் தான் ஓர் யோகி என்றும் தவம் செய்ய இங்கு வந்ததாகவும் கூறினார். ஆனால் இந்த மனைவியை விட்டுவிடுங்கள் என்று ரிஷிகள் கூற நீங்கள் மட்டிலும் மனைவிகளுடனிருக்க என்னை மாத்ரம் ஏன் மனைவியை விடச் சொல்லுகிறீர்கள் என்றார் சிவன்.

அவள் வியபிசாரி. எங்கள் மனைவிகள் பதிவிரதைகள் என்று முனிவர் கூற பகவான் நீங்கள் கூறுவது பொய். இவள் என்னை விட்டு ஒரு க்ஷணமேனும் பிறிந்திருக்கமாட்டாள். உண்மையை உணராமல் கூறுகிறீர்கள் என்று சொல்லி வஸிஷ்டரது ஆச்ரமத்திற்குச் சென்றார். இதற்குள் மஹரிஷிகள் கற்களாலும் தடிகளாலும் அவர்களை அடித்து அவர்கள் சரீரத்தில் வ்ரணத்தை உண்டு பண்ணினார்கள். அருந்ததி அவ்விருந்தினரை வரவேற்றுப் பூஜித்து அந்த வ்ரணங்களுக்கு மருந்திட்டு தாங்கள் யாரென வினவினாள். பரமசிவன் தனது ஸ்வரூபத்தை விளக்கிக் கூறி வேறிடம் சென்றார். தாருகாவந முனிவர் அவரைச் சூழ்ந்து கொண்டு வெட்கமில்லாமல் லிங்கத்தைக் காட்டுகிறாய். அதை அறுத்துவிடு என்றனர். பரமசிவன் அவர்களை நோக்கி அதன் மேல் உங்களுக்கு வெறுப்பாயின் அங்ஙனமே ஆகுக என்று மறைந்தார். உடனே பூமி அசைந்தது. சூர்யனது ஒளி மழுங்கிற்று. பர்வதங்கள் அசைந்தன. கடல் தத்தளித்தது. இதைக்கண்டு முநிவர் அஞ்சினர். அநஸூயாதேவி தன் பதியான அத்ரியினிடம் தானொரு கனவு கண்டதாகவும் அதில் பிக்ஷாண்டியாக வந்தவர் பரமசிவன் என்றும் அவாருகே வந்தவர் வைகுண்ட நாதனென்

றும் அறிந்ததாகக் கூறினுள். இதைக்கேட்ட எல்லோரும் திடுக்கிட்டனர். நம்மிடம் வந்த மாதேவனைப் பூஜிக்காமல் விட்டோமே! அன்றியும் அவருக்குப் பெருந்தீங்கை விளை வித்தோமே என்று வருந்தினர். பிரும்மனிடஞ் சென்று நடந்ததைக் கூறி இனியாது செய்வதென்று கேட்டனர். சதுர்முகன் அவர்களது அக்ஞானத்தைக் கேட்டு வருந்தி பரமசிவனது லிங்கத்தைப்போல் ப்ரதிமை செய்து மனைவி களுடன் சதருத்ரீயத்தைக்கூறி பூஜை செய்யுங்கள். சில காலம் சென்றபின் ஸதாசிவமூர்த்தியைத் தர்சிக்கலாமென் ருர். பிரும்மாவைப் பணிந்து அவரிடம் விடைபெற்று மஹரிஷிகள் தாருகாவநஞ்சென்றனர். அன்று முதல் ஆஹார மில்லாமல் ஸ்ரீருத்ரமந்திரத்தைக் கூறி லிங்கத்தில் பரமசிவனை ஆராதித்தனர். முனிவர்களது பக்தியைக் கண்டு மகிழ்ந்த மஹாதேவன் உமாதேவியுடன் முன்போலவே பிக்ஷை எடுக்கும் வேஷத்துடன் தோன்றினுர். முனிவர்கள் ஏமாராமல் அவரைக்கண்டவுடன் எழுந்து நின்று பன் முறை பணிந்துப் போற்றினர். உண்மையான பகவத்ஸ்வ ரூபத்தைக் காட்ட வேண்டுமென்று ப்ரார்த்தித்தனர். அத ற்கிணங்கி பகவானும் தனது திவ்ய மங்கள ஸ்வரூபத் தைக் காட்டி பக்திமார்க்கத்தை உபதேசித்து மறைந்தார்.

ஸ்ரீ நந்திகேச சரிதம்: பிறகு ஸூதர், நர்மதை, கபிலா, விசல்யா, ஜாலேச்வரம், காவேரீ, பத்ரேச்வரம், விமலேச் வரம், அங்கார கேச்வரம், கேதாரம் புஷ்கரிணீ, பாணதீர்த் தம், ரிஷிதீர்த்தம், பிரம்மேச்வரம், பிங்களேச்வரம், பீமேச் வரம், தீப்தேச்வரம், சுக்லதீர்த்தம், நைமிஷாரண்யம் முத லியவைகளின் பெருமையை விஸ்தாரமாகக் கூறி நைமிஷத் தில் அவதரித்த நந்தியின் சரிதத்தைக்கூறினுர். பரமபவித்ர மான நைமிசாரண்யத்தில் சிலாதர் என்றொர் மஹர்ஷி இருந் தார். அவர் புத்ரபாக்யமில்லாததால் பரம சிவத்தை நாடி ஆயிரமாண்டு தவம் செய்தார். கருணுமூர்த்தியான கைலாஸ நாதன் அவர் எதிரில் தோன்றி யாதுவரம் வேண்டும் என் ருர். முனிவர் பகவானைப் பணிந்து துதித்து அவரது திவ்ய

ரூபத்தைக்கண்டு ஆச்சரியமடைந்தார். ஸ்வாமின்! தங்களுக்கு ஸமமாக இருப்பவனும் தாய்வயிற்றில் பிறவாதவனும் மரணமில்லாதவனுமான ஓர் புதல்வனைத் தாங்கள் தந்தருளவேண்டும் என்றார். அங்ஙனமே ஆகுக என்று கூறி பகவான்மறைந்தார். பின்னர் சிலாதமுநி பூமியைஉழுதார். அங்கிருந்து மிகஅழகான ஓர் ஆண்குழந்தை உண்டாயிற்று. அது முனிவரைப்பாத்து அப்பா அப்பா என்று அன்புடன் அழைக்க சிலாதர் சிவனருளால் பெற்ற சிசுவைக் கையிலேந்தி மார்போடணைத்து மஹர்ஷிகளிடம் காண்பித்தார். எல்லோருமிதைத்தழுவி ஆசீர்வதித்து ஜாதகர்மம் செய்து தந்தையைச்சந்தோஷப் படுத்தியதால் நந்தி என்று நாமஞ்சூட்டினார். இளமைப் பருவத்திலே எல்லா கல்விகளையுங் கற்று உபநயநமானபின் வேதங்களையும் நந்தி நன்கு கற்றுணர்ந்தார். இயற்கையிலேயே அவருக்குச்சிவபக்தி உண்டாயிற்று. கைலாஸநாதனருளைப் பெற்று காலனை வெல்ல வேண்டுமெனக் கருதினார். ஸமுத்ரதீரஞ்சென்று ஐம்புலன்களை அடக்கி சித்தத்தில் சிவனை நிறுத்தி கோடி முறை ஸ்ரீ ருத்ரத்தை ஜபித்தார்: உமாபதி அவனெதிரிற் றோன்றி யாது வரம் வேண்டுமென வினவினார். மஹேசனைக் கண்டு களித்துப் பணிந்து துதித்து மற்றுமோர்முறை கோடி ருத்ரஜபம் செய்ய ஆயுளும் ஆற்றலும் வேண்டும் என்றார். அதையளித்து அவர் சென்றதும் முன் போலவே நந்தி கோடி முறை ருத்ரஜபம் செய்தார். மறுபடியும் பகவான் அவர் எதிரில் தோன்றி என்ன வரம் வேண்டுமென்றார். மூன்றாவது கோடிஜபம் செய்ய அருளை வேண்டினார். அதையுந்தந்து சிவன் மறைந்தார். மூன்றாவது கோடிஜபம் பூர்த்தியானபின் வழக்கம்போல் ஸர்வேசன் நந்தி முன்னிலையில் வந்து வரத்தைக்கேள் என்றார். நந்தி நான்காவது முறை கோடி ஜபத்திற்கு ஆயுளை விரும்ப, பக்த! போதும் ஜபத்தை நிறுத்து. இனி உனக்குப் பிறப்பும் இறப்பும் கிடையாது. நீ எனக்குப் புதல்வனாய்விட்டாய். நீ பூஜை செய்த லிங்கத்திற்கு ஜப்யேச லிங்கம் என பெயர் வழங்கும். உன்னைவிட பிரியமான பக்தன் நமக்கு வேறொருவருமில்லை. நமது

அருகிலிருந்து ஸகல கார்யங்களையும் நீ கவனித்துவா என்று கூறி மருத்துகளின் கன்யகையான ஸ்வயமா என்பவளை நந்திக்கு மணம் செய்வித்து கணங்கள் கொண்டு வந்த கலச ஜலத்தினால் நந்தியைத் தன் கணங்களுக்குப் பதியாக அபி ஷேகஞ் செய்து பார்வதியுடன் பரமாத்மா கைலாஸஞ் சென் றார்.

இதைக்கேட்ட முநிவர்கள் கூர்ம ரூபியான பகவானை வணங்கி ப்ரளயத்தைப் பற்றி கூறும்படி வேண்டினர். ப்ரளயம் நித்யம் நைமித்திகம் ப்ராகிருதம் ஆத்யந்திகம் என நால்வகைப்படும். ப்ரதிதிநம் ஜீவராசிகள் இரவில் உறங்கு வது நித்யப்ரளயமாம். அதற்கு ப்ரதிஸஞ்சரம் என்றோர் பெயருண்டு. ஓர் கல்பத்திற்கோர்முறை உலகம் அழிவது நைமித்திக ப்ரளய மெனப்படும். பிரும்மாவிற்கு இரண்டு பரார்த்தம் சென்றபின் உலகமழிவது ப்ராகிருத ப்ரளய மாம். வேதாந்த அறிவால் ஆத்ம ஸாக்ஷாத்காரமான பின் ப்ரபஞ்ச காரணமான அவித்தையுடன் உலகமழிவது ஆத் யந்திக ப்ரளயமாம். எக்காலத்திலும் அழிவற்றது ஆத்ம ஸ்வ ரூபம். அதைப்பெற முயற்சி செய்யுங்கள் என்று கூறி கூர்மபகவான் மௌனமாயிருந்தார். மஹரிஷிகள் பகவா னைப் பணிந்து போற்றிச் சென்றனர்.

ஸகல வேதங்களின் ஸாரமான இப்புராணத்தை நாஸ்திகரிடம் சொல்லக்கூடாது. மோக்ஷத்தை விரும்பு வோர் இதைப் பக்தியுடன் படிக்கவேண்டும். இதைப் படிப்பவரது பாபமகலும். பிரும்மலோகஞ் செல்வர். பர்வ காலத்தில் இதைப்படிக்கவேண்டும் என்று கூறியஸூதரை மஹரிஷிகள் பணிந்து போற்றினர்.

ஸ்ரீ வேதவ்யாஸாயநம:

ஸ்ரீ கூர்ம புராணம் முற்றிற்று.

GODLAND & CO., PRINTERS, MADRAS.

## 18 புராணங்கள் 4 லக்ஷம் சுலோகங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ப்ராஹ்ம புராணம் | | 10000 | |
| 2 | பாத்ம | ,, | 55000 | |
| 3 | வைஷ்ணவ | ,, | 23000 | |
| 4 | சைவ | ,, | 24000 | |
| 5 | பாகவத | ,, | 23000 | |
| 6 | பவிஷ்ய | ,, | 14500 | |
| 7 | நாரதீய | ,, | 25000 | |
| 8 | மார்க்கண்டேய | ,, | 9000 | |
| 9 | ஆக்நேய | ,, | 15400 | |
| 10 | ப்ரஹ்மவைவர்த்த | | 18000 | |
| 11 | லிங்க | ,, | 11000 | |
| 12 | வராஹ | ,, | 24000 | |
| 13 | ஸ்காந்த | ,, | 81100 | |
| 14 | வாமந | ,, | 10000 | |
| 15 | கூர்ம | ,, | 17000 | |
| 16 | மத்ஸ்ய | ,, | 14000 | |
| 17 | காருட | ,, | 19000 | |
| 18 | (வாயு) பிருஹ்மாண்ட | | 12000 | |

உப புராணம் 18

| | | |
|---|---|---|
| 1 | ஸநத்குமார புரா | |
| 2 | நாரஸிம்ஹ | ,, |
| 3 | ஸ்காந்த | ,, |
| 4 | சிவதர்ம | ,, |
| 5 | நந்தி | ,, |
| 6 | தூர்வாஸ | ,, |
| 7 | நாரத | ,, |
| 8 | காபில | ,, |
| 9 | மாநவ | ,, |
| 10 | ஔசநஸ | ,, |
| 11 | பிரும்மாண்ட | ,, |
| 12 | வாருண | ,, |
| 13 | காலீ | ,, |
| 14 | மாஹேச்வர | ,, |
| 15 | ஸாம்ப | ,, |
| 16 | ஸௌர | ,, |
| 17 | பாராசர்ய | ,, |
| 18 | மாரீச | ,, |

1 கணேச 2 மௌத்கல 3 தேவிபுராண 4 கல்கி முதலிய மற்றும் 18 உப புராணங்களுண்டு.

6 தாமஸ புராணங்கள்: மத்ஸ்ய, கூர்ம, லிங்க, சைவ, ஸ்காந்த, ஆக்நேயங்கள். 6 ராஜஸ புராணங்கள்: ப்ருஹ்மாண்ட, ப்ருஹ்மவைவர்த்த, மார்க்கண்டேய, பவிஷ்ய, வாமந, ப்ரஹ்ம புராணங்கள். 6 ஸாத்விக புராணங்கள்: வைஷ்ணவ, நாரதீய, பாகவத, காருட, பாத்ம வராஹங்கள். 10 சைவ புராணங்கள்: சைவ, பவிஷ்ய, மார்க்கண்டேய, லிங்க, வாராஹ, ஸ்காந்த, மாத்ஸ்ய, கூர்ம வாமந, பிரஹ்மாண்டங்கள். 4 வைஷ்ணவ புராணங்கள்: விஷ்ணு, பாகவத, நாரத, காருடங்கள். 2 ப்ரஹ்ம புராணங்கள்: பாத்மம், ப்ராஹ்மம். 1 அக்நி புராணம்: ஆக்நேயம். 1 ஸூர்ய புராணம்: ப்ரஹ்மவைவர்த்தம்.